www.padippakam.com


# தொழிலாளர் பாதை

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிஸ்ட் தமிழ் பத்திரிகை

மாத இதழ் 493 | 1999 ஜனவரி | ரூபா 8.00


உள்ளே


- சமாதான கூட்டின் கூட்டத்தின் மீது பாசிஸ்டுகள் பாய்ச்சல் ...... 2
- தோழர்.கீர்த்தி பாலசூரியவின் 11வது நினைவு தினம் ................. 5
- கீர்த்தி பாலசூரியவும் அனைத்துலக வாதத்துக்கான போராட்டமும் ... 6
- சில்லி சர்வாதிகாரி பினோச்சேயை கைது செய்வதற்கு காஸ்ட்ரோ எதிர்ப்புக்கட்சிக்கு ............................ 7


**விடுதலைப் புலிகளின் தலைவர் சிறீலங்கா அரசாங்கத்துடன் புதிய பேச்சுவார்த்தைக்கு அழைப்பு**

அனைத்து லக பாது காப்பு பிரச்சாரத்தின் வெற்றி தமிழ் மக்கள் போராட்டத்தைப் பலப்படுத்து கின்றது

# சோ.ச.க.வும் சிறீலங்கா–ஈழம் சோசலிச ஐக்கிய அரசுகளுக்கான போராட்டமும்

**சோ.ச.க. அங்கத்தவர்களை விடுதலைப் புலிகள் விடுதலை செய்தது பற்றிய நா.அ.அ.கு. அறிக்கை - டிசம்பர் 1, 1998**

தமிழீழ விடுதலைப் புலிகளினால் கைது செய்து வைக்கப்பட்டிருந்த சோசலிச சமத்துவக் கட்சியின் சகல அங்கத்தவர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்ற செய்தியை இலங்கை சோ.ச.க.ஊர்ஜிதம் செய்து கொண்டுள்ளது.

திருஞானசம்பந்தனும் காசிநாதன் நகுலேஸ்வரனும் இராஜேந்திரம் சுதர்சனும் ஏறக்குறைய 50நாள் சிறைவாசத்தின் பின்னர் செப்டம்பர் 13ம் திகதி விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இராஜரத்தினம் இராஜவேல் 17 நாள் சிறையின் பின்னர் செப்டம்பர் 16ம் திகதி விடுதலை செய்யப்பட்டார். சோ.ச.க.வின் நான்கு அங்கத்தவர்களும் நற்சுகத்துடன் உள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் குறுக்கு விசாரணைகளின் போது இவர்களில் எவரும் சித்திரவதைகளுக்கோ அல்லது உடல் கெடுதிகளுக்கோ உள்ளாகவில்லை.

சோ.ச.க.அங்கத்தவர்கள் விடுதலை செய்யப்பட்டமை ஜனநாயக உரிமைகளுக்கு கிடைத்த ஒரு முக்கிய வெற்றியாகும். அது அரச பாகுபாடுகளுக்கும் தேசிய ஒடுக்குமுறைகளுக்கும் எதிரான சிறீலங்கா, ஈழம் தமிழ் மக்களின் போராட்டத்தைப் பலப்படுத்துகின்றது.

இந்த வெற்றி சோ.ச.க.வும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் (ICFI) உலக சோசலிச வெப் நிலையமும்(WSWS) முன்னெடுத்த அனைத்துலக பாதுகாப்பு பிரச்சார இயக்கம் இல்லாது போயிருந்தால் சாத்தியமாகியிராது. சோ.ச.க. அங்கத்தவர்களை விடுதலை செய்ய நடாத்தும் ஒரு பகிரங்க பிரச்சார இயக்கம் அவர்களின் மரணத்துக்கு இட்டுச் செல்லும் என்ற நேரடி எச்சரிகையை நா..அ..அ.கு. நிராகரித்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் முற்போக்கு, சோசலிச பொதுஜன அபிப்பராயத்தின் நெருக்குவாரத்தை ஒதுக்கித்தள்ளிவிட முடியாது என்பதில் நா.அ.அ.கு. நம்பிக்கை கொண்டிருந்தது. சோசலிச அனைத்துலகவாதத்தின் முக்கிய பிரேரணையாளர்களை தொல்லைக் குள்ளாக்குவதன் மூலம் உருவான அனைத்துலக அவமானத்தை விடுதலைப் புலிகள் சும்மா தள்ளுபடி செய்துவிட முடியாது போய்விட்டது.

இறுதியாக விடுதலைப் புலிகள் தனக்கும் தமிழ் போராட்டத்துக்கும் ஆபத்தைக் கொணர்ந்த ஒரு பாதையில் இருந்து விலகிக் கொள்வது என்ற அரசியல் ரீதியில் புத்திசாலித்தனமான தீர்மானத்தை எடுத்தது. விடுதலைப் புலிகள் சோசலிச சமத்துவக் கட்சிக்கு எதிரான அடக்குமுறை இயக்கத்தைத் தொடர்வது என்பதில் அழுங்குப்பிடியாக இருந்திருக்குமானால் அது தமிழ்த் தேசிய இயக்கத்துக்கும் தீவின் தென்பகுதி தொழிலாளர் வர்க்கத்துக்கும் இடையேயான உறவுகளுக்கு விஷமூட்டாது விட்டிருந்தாலும் நீண்ட காலத்துக்கு அதைப் பெரிதும் நாசமாக்கியிருக்கும்.

சோ.ச.க.வும் நா..அ..அ.கு.வும் சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர்களை நிபந்தனையின்றி விடுதலை செய்யும்படியோ அல்லது குறைந்தபட்சம் அவர்கள் கைது செய்யப்பட்டதை உடனடியாக ஊர்சிதம் செய்து சகல கைதிகளுக்கும் கிடைக்க வேண்டிய குறைந்த பட்சப் பாதுகாப்புக்களை வழங்கும்படியோ விடுதலைப் புலிகளை நெருக்கிய இலங்கைத் தீவிலும் உலகம்பூராவும் உள்ள மனித உரிமை, தொழிலாளர் அமைப்புக்களுக்கும் தனிநபர்களுக்கும் நன்றி கூறுகின்றது.சோ.ச.க.வுக்கு எதிரான அடக்குமுறையை நிறுத்தும்படி விடுதலைப் புலிகளை வேண்டிய சிறப்பாக இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் உள்ள பல தமிழர்களுக்கும் . அவுஸ்திரேலியா, ஐரோப்பா, வட அமெரிக்கா முதலிய இடங்களில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் சமூகத்தினருக்கும் நாம் நன்றி கூறுகின்றோம். அவர்கள் அங்ஙனம் செய்ததற்குக் காரணம் இலங்கை அரசுக்கும் அதன் யுத்தத்துக்கும் எதிராக தமிழ், சிங்கள வெகுஜனங்களை ஐக்கியப்படுத்தப் போராடிய ஒரு தொழிலாளர் வர்க்கக் கட்சியை நசுக்குவதானது தமிழ் தேசிய போராட்டத்திற்குக் குழிபறித்து, பொதுஜன முன்னணி அரசாங்கத்தைப் பலப்படுத்தும் என்பதை இனங்கண்டு கொண்டு இருந்ததேயாகும். இருப்பினும் சோ.ச.க.வின் ஜனநாயக உரிமைகளின் பேரிலும் அதன் ஆதரவாளர்கள், அங்கத்தவர்களின் சிவில் உரிமைகளின் பேரிலும் தொடர்ச்சியான விழிப்பு அவசியம். இருந்த போதிலும் வெளிநாடுகளில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்களோ அல்லது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பிராந்தியத்தின் தலைவர்களோ சோ.ச.க. அதனது வேலைத்திட்டத்தை தமிழ் மக்களுக்கு முன்வைக்கும் ஜனநாயக உரிமைகளில் இனிமேல் தலையிடமாட்டோம் என எந்தவிதமான உத்தரவாதத்தையும் வழங்கவில்லை.

### சோ.ச.க.வேலைத்திட்டம்

தமிழீழ விடுதலைப் புலிகள் அதனது சோசலிச அரசியல் எதிர்ப்பாளர்களை நசுக்குவதற்கு எதிரான அனைத்துலகப் பிரச்சாரம் சிறப்பாக தமிழ் தேசிய விடுதலைப் போராட்ட ஆதரவாளர்களிடம் இருந்து விடுதலைப் புலிகள் பற்றிய

10ம் பக்கம் பார்க்க

# ஈராக்கின் மீது அமெரிக்க–பிரித்தானிய ஆக்கிரமிப்பு

டிசம்பர் 17ம் திகதி அதிகாலை 12.50க்கு ஈராக்கின் பாக்தாத் நகர் மீது விமான. ஏவுகணைத் தாக்குதல்களில் ஈடுபட்டதன் மூலம் அமெரிக்க. பிரித்தானிய ஆட்சியாளர்கள் "பாலைவன நரி" எனப் பெயரிடப்பட்ட யுத்த நடவடிக்கையை ஆரம்பித்தனர். பெரும் அழிவுமிக்க பி-52 குண்டுவீச்சு விமானங்கள் 15 உட்பட்ட 200 விமானங்களும் யுத்தகப்பல்கள் 20ம் இதில் ஈடுபடுத்தப்பட்டன. டிசம்பர் 17 காலை பாக்தாத் நகரின் மீது 400க்கும் அதிகமான குரூஸ் ஏவுகணைகள் ஏவப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. 1991 வளைகுடா யுத்தத்துக்குப் பின்னர் அமெரிக்கா ஈராக்குக்கு எதிராகத் தொடுத்த மோசமான விமானத்தாக்குதல் இதுவாகும்.

இந்தத் தாக்குதலினால் 200க்கும் அதிகமானோர் உயிரிழந்ததாகத் தெரிகிறது. இந்த ஏகாதிபத்திய காட்டுமிராண்டி யுத்தத்தினால் ஏற்பட்டுள்ள அழிவுகள் பற்றிய முழு விபரங்கள் கிடைக்காத போதிலும் ஈராக் வெளிநாட்டு அமைச்சர் செயிட் அல் சகாப்பின் கூற்றின்படி "நகரவாசிகள் பெருமளவு வாழும் பாக்தாத்தின் பல்வேறு மாகாணங்களில் இவர்களின் தாக்குதல்கள் காரணமாக பெருமளவு மக்கள் உயிரிழந்ததோடு, நகரின் பல பகுதிகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது."

ஈராக்கில் இருப்பதாகச் சொல்லப்படும் படுகொலை இரசாயன அணு ஆயுதங்களை பரிசீலிக்கவென அந்த நாட்டுக்கு விஜயம் செய்திருந்த ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுத பரிசோதகர்களுக்கு ஜனாதிபதி சதாம் ஹூசேனின் "ஒத்துழைப்பு கிடைக்காதது" மட்டுமன்றி இதற்கு முன்னர் இருந்திராத தடைகளும் விதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சிறப்பு ஆணைக்குழுவின் (அன்ஸ்கொம்) தலைவரான ரிச்சார்ட் பட்லர் தமக்கு அறிவித்ததைத் தொடர்ந்து ஈராக்குக்கு எதிரான இராணுவ ஆக்கிரமிப்பு முடிவை எடுத்ததாக ஜனாதிபதி பில் கிளின்டன் டிசம்பர் 16ம் திகதி தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

"பாலைவன நரி" எனப்பெயரிடப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கையுடன் இணைந்து கொண்டுள்ள பிரித்தானிய பிரதமர் டொனி பிளேயர் ஈராக் ஜனாதிபதி சதாம் ஹூசேன் ஆயுத சோதனைக்கு வழங்குவதாக அளித்த ஒத்துழைப்பை மீறியதால் ஈராக்குக்கு எதிராகத் தாக்குதல் தொடுப்பதைத் தவிர வேறு யதார்த்தம் இருக்கவில்லை என்றுள்ளார்.

"அந்த நாள் ஐக்கிய நாடுகளுக்கு மட்டுமல்ல முழு உலகுக்கும் பெரிதும் சோகமான நாள்" என ஐ.நா.பொதுச் செயலாளர் கோபி அன்னன் முறைப்பாட்டு பாணியில் கூறிக் கொண்டுள்ளார். ஈராக்கின் ஆயுத பரிசீலனை சம்பந்தமாக பாதுகாப்பு சபை எடுத்த முடிவை சமாதானமான முறையில் செயற்பட்டு இராணுவத் தாக்குதலை தவிர்த்துக் கொள்ள நான் எனது அதிகாரத்தின் எல்லைக்குள் முடிந்த சகலதையும் செய்த போதிலும் அது போதாது போனதையிட்டு பெரிதும் வருந்துகின்றேன்." எனக் கூறி இராணுவ ஆக்கிரமிப்பை நியாயப்படுத்த முயன்றுள்ளார்.

ஈராக்குக்கு எதிரான இந்த யுத்த நடவடிக்கைகள் மொனிகா லெவன்ஸ்கி சம்பவம் தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதிக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசியல் குற்றச்சாட்டு பிரதிநிதிகள் சபையில் விவாதத்துக்கும் வாக்கெடுப்புக்கும் எடுத்துக் கொள்ளப்பட இருந்த ஒரு சில மணித்தியாலங்களுக்கு முன்னராகும்.

19ம் பக்கம் பார்க்க

**இனவாத யுத்தம் வேண்டாம்!**

**சிங்கள– தமிழ் தொழிலாளர் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவோம்!**

படிப்பகம்

தொழிலாளர் பாதை

# சமாதான கூட்டின் கூட்டத்தின் மீது பாசிஸ்டுகள் பாய்ச்சல்

ஆசிரியர்: கே. ரத்னாயக்க
துணை ஆசிரியர்: எஸ். இராசேந்திரன்
பதிப்பாளர்: தீபால் ஜயசேகர
சோசலிச சமத்துவக் கட்சியின்
பொதுச் செயலாளர்: விஜே டயஸ்
அலுவலகம்:
90. 1 வது மாளிகாகந்த
ஒழுங்கை
கொழும்பு - 10.
தொலைபேசி: 682220

சமாதான கூட்டமைப்பு( சாம சந்தானய) நவம்பர் 11ம் திகதி கொழும்பு பொதுநூலக கேட்போர்கூடத்தில் நடாத்திய கூட்டத்தை முறியடிக்க பாசிச புள்ளிகள் எடுத்த முயற்சியை வன்மையாகக் கண்டனம் செய்யும் சோசலிச சமத்துவக் கட்சியும் தொழிலாளர் பாதையும் இந்த பாசிச தலையீட்டையிட்டு தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்களை எச்சரிக்கை செய்கின்றது.

"பயங்கரவாதத்துக்கு எதிரான தேசிய அமைப்பு" என்ற பெயர் கொண்ட இந்தச் சிங்கள இனவாத கும்பல். இந்த ஆத்திரமூட்டும் தலையீட்டுக்காக முன்கூட்டியே கூட்ட மண்டபத்தினுள் நுழைந்து பல்வேறு இடங்களிலும் பதுங்கிக் கொண்டனர். அரச சார்பற்ற அமைப்புக்களைக் கொண்ட இந்த சமாதான கூட்டமைப்பின் அழைப்பாளரான லங்கா சமசமாஜக் கட்சியின் அரசியல் குழு அங்கத்தவரான பேராசிரியர் திஸ்ஸ விதாரண கூட்டத்தில் பேச ஆயத்தமானபோது ஒருவன் — எழுந்து, "பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டும் வரை யுத்தத்தை நிறுத்த முடியாது" எனக் கூச்சல் போடத் தொடங்கினான். மண்டபத்தில் பதுங்கிக் கொண்டிருந்த சுமார் 40 ஆத்திரமூட்டும் பேர்வழிகளும் எழுந்து கூடவே கூச்சலிடத் தொடங்கினர்.

இவர்களில் ஒருவன் மேடையில் பாய்ந்து கூட்ட அமைப்பாளர்களை மிரட்டிய அதேவேளையில் ஏனையவர்கள் ஒலிபெருக்கியை ஸ்தம்பிக்க வைத்தனர். சிங்கள இனவாதக் கூச்சல்களில் இறங்கிய இவர்கள் கூட்ட அமைப்பாளர்களை விடுதலைப் புலிகளின் ஏஜன்டுகள் எனக் குற்றம் சாட்டினர். ஏதோ ஒரு விதத்தில் உடல்ரீதியான மோதுதலை உருவாக்குவதே அவர்களின் திட்டமாக இருந்தது.

சுமார் ஒரு மணித்தியாலம் இந்த ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட இந்த சிங்கள சோவினிச பாசிஸ்டுகள் தமது அமைப்பின் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்துக் கொண்டும் கூட்ட அமைப்பாளர்களை கொலை செய்வதாகப் பயமுறுத்திக் கொண்டும் அங்கிருந்து வெளியேறினர். சம்பவம் இடம்பெற்ற சமயம் மண்டபத்துக்கு வந்த பொலிசார் இவற்றைப் பார்த்துக் கொண்டு சும்மா நின்றனர். இந்த ஆத்திரமூட்டலாளர்களின் தலையீட்டை ஹிட்லர் பாணியிலான பாசிச நடவடிக்கைகளுக்கு ஒப்பிட்டு எழுதிய சன்டே டைம்ஸ்(15-11-98) பத்திரிகையின் அரசியல் நிருபர் கூட பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:

"ஹிட்லர் கையாண்ட பாணியிலான நிஜ பாசிச விதிமுறைகள் மூலம் சமாதானக் கூட்டத்தை உடைத்து எறிய நாசகாரர்கள் முயற்சித்ததாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்."

அரச சார்பற்ற நிறுவனங்களின் இந்தக் கூட்டம் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் அரசியல் தீர்வுப் பொதிக்கு ஆதரவு தெரிவித்தும் யுத்தத்தை நிறுத்தக் கோரியும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கும்படி கேட்டும் பிரச்சாரம் செய்யும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

அரசாங்கம் இனவாத யுத்தத்துக்கு ஒரு முடுதிரையாக்கிக் கொண்டுள்ள அரசியல் தீர்வு பொதியை சோசலிச சமத்துவக் கட்சி(சோ.ச.க.) எதிர்க்கின்றது. யுத்தத்தை நிறுத்தவும் வடக்கு-கிழக்கில் இருந்து இராணுவத்தை வாபஸ் பெறவும் சிறீலங்கா-ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தை அமைக்கவும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டும் வேலைத் திட்டத்தை சோ.ச.க. முன்வைத்துள்ளது. சமாதான ஒன்றியத்தின் வேலைத்திட்டத்துக்கு சோ.ச.க. ஆதரவு வழங்காது. இருப்பினும் சோ.ச.க. அந்த அமைப்பின் கூட்டத்துக்கு எதிரான பயங்கரவாத ஆத்திரமூட்டல்களை எதிர்க்கும்படி சிந்திக்கும் ஆற்றல் படைத்த சகல தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் வேண்டுகின்றது. ஏனெனில் இது தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிரான ஒரு பாசிசக் குண்டர் இயக்கத்தைக் கட்டவிழ்த்துவிடும் முயற்சியாகும். இது பொதுமக்களுக்கு ஒரு பலத்த எச்சரிக்கையாக விளங்க வேண்டும்.

## பாசிச இயக்கம்

இந்தக் கூட்டத்தை முறியடிக்கவென்று அங்கு வந்து குதித்த இந்தக் கும்பல் சமீபத்தில் சிங்கள இனவாதக் குழுக்கள் பலவற்றை ஒன்றிணைத்து "பயங்கரவாதத்துக்கு எதிரான தேசிய இயக்கம்" என்ற பெயரில் உருவாக்கப்பட்டதாகும். மாஜி. இராணுவ மேஜர் பரணகம என்ற பேர்வழியின் தலைமையிலான எல்லைக் கிராமங்கள் காக்கும் இயக்கம், ஜே.வீ.பீ.யில் இருந்து பிரிந்து சென்ற ஜனதா மித்துரோ, தேசபிரேமி பிக்கு பெரமுன, சிங்கள வீரவிதான என்ற முதலாளித்துவ வர்த்தகர்களின் அமைப்பு ஆதியன இதில் அடங்கும்.

ஏனைய இனவாதிகளைப் போலவே இவர்களும் "தமிழ் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டும் வரை யுத்தத்தை தொடர்ந்து நடாத்த வேண்டும்" எனக் கூச்சலிடுகின்றார்கள். ஆனால் மற்றைய கும்பல்களில் இருந்து தாம் வேறுபடுவது "பயங்கரவாதிகளை தாக்கத் தாம் நடைமுறையில் ஆயத்தம் ஆகுவதனால்" ஆகும் என இவர்கள் வாயடித்துக் கொள்கின்றார்கள். இந்த அமைப்பின் தலைவர்களில் சிலர் தமக்கு இராணுவத்தின் உயர் அதிகாரிகளுடன் தொடர்பு இருப்பதாகவும் அதன் மூலம் ஆயுதப் பயிற்சி பெற்று வருவதாகவும் கூறிக் கொள்கின்றார்கள். இனவாத யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இராணுவத்தின் பெரும் புள்ளிகளுடன் இந்தப் பாசிசப் பேர்வழிகளுக்கு உறவு இருப்பதையிட்டோ அல்லது அவர்களுடன் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள இவர்கள் முயற்சிப்பதையிட்டோ சந்தேகப்பட எதுவும் இல்லை. இந்த விடயங்கள் இந்த இயக்கம் ஒரு பாசிச கொலைகார புள்ளிகளை நிர்மாணிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதை எடுத்துக் காட்டுகின்றது.

இலங்கையினுள்ளும் பொதுமக்களுக்கு இத்தகைய கொலைகாரக் கும்பல்களையிட்டு அனுபவம் உண்டு. 1987-90 காலப்பகுதியில் ஜே.வீ.பி. அன்றைய யூ.என்.பி. தலைவர் ஜனாதிபதி பிரேமதாசவின் ஒத்துழைப்போடு "தேசபிரேமி ஜனதா வியாபாரய" (தேசபக்த மக்கள் இயக்கம்) என்ற கொலைகார இயக்கத்தைக் கட்டவிழ்த்துவிட்டது. யூ.என்.பி.யும் இராணுவமும் தத்தமது குண்டர் படைகளை மக்களுக்கு எதிராகத் தூண்டிவிட்டது. இன்று ஜே.வீ.பி. மீண்டும் ஒரு அடிப்படையை உருவாக்கிக் கொள்ள வேறு வழிகள் மூலம் இனவாதத்தையும் கையாண்டு செயற்பட்டு வருகின்றது. ஏனைய மக்கள் பச்சைப்படியாக இனவாதத்தை வாந்தி எடுப்பதன் மூலம் பாசிச கும்பல்களை சிருஷ்டித்து வருகின்றனர்.

யுத்தத்தை நிறுத்தும்படியும் சமாதானத்தை உருவாக்கும்படியும் பிரச்சாரம் செய்யும் அமைப்புக்களை ஒழித்துக்கட்ட வேண்டும் என்பது இந்த பாசிசக் கும்பல்களின் மற்றொரு கோஷமாகும். மேலே நாம் குறிப்பிட்ட அரச சார்பற்ற நிறுவனங்களையும் சமாதானத்தின் பேரில் பிரச்சாரம் செய்யும் அமைப்புக்களையும் இந்தப் பாசிஸ்டுகள் ஈழம் வாதிகள் எனப் பெயர்சூட்டியுள்ளனர். அது சிங்கள இனவாதத்தைத் தூண்டி இந்த அமைப்புக்களுக்கும் சிங்கள-தமிழ் தொழிலாளர் -ஒடுக்கப்படும் மக்களுக்கும் தாக்குதல் நடாத்தும் திட்டத்தை உள்ளடக்கியது. என்னதான் உயிர்ச் சேதம் ஏற்பட்டாலும் என்னதான் வழங்கள் அழிந்து கரைந்து போனாலும் யுத்தத்தை இறுதிவரை கொண்டு செல்ல வேண்டும் என்பதே இந்தப் பாசிச அலுகோசுகளின் கூச்சலாக இருந்து கொண்டுள்ளது.

## அரசாங்க ஆதரவு

இந்த பாசிஸ்டுகள் தலையெடுப்பது பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இனவாத யுத்தத்தினதும் இனவாதப் பிரச்சாரத்தினதும் உந்து சக்தியின் துணையோடாகும். சில மாதங்களுக்கு முன்னர் தென்னாபிரிக்காவில் நடைபெற்ற கூட்டுச்சேரா நாடுகளின் மகாநாட்டில் கலந்து கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அந்நாட்டு தொலைக்காட்சிக்கு வழங்கிய ஒரு பேட்டியில் பின்வருமாறு கூறினார்:

"தனிநாடு அவசியமாகியுள்ள அவர்கள் இந்நாட்டு பூர்வகுடிகள் அல்லாத ஒரு சிறுபான்மை மக்கள் குழுவாகும்." இது சிங்கள இனவாதிகளின் சோவினிச அறிக்கையாகும். பாசிச இனவாத புள்ளிகள் இந்த அறிக்கையை வெளியிட்டதையிட்டு ஜனாதிபதியை பாராட்டியுள்ளனர்.

சகல முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்களிலும் இவர்களது இனவாத அரசியல் கருத்துக்கள் வெளியாக தொடர்ந்து ஆதரவு கிடைத்து வருகினறது. இந்தப் பாசிச இயக்கம் முதலாளிகளதும் இராணுவம் -பொலிசினதும் தாக்குதலின் வாளாகக் களத்தில் இறங்கத் தயாராகி வருகின்றது. முதலாளித்துவ நெருக்கடியின் தாக்குதலுக்கு உள்ளாகி கதிகலங்கிப் போயுள்ள பிரிவினரை அத்தகைய இயக்கத்தினுள் ஈர்த்துக் கொள்ள அவர்கள் முயற்சிக்கின்றார்கள். நெருக்கடிக்குள் தலைமுழ்கிப் போயுள்ள முதலாளி வர்க்கத்துக்கு சர்வாதிகாரத்தைத் திணிக்க இத்தகைய பாசிச வாள் அவசியம். அவர்களது இலக்கு ஒடுக்கப்படும் தமிழ் மக்கள், தொழிலாளர்கள் மற்றும் ஒடுக்கப்படும் மக்களை நசுக்கித் தள்ளுவதேயாகும். இந்த பாசிஸ்டுகள் சமசமாஜ, ஸ்டாலினிச, நவசமசமாஜ கட்சிகளினதும் தொழிற்சங்கங்களதும் காட்டிக் கொடுப்புக்களை தமக்குச் சாதகமாக்கிக் கொண்டுள்ளனர்.

இருந்த போதிலும் இந்தப் பிற்போக்கு பாசிச அமைப்புக்கள் கதிகலங்கிப் போயுள்ள சிறிய தொகையினரையே பொட்டளி கட்டிக் கொள்ள முடிந்துள்ளது. எனினும் சிந்திக்கும் ஆற்றல் படைத்த எவரும் இதன் ஆபத்துக்களை ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. சந்தர்ப்பவாதக் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் கால்விலங்கு மாட்ட முடியாது போகும் நிலையில் முதலாளி வர்க்கத்துக்கு புதிய இரட்சகர் அவசியமாகின்றார். பாசிச இயக்கம் தயாராகுவது அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கே.

ஏகாதிபத்திய அமைப்பின் உக்கிரம் கண்டுவரும் நெருக்கடியின் மத்தியில் முதலாளி வர்க்கங்களின் புதிய வலதுசாரி அணிதிரள்வுகளோடு முன்னேறிய முதலாளித்துவ நாடுகளிலும் பின்தங்கிய நாடுகளிலும் பாசிச கும்பல்கள் தலைநீட்ட முயற்சிப்பதை இந்நிலைமையினுள் காணலாம்.

பாசிச, இராணுவ சர்வாதிகார அச்சுறுத்தலுக்கான ஒரே பதில் தொழிலாளர் வர்க்கம் தனது அனைத்துலகத் தொழிலாளர் வர்க்க ஒத்துழைப்போடு முதலாளித்துவத்தில் இருந்து ஒரு சுயாதீனமான சக்தியாக ஒடுக்கப்படும் மக்களின் தலைவனாக சோசலிச வெகுஜன இயக்கத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். சோ.ச.க. இந்த சோசலிச வெகுஜன இயக்கத்தைக் கட்டியெழுப்பும் பணியில் ஈடுபட்டுள்ளது.

## அனைத்துலக குழுவின் பகுதிகளின் இன்டர்நெட்

World Socialist Web Site
http://www.wsws.com

* அமெரிக்கா:
http://www.socialequality.com

* அவுஸ்திரேலியா:
http:www.workersnews.flex.com.au

* பிரித்தானியா:
http:/www.socialequality.org.uk

* கனடா:
http://www.egalitesociale.com

* ஜேர்மன்:
http://gleichheit.de

www.padippakam.com

www.padippakam.com



# விடுதலைப் புலிகளின் தலைவர் சிறீலங்கா அரசாங்கத்துடன் புதிய பேச்சுவார்த்தைக்கு அழைப்பு

**விஜே டயஸ்**

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வடக்கு கிழக்கு மாகாண தமிழ் மக்களுக்கு எதிரான சிறீலங்கா அரசின் 15 வருடகால யுத்தத்தை ஒரு முடிவுக்கு கொணரும் நோக்கில் சிறீலங்கா அரசாங்கத்துடன் புதிய பேச்சுவார்த்தைகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

நவம்பர் 26ம் திகதி இடம்பெற்ற மாவீரர் தினக் கொண்டாட்டங்களில் நிகழ்த்திய உரையில் வே.பிரபாகரன் இந்த சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மூன்றாம் தரப்பினரின் ஏற்பாட்டின் கீழ் இடம்பெறவேண்டும் எனக் குறிப்பிட்டார்

பிரபாகரனின் பிறந்த தினத்தில் வரும் இக்கொண்டாட்ட உரையில் அவர் விடுதலைப் புலிகள் 1987 இந்திய இலங்கை உடன்படிக்கைக்கு ஆதரவு வழங்குவதை நிராகரித்ததன் பின்னர் முதற்தடவையாக வடக்கு கிழக்கு மாகாணங்களைக் கொண்ட தனியொரு தமிழ் ஈழம் அரசின் ஸ்தாபிதத்துக்கு இட்டுச்செல்லாத ஒரு தீர்வை ஏற்றுக்கொள்ள உடன்பட்டுள்ளார்.

கடந்த மாவீரர் தினக் கொண்டாட்டங்களில் விடுதலைப் புலிகள் பெரும் இராணுவத் தாக்குதல்களை நடாத்தியிருந்தது. சந்திரிகா குமாரதுங்கவின் பொதுஜன முன்னணி அரசாங்கம் நவம்பர் 26ம் திகதி தீவின் சகல பாகங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகளை இறுக்கமாக்கக் கட்டளையிட்டு இருந்தது. இதற்குப் பதிலாக பிரபாகரன் இலங்கை அரசாங்கத்துக்கு ஆயுத, நிதி உதவிகளை வழங்கும் பிரித்தானியாவினதோ அல்லது வேறுநாடுகளதோ ஏற்பாட்டின் கீழ் தீவின் ஒரு புதிய அரசியலமைப்புச் சட்ட அடிப்படையில் பேச்சுவார்த்தைகளில் இறங்கும் தமது உஜார் நிலையைக் காட்டிக்கொண்டுள்ளார்.

"நாம் சமாதானத்துக்கான கதவுகளை அடித்து மூடிவிடவில்லை." எனப் பிரபாகரன் பிரகடனம் செய்தார். நியாயமான பேச்சுவார்த்தைகளின் மூலம் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளும் நாகரீகமான விதிமுறைகளைக் கையாள நாம் தயாராகவுள்ளோம்.சிங்களத் தலைமை பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளும் அரசியல் விருப்போ அல்லது நேர்மையோ இல்லாது இருப்பதால் நாம் மூன்றாம் தரப்பின் பேரம்பேசலை ஆதரிக்கின்றோம்."

பிரபாகரன் தமது பேச்சில் இலங்கைக்கு வழங்கப்படும் பிரமாண்டமான வெளிநாட்டு நிதி, இராணுவ உதவிகளையிட்டு கவலை தெரிவித்தார். ஆனால் இந்த நாடுகளில் ஒன்றோ அல்லது பலவோ ஒரு "சமாதான" தீர்வுக்கு தரகு வேலை பார்ப்பதற்கு ஆதரவாக சமிக்கை கொடுத்தார். இதற்கு முன்னர் விடுதலைப் புலிகள் தமிழ் மக்களுக்கு எதிரான சிறீலங்கா அரசின் யுத்தத்தில் சம்பந்தப்படாத ஒரு தரப்பினரையே பேச்சாளராக ஏற்றுக்கொள்ளும் எனத் தெரிவித்திருந்தது.

அமெரிக்கா, யப்பான், அவுஸ்திரேலியா உட்பட ஒரு தொகை ஏகாதிபத்தியச் சக்திகள் கொழும்பு ஆட்சியாளர்களையும் விடுதலைப் புலிகளையும் பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்பும்படி நெருக்கிக் கொண்டுள்ளன. ஆனால் தீவின் முன்னாள் ஏகாதிபத்திய ஆட்சியாளர்களும் இராஜதந்திர சூழ்ச்சிகளில் முன்னணியில் நின்று கொண்டுள்ளதுமான பிரித்தானியாவுக்கே விடுதலைப் பலிகளின் ஆசி கிடைத்துள்ளது போல் தெரிகின்றது. இது ஒரு புதிய சுற்றுப் பேச்சுவாார்த்தைகளுக்கான தரகர் வேலையில் ஈடுபட ஆயத்தமாகி வருகின்றது.

பிரித்தானிய தொழிற்கட்சி டொனி பிளேயர் அரசாங்கத்தின் வெளிநாட்டு, பொதுநலவாயநாடுகள் விவகார இராஜாங்க அமைச்சர் டெரிக் பாச்செட்டின் சமீபத்திய இலங்கை விஜயத்தில் அவர் பின்வருமாறு கூறினார்: "சிறீலங்கா தேசிய இனப் பிரச்சினையில் ஒரு மூன்றாம் தரப்பு தலையிடுவதற்கு வாய்ப்பு உருவாகலாம். இந்த வகையில் பிரித்தானிய அரசாங்கத்துக்கு அழைப்பு எதுவும் கிடைக்கவில்லை."என்றுள்ளார்.



சந்திரிகா குமாரதுங்க



வே.பிரபாகரன்

## இராணுவ போட்டாபோட்டி

விடுதலைப் புலிகளின் புதிய சுற்று பேச்சுவார்த்தைக்கான இந்த அழைப்பு, இலங்கை பத்திரிகைகள் ஒரு இராணுவப் போட்டாபோட்டியைப் பற்றி எழுதிக் கொண்டுள்ள ஒரு தருணத்தில் இடம்பெற்றுள்ளது.

இலங்கை இராணுவம் யாழ்ப்பாணத்துக்கான பிரதான பாதையை திறப்பதாகக் கூறி "ஜயசிக்குறு" இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்து 18 மாதங்கள் கழிந்துவிட்டன. 1997 மேயில் இருந்து இலங்கை இராணுவமும் அரசியல் தலைவர்களும் வெற்றி நிச்சயம் என இடைவிடாது பிரகடனம் செய்து வந்துள்ளனர். அரசாங்கப் படைகள் பிரமாண்டமான உயிரிழப்புக்களுக்கு பல விரகி முக்கியத்துவம் வாய்ந்த நகரங்களைக் கைப்பற்றுவதில் வெற்றி பெற்ற போதிலும் அவர்களால் விடுதலைப் புலிகளின் கெரில்லாப் படைகளை முடமாக்கிவிட முடியாது போய்விட்டது. டிசம்பர் 6ம் திகதி பிரதி பாதுகாப்பு அமைச்சரும் அரசாங்கத்தின் யுத்த கொள்கையின் முக்கிய சிற்பியுமான அனுருத்த ரத்வத்தவும் அரசாங்கத் தரைப்படை, கடற்படை, விமானப்படைத் தளபதிகளும் விடுதலைப் புலிகளிடம் இருந்து திரும்பக் கைப்பற்றப்பட்ட ஒட்டுச்சுட்டானில் சுற்றுலா வருகையில் இடம்பெற்ற கடும் மோட்டார்த் தாக்குதல்களில் இருந்து மயிரிழையில் உயிர் தப்பினர்.

பொதுஜன முன்னணி அரசாங்கம் பிரபாகரனின் இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கான அழைப்புக்கு ஒரு திட்டவட்டமான பதிலை இன்னமும் வழங்கவில்லை. பாராளுமன்றத்தில் வெளிநாட்டு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டின் மீதான விவாதத்தை முடித்து வைத்துப் பேசிய அமைச்சர் கதிர்காமர் "நாம் விடுதலைப் புலிகளுடன் போரிட்டு அவர்களுடனான எந்த ஒரு பேச்சுவார்த்தைகளுக்கு முன்னரும் அவர்களை குறைக்க வேண்டும்." என்றுள்ளார். அரசியல் ரீதியில் பொதுஜன முன்னணி அரசாங்கம் விடுதலைப் புலிகளை அடிபணிய வைக்கும் அதன் வல்லமையில் ஈடாட்டம் கண்டுபோய்விட்டது. 1994ல் சமாதானத்தை ஏற்படுத்தவும் இலங்கையின் சமூக நலன்புரி அமைப்பை தகர்த்து எறிவதற்கு முற்றுப்புள்ளி வைக்கவும் வாக்குறுதியளித்து ஆட்சிக்கு வந்த பொதுஜன முன்னணி அரசாங்கம் யுத்தத்துக்கான இரத்தம் தோய்ந்த பிரச்சார இயக்கத்தை உச்சமாக்கியது. அதேசமயம் யுத்தத்தை அரசாங்க சேவைகளை ஒழித்துக்கட்டுவதற்கும் தெற்கில் ஜனநாயக உரிமைகளைத் துடைத்துக்கட்டுவதற்கும் நியாயமானதாக்கிக் கொண்டது.

அனைத்துலக, இலங்கை மூலதனம் விடுதலைப் புலிகளின் இந்த பிரேரணைக்கு விரைவானதும் சாதகமானதுமான பதிலைப் பெற நெருக்கிக் கொண்டுள்ளன. அவர்கள் பொதுஜன முன்னணியின் யுத்தக் கொள்கையானது அரசாங்க திறைசேரியை வங்குரோத்தடையச் செய்து மக்களுக்கிடையே கசப்பை ஏற்படுத்திவிடும் என அஞ்சுகின்றனர்.

பிரபாகரனின் மாவீரர் தினப் பேச்சுக் குறித்து கருத்துத் தெரிவித்த வர்த்தக நிறுவனங்களின் கூட்டு முன்னணியின் இணைத் தலைவரான லலித் கொத்தலாவலை "இது வர்த்தக சமூகத்தின் சிந்தனைக்கு அமைவானதாக உள்ளது என்றுள்ளார்." கடந்த அக்டோபரில் வர்த்தக, கைத்தொழில், வியாபார சம்மேளனம் "தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை அழைப்பு உட்பட பொதுஜன முன்னணிக்கும் யூ.என்.பி.க்கும் இடையே ஒரு இணக்கமான அணுகுமுறையை வளர்க்க" ஒரு மகாநாட்டைக் கூட்டியது.

இது சம்பந்தமாக யூ.என்.பி., பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ரொயிட்டருக்கு அளித்த பேட்டியில் இது விடுதலைப் புலிகள் எடுத்துள்ள ஒரு பெரும் நடவடிக்கையாகும்.இது அரசாங்கம் மிகவும் சாதகமாக்கிக் கொள்ள வேண்டிய ஒன்றாகும். இன்றைய தருணத்தில் விடுதலைப் புலிகள் தனிநாட்டைக் கோருவதாக இல்லை. நாம் இத்தகைய ஒரு அழைப்பை முன்னர் ஒரு போதும் கண்டதில்லை."

சிங்கள இனவாதத்தைத் தூண்டுவதற்குப் பேர்போன ஒரு பத்திரிகையான "ஐலண்ட்" நவம்பர் 30 திகதிய அதனது ஆசிரியத் தலையங்கத்தில் "சமாதானத்தை விரும்பும் ஒவ்வொரு பிரசையும் இந்த அழைப்பு விடுதலைப் புலிகளிடம் இருந்து வந்ததையிட்டு மகிழ்ச்சியடையாது இருக்கமுடியாது. அது இதுவரை காலமும் விட்டுக்கொடுக்காது இருந்து வந்த தனிநாடு கோரிக்கையில் இருந்து வளைந்து கொடுத்துள்ளது....அரசாங்கம் இதைக் கவனமாக பரிசீலிக்க வேண்டும். முடிந்தமட்டும் சாதகமான முறையில் அக்கறை காட்ட வேண்டும். நாட்டை இரத்தக் களரியாக்கிய ஒரு பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண்பதை விட வேறு எதுவும் நாட்டுக்குப் பயனளிக்காது."

அனைத்துலக மூலதனம் அதிகரித்துவரும் யுத்தச் செலவுகள் இலங்கையை வங்குரோத்து நிலைக்குள் தள்ளிவிடும் என அஞ்சுகின்றது. சமீபத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் வதிவிடப் பிரதிநிதியான அன்டன் ஒப்டேபெக் 1998ன் நிதி தொடர்பான பெறுபேறுகள் ஏமாற்றம் அளிப்பதாகவும் 1999 வரவுசெலவுத் திட்டம் இலங்கையை அடிப்படையான மாற்றங்களுக்கு நெருக்கமானதாகக் கொணர்ந்து விடவில்லை "அதாவது: அரசாங்க செலவினங்கள், தேசிய கடன்களை சர்வதேச நாணய நிதியத்தின் சிகிச்சைக்கு நெருக்கமானதாக மொத்த தேசிய உற்பத்தியைக்(GNP) கொணர்ந்துவிடவில்லை.

கடந்த ஆகஸ்டில் பொதுஜன முன்னணி அரசாங்கம் இராணுவத்திற்கு 500 கோடி ரூபாக்களை மேலதிகமாக ஒதுக்கீடு செய்ய நேரிட்டது. 1999 வரவுசெலவுத்திட்டம் இராணுவச் செலவீடுகளை 5700கோடி ரூபாக்களாக அதிகரித்துள்ளது. இது அரசாங்க வரவுசெலவுத்திட்டத்தின் காற்பங்காகும். இதன் பெறுபேறாக வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறை அதிகரிக்கின்றது. இது கிழக்கு ஆசிய பொருளாதார நெருக்கடியின் தாக்கம் காரணமாக இலங்கை பெரும் நெருக்குவாரத்துக்கு உள்ளாகியுள்ள ஒரு நிலையில் இடம்பெற்றுள்ளது. தேயிலை, இறப்பர் மற்றும் இலங்கை ஏற்றுமதிப் பொருட்களின் கேள்வியும் விலைகளும் பெரிதும் வீழ்ச்சிகண்டுள்ளது.

## விடுதலைப் புலிகள் ஏகாதிபத்தியவாதிகளின் சலுகைகளை நாடுகின்றது

பிரபாகரன் தமது நவம்பர் 26ம் திகதிய உரையில் தமிழர்களுக்கு எதிரான ஒடுக்குமுறையை உக்கிரமாக்குவதாக சந்திரிகா குமாரதுங்கவின் பொதுஜன முன்னணி ஆட்சியாளர்களை குற்றம் சாட்டியதோடு பொதுஜன முன்னணி "யுத்தத்தை உக்கிரமாக்கவும் தொடரவும் "சபதம் பூண்டுள்ளதாக எச்சரிக்கை செய்தார்.தமிழர்களின் வரலாற்றில் மிகவும் இரத்தம் தோய்ந்த சகாப்தத்தின் சிருஷ்டி கர்த்தாவாகியுள்ள சந்திரிகா சமாதான வழிகளில் தமிழ் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்த்து நாட்டுக்கு சமாதானத்தைக் கொணர்வார் என நாம் நம்பவில்லை என விடுதலைப் புலிகளின் பெருந் தலைவர் தெரிவித்தார்.

இது போகும் விதத்தைப் பார்த்தால் பொதுஜன முன்னணி ஆட்சியாளர்களைப் பற்றியும் தமிழ்மக்களை அடிமைப்படுத்த அது செய்து கொண்டுள்ள திடசங்கற்பம் பற்றிய பிரபாகரனின் ஆய்வு சரியானது.ஆனால் இது இரண்டு முக்கிய பிரச்சினைகளை எழுப்புகின்றது: "ஏன் விடுதலைப் புலிகள் 1994 பொதுத் தேர்தலில் பொதுஜன முன்னணியை ஆதரித்தது? தனது பேச்சுவார்த்தைக்கான அழைப்பை ஏற்கும்படி குமாரதுங்கவை யார் நெருக்குவர் என விடுதலைப் புலிகள் எதிர்பார்க்கின்றது?

முதலாளித்துவ தேசிவாத இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் தனது அரசியலை சிங்கள முதலாளி வர்க்கத்துடனும் இந்தியன் ஆளும் வர்க்கத்துடனும் ஏகாதிபத்தியத்துடனும் சோவியத் யூனியன் வீழ்ச்சிகாண்பதற்கு முன்னர் சோவியத் ஸ்டாலினிச அதிகாரத்துவத்துடனும் சூழ்ச்சி செய்வதையே அடிப்படையாகக் கொண்டுவந்தது. இன்று விடுதலைப் புலிகள் உலகளாவிய ரீதியில் வெகுஜனங்களைப் பட்டினிபோடும் கேவலமான பணிக்குப் பேர்போன சர்வதேச நாணய நிதியத்தையும் பிரித்தாளும் கொள்கை மூலமும் 1947ல் இந்தியத் துணைக்கண்டத்தை முஸ்லீம் பாகிஸ்தான் எனவும் இந்து இந்தியா எனவும் பிரிப்பதன் மூலம் இன்று தென்ஆசியாவில் தலைவிரித்து ஆடும் தேசிய, இன, மத மோதுதல்களுக்கு வித்திட்ட பிரித்தானியர்களையும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தை தம்முடன் உடன்பாட்டுக்குக் கொணரும் பேர்வழிகளாக காண்கின்றது. இந்த வழியில் ஏற்படுத்தப்படும் எந்த ஒரு உடன்பாடும் ஏகாதிபத்தியத்தினதும் சிங்கள, தமிழ் முதலாளி வர்க்கத்தினதும் கரங்களைப் பலப்படுத்துவதோடு தேசிய இனக்குழு உறவுகளை மேலும் மோசமடையச் செய்யும்.

பிரபாகரன் ஒரு மூன்றாம் தரப்பு தலையீட்டை எதிர்ப் பார்க்கின்றார். அதாவது, ஏகாதிபத்தியத்திற்கு சார்பாக நடைபோடும் இந்தப் போக்கானது அவரின் நவம்பர் 26 பேச்சில் ஊர்சிதம் செய்யப்பட்டுள்ளது:

"இன்னமும் யுத்தத்துக்கு எதிராக சிங்கள தேசிய இனத்தில் இருந்து எந்த ஒரு நீதியின் குரலும் ஒலிக்கவில்லை.யுத்தத்துக்கு முடிவுகட்டும்படியும் பிரச்சினையைச் சமாதான வழியில் தீர்த்துக் கொள்ளும்படியும் இன்னமும் எவரும் கேட்டுக் கொள்ளவில்லை. அரசியல்வாதிகள் தொடக்கம் பிக்குகள் வரையும் புத்திஜீவிகள்

-19ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

படிப்பகம்

# பசறைத் தொழிலாளர்களுக்கு எதிரான அடக்குமுறை உக்கிரம்

விஜித சில்வா

தோட்ட அதிகாரியின் பங்களா உட்பட சொத்துக்களை தீயிட்டு எரித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் பொலிசாரால் கைது செய்யப்பட்ட பசறைத் தோட்ட கலபொடை டிவிசனின் 25 தொழிலாளர்கள் மீதான வழக்கு டிசம்பர் 17ம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இவர்களில் ஒரு தோட்டத் தொழிலாளியைத் தவிர ஏனைய 24பேர்களுக்கும் வீரகேசரி மாவட்ட நிருபர் உட்பட பிணை மறுக்கப்பட்டு தொடர்ந்தும் 1999 ஜனவரி 8ம் திகதி வரை தடுப்புக்காவலில் வைக்கப்பட வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டது. மூன்று பிள்ளைகளின் தாயான ஒரு பெண் தொழிலாளிக்கு பிணைவழங்க வேண்டும் என்ற கோரிக்கையையும் நிராகரித்த நீதிமன்றம், திருமண வைபவம் ஒன்றில் கலந்து கொள்ள மட்டும் ஒரு பெண் தொழிலாளியை ரூபா.10000 சரீரப் பிணையிலும் ரூபா.2500 ரொக்கப் பிணையிலும் விடுதலை செய்தது. அத்தோடு அந்தத் தொழிலாளி ஜனவரி 6ம் திகதி ஞாயிறு பொலிஸ் நிலையம் சென்று ஒப்பமிடவேண்டும் எனவும் நீதிபதி கட்டளையிட்டார்.

பொலிஸ் குற்றச்சாட்டின் பேரில் மட்டும் தடுப்புக்காவலில் வைக்க உரிமை கிடையாதென எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்வைத்த வாதத்தை நிராகரித்த நீதிமன்றம், தொழிலாளரை தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைக்க வேண்டும் என பொலிசார் விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டது. பசறைத் தோட்டத் தொழிலாளருக்கு எதிராக ஆத்திரமூட்டலைத் தூண்டும் பொலிசாரது இந்த கோரிக்கையின் பேரில் தொழிலாளரைத் தடுப்புக்காவலில் வைத்த நடவடிக்கை பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் ஆதரவுடன் தோட்டக் கம்பனிக்காரர்கள் பசறைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராகத் தூண்டிவிடும் அரச ஒடுக்குமுறையின் உக்கிரக் கோலத்தை எடுத்துக் காட்டுகின்றது.

இதற்கிடையே நவம்பர் 24ம் திகதி இ.தொ.கா. பாராளுமன்ற உறுப்பினர் சென்னன், மற்றும் வேலாயுதத்துக்கும் எதிராக சித்தாசி பிறப்பிக்கப்பட்டு உள்ளபோதிலும் அவர்கள் டிசம்பர் 01ம் திகதி இடம்பெற்ற நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

அரச அடக்குமுறையுடன் சேர்ந்து பதுளை தபால் கந்தோரில் சேவை புரியும் தர்மதாச சிறிபாலவையும் மற்றும் பிற்போக்கு குண்டர்ளையும் அணிதிரட்டி தோட்ட அதிகாரி தமிழர் எதிர்ப்பு இனவாத காடையர் இயக்கத்தைக் கட்டவிழ்த்துவிடும் நடவடிக்கையில் ஈடுபட்டார். சம்பள வெட்டுக்கு எதிரான தோட்ட வேலைநிறுத்தத்தினை தோட்டத்துக்கு சம்பமாக அமைக்கப்படும் பௌத்த நிலையத்துக்கு எதிரான ஒரு வேலைநிறுத்தமாகச் சோடித்துக் காட்ட இவர்கள் முயன்றனர். வேலைநிறுத்தத்துக்கு தொடர்ந்தும் சிங்களத் தோட்டத் தொழிலாளர்களின் ஆதரவு கிடைத்து வருவதால் இந்த பிற்போக்கு நடவடிக்கை எடுபடவில்லை. இருந்தபோதிலும் இனவாத பிற்போக்காளர்களின் பிற்போக்கு முயற்சிகள் நின்றுபோகவில்லை.

பொலிஸ் துப்பாக்கிச் சூட்டினால் படுகாயம் அடைந்த அந்தோனிசுவாமி ரிமான்ட் சிறை சிகிச்சை மூலம் உரிய சுகம் அடையாத நிலையில் கட்டிலில் போடப்பட்டு

19ம் பக்கம் பார்க்க

# தீவைத்து நாசமாக்கிய தொழிலாளர் லயன்களை கட்டிக் கொடுக்க பின்னடிப்பு



கூடாரத்தின் அடியில் வாழும் தோட்டத் தொழிலாளர்

ஹப்புகஸ்தன்ன பெருந்தோட்டக் கம்பனிக்கு சொந்தமான அலுபொல்வத்தை உட்பட்ட 3 தோட்ட டிவிசன்களில் உள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர் குடும்பங்கள் வசித்த வீடுகள் பொதுஜன முன்னணி அரசாங்க அரசியல்வாதிகள் ஒழுங்குசெய்த இனவாதக் குண்டர் குழுக்களால் தீயிட்டுக் கொழுத்தப்பட்டு, அவற்றில் வாழ்ந்த தொழிலாளர் அகதிகளாக்கப்பட்டு மூன்று மாதங்கள் கடந்துவிட்டன. இந்தக் கொலைத் தாக்குதல்களுக்கு எதிராக சோசலிச சமத்துவக் கட்சி அலுபோல தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் நடாத்திய பிரச்சாரத்தின் போது இத்தொழிலாளர் குடும்பங்கள் எத்தகைய துன்பங்களுக்கு மத்தியில் வாழ்க்கையை ஓட்டத் தள்ளப்பட்டு உள்ளார்கள் என்பது தெளிவாகியது.

இந்தக் கொலைத் தாக்குதல் கடந்து மூன்று மாதங்களின் பின்னர் கூட அழிந்துபோன வீடுகளைத் திருத்திக் கொடுக்க தோட்டக் கம்பனி எந்த ஒரு முயற்சியிலும் ஈடுபடும் அறிகுறிகள் தென்படுவதாக இல்லை. தீக்கிரையான பின் எஞ்சியுள்ள சுவர்கள் கூட மழைக்கும் வெயிலுக்கும் அடிபட்டு மேலும் ஈடாட்டம் கண்டு இடிந்து விழும் நிலையில் உள்ளது.

வீடற்ற தொழிலாளர் குடும்பங்கள் தற்போது லயன்களுக்கு அருகில் இருக்கும் நிலங்களில் கம்பனி வழங்கிய தற்காலிகக் கூடாரங்களின் கீழ் அல்லது எரிந்து கருகியும் கறள்பிடித்தும் போயுள்ள தகரக் குடிசைகளின் கீழும் வாழ்க்கையை ஓட்டத் தள்ளப்பட்டுள்ளனர். இவற்றினுள் ஒரு ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்வதைக் காணக்கூடியதாக உள்ளது. அரிந்து செம்மைப்படுத்தாத மரக்குற்றிகளை நிறுத்தி தகரத்தினால் வேயப்பட்டுள்ள இந்தக் குடிசைகள், கூடாரங்களுக்குள் பலகைகளாலும் செங்கல்களாலும் தரையை நிர்மாணித்து தாங்க வேண்டியுள்ளது. வயோதிபர், நோயாளிகள், குழந்தைகள் சகலரும் எதுவிதத்திலும் இவற்றினுள் முண்டியடித்துக் கொண்டு படுக்க வேண்டும். நிலத்தில் படுக்க மெழுகுசீலைகளை வழங்கும்படி தொழிலாளர் கம்பனியிடம் கேட்டபோதிலும் இதுவரை அவை வழங்கப்படவில்லை எனத் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

உடுத்த உடையுடன் அகதிகளான இந்த தொழிலாளர்களுக்கு தோட்டக் கம்பனி ஒரு குடும்பத்துக்கு தலா ஒரு பிளாஸ்டிக் வாளி, படுக்கை விரிப்பு 3, துவாய் 2, சவர்க்காரக் கட்டி6 என்ற ஒருசில பொருட்களை மட்டுமே வழங்கியுள்ளது. ஐந்தாறு பேர்களைக் கொண்ட ஒரு குடும்பத்துக்கு இவை எந்தவிதத்திலும் போதுமானது எனத் தொழிலாளர்கள் கேட்டனர்.

இதேசமயம் இரத்தினபுரி செயலகம் தீக்கிரையான நிரந்தர வீடுகளில் இருந்த ஒரு குடும்பத்துக்கு ரூபா.9000ம் குடிசைகளில் வாழ்ந்த குடும்பங்களுக்கு ரூபா.2000 வீதமும் வழங்கியுள்ளதாகத் தெரிகின்றது. குடிசை ஒன்றைக் கட்டத் தன்னும் இந்த பணம் போதுமானதா எனத் தொழிலாளர் அங்கலாய்க்கின்றனர். குடிசைகளில் வாழ்ந்த தொழிலாளர்களுக்கும் ரூபா.9000வழங்கும்படி கேட்ட போதிலும் அவர்களுக்கு கிடைத்து ரூபா.2000மட்டுமே. மீதிப்பணம் மோசடி செய்யப்பட்டு விட்டதோ என தொழிலாளர் சந்தேகிக்கின்றனர்.

மிகவும் கஷ்டமான நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ள இத்தொழிலாளர் தமது அவலங்களைத் தொழிலாளர் பாதை நிருபரிடம் விபரிக்கையில் பின்வருமாறு தெரிவித்தனர்:

ஏ.வள்ளியம்மா: "எமது குடும்பத்தில் ஐந்து பேர். மிகக் கஷ்டப்பட்டுச் சேர்த்த பணம், பொருட்கள், பாத்திரங்கள் எல்லாம் தீயினால் வெந்து போய்விட்டது. வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, ரேடியோ, தையல் மெஷின் ஆகியன இப்படி அழிக்கப்பட்ட பொருட்களுள் அடங்கும்" எனக் கூறினார்.

எஸ்.ஜயாசாமி: "கடந்த வருடம் எனக்கு ஈ.பி.எப். பணமாக ரூபா.70000 கிடைத்தது. அப்பணத்தில் வாங்கிய வீட்டுப் பாவனைப் பொருட்களும் மீதிப் பணமும் இந்தத் தீயினால் அழிந்து போய்விட்டது" என்றார்.

தோட்டப் பிள்ளைமடுவமும் கூட இக்கொலைத் தாக்குதலில் இருந்து தப்பவில்லை. அங்கு வேலைபார்க்கும் ஏ.தெய்வானை பின்வருமாறு குறிப்பிட்டார்: "லயன்களுக்கு தீவைத்தவர்கள் இதனையும் எரித்தனர். யன்னல், கண்ணாடிகளை நொருக்கினர். யுனெஸ்கோவினால் வழங்கப்பட்ட விளையாட்டுச் சாமான்களை எல்லாம் நாசமாக்கினர். இப்போது பிள்ளைகளுக்கு விளையாடக் கொடுக்க ஒன்றும் இல்லை."

ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்த முற்போக்கு தொழிற்சங்கம்(பிரகதி) எனப்பட்டதன் கிளைத் தலைவர் பந்துசேன அவரின் ஆதரவாளரான அசித ஆகியோர் அலுபோல தோட்டத்தில் வெட்டிக் கொலை செய்யப்பட்டதைச் சாட்டாகக் கொண்டே இந்த தொழிலாளர் குடியிருப்புக்களை இனவாதிகள் தீயிட்ட முடிந்தது. பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் மாகாண சபை எம்.பி.யான ஆரியசேனவும் வர்த்தகரான எல்.எம்.ஆரியவம்சவும் இந்த கொலைகாரத் தாக்குதலை வழிநடாத்தியதாகத் பலர் தெரிவிக்கின்றனர். இந்தக் குண்டர்கள் 68 ஸ்ரீ 1977 என்ற லொறியில் வந்ததாக தொழிலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

நிலைமை இப்படி இருக்கையில் பொலிசார் குண்டர்களைக் கைது செய்ய எதுவும் செய்யவில்லை. பொலிசாரின் இந்த நடவடிக்கை பற்றி 72 வயதான ஓய்வுபெற்ற தொழிலாளி பீ.கதிரவேல் பின்வருமாறு கூறினார்: "பசறை பங்களாவுக்கு தீ வைத்தனர் என்று கூறி 27 தொழிலாளர்களைக் கைது செய்தனர். எனினும் தொழிலாளர் வசித்த நூற்றுக்கணக்கான வீடுகளைக் கொழுத்தியவர்களை இன்னமும் கைது செய்யவில்லை."

பொலிசார் இனவாதக் குண்டர்களைக் கைது செய்வதை தட்டிக்கழித்துவிட்டு பந்துசேன, அசித ஆகியோரைக் கொலை செய்தது சம்பந்தமாக 7 தோட்டத் தொழிலாளர்களைக் கைது செய்துள்ளனர். அத்தோடு இன்னும் சிலரை சந்தேக நபர்களாக நோக்கி வருகின்றார்கள். இவர்களுள் பெண் தொழிலாளி ஒருவரும் அடங்குவார். கைது செய்யப்பட்டவர்களுள் கருணாநிதி, திலீப்குமார், முருகானந்தன், இராஜமூர்த்தி, முருகையா, கே.பி.வேலு கருணாநிதியின் தாயாரான செல்லம்மா ஆகியோர் அடங்குவர்.

கொலைத் தாக்குதலினாலும் பொலிஸ் வேட்டையினாலும் பத்து தொழிலாளர் குடும்பங்கள் தோட்டத்தை விட்டு ஓடிச்சென்றுள்ளனர். அவர்கள் எங்கு போனார்கள் என்பதை எவரும் அறியார்.

தொழிலாளர் குடும்பங்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினை பற்றி இ.தொ.கா.வின் நிலைப்பாடு என்ன?அவர்கள் எடுத்த நடவடிக்கைகள் என்ன? எனத் தொழிலாளர் பாதை அலுபொலத் தோட்ட இ.தொ.கா.பொதுஜன சேவையாளர் எஸ்.சகாதேவனிடம் கேட்டோம். அதற்கு அவர் வீடுகளை எப்போது அமைத்துக் கொடுப்பார்கள் எனத் திட்டவட்டமாகக் கூறமுடியாது எனத் தெரிவித்தார். கொலைக் குண்டரை கைது செய்வது பற்றிக் கேட்டபோது அவர் பொலிசார் கொலைகாரர்களைக் கைதுசெய்ய முயற்சிக்கின்றார்கள் தான். ஆனால் கைது செய்தாலும் தொழிலாளர் பயம் காரணமாக சாட்சியமளிக்க முன்வரமாட்டார்கள். ஆகையால் அதனால் பலன் இல்லை" என அலட்சியப் போக்கில் பதிலளித்தார். தமது அமைப்பிலுள்ள அங்கத்தவர் தொடர்பாக இந்த விதத்தில் அலட்சியம் காட்டும் இவர்கள் தொழிலாளர்களை வலதுசாரிக் குண்டர்களதும் பொலிசாரினதும் தாக்குதல்களில் இருந்து பாதுகாப்பது எப்படி ஹப்புகஸ்தன்ன தோட்டத்திலடங்கும் பசறைத் தோட்டத் தொழிலாளர்களது கோரிக்கைகளைக் காட்டிக் கொடுப்பதிலும் தொழிலாளருக்கு எதிராக ஒடுக்குமுறையை பற்றி வாயை மூடிக் கொள்வதிலும் இ.தொ.கா.தலைவர்கள் கண்டிப்பாக இருந்து கொண்டுள்ளார்கள். இது அவர்களின் தொழிலாளர் எதிர்ப்பு மனோபாவத்தை எடுத்துக்காட்டுகின்றது. ஏனைய தொழிற்சங்கங்கள் இதற்குச் சற்றும் சளைத்தவை அல்ல.

இந்தத் தொழிற்சங்க அதிகாரத்துவங்களது துரோகம் இச்சங்கங்களின் வங்குரோத்து நிலைமையையும் அவை பகிரங்கமாக பிற்போக்குக்குச் சேவையாற்றுவதையும் எடுத்துக்காட்டுகின்றது.

சோசலிச சமத்துவக் கட்சியும் பெருந்தோட்ட கைத்தொழில் தொழிலாளர் சங்கமும் அலுபொல தோட்டத் தாக்குதல்களுக்கும் பசறை தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான அரச அடக்குமுறைகளுக்கு எதிராக தமது தொழிலாளர் பாதை, கம்கறு மாவத்த பத்திரிகைகளை பிரச்சாரத்தில் இறக்கியுள்ளன. நாம் சகல தொழிலாளர்களையும் இப்பிரச்சாரத்தில் இணையுமாறு தொழிலாளர்களை வேண்டுகின்றோம்.

* இனவாதக் குண்டர்களை உடனடியாக கைதுசெய்!
* தொழிலாளர்களுக்கு எதிரான அரச அடக்குமுறையை நிறுத்து!
* வீடுகளை திரும்பவும் கட்டிக்கொடு!
* தொழிலாளர்களது நலன்புரிச் சேவை உரிமைகளில் கைவைக்காதே!

www.padippakam.com

www.padippakam.com



### தோழர்.கீர்த்தி பாலசூரியவின் 11வது நினைவு தினம்

# கீர்த்தி பாலசூரியவும் அனைத்துலக வாதத்துக்கான போராட்டமும்



கீர்த்தி பாலசூரிய

சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஆரம்பம் தொடக்கம் தனது மறைவு வரை அதன் பொதுச் செயலாளராக விளங்கியவரும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் முக்கிய தலைவர்களில் ஒருவருமான தோழர்.கீர்த்தி பாலசூரிய மறைந்து டிசம்பர் 18ம் திகதியுடன் 11 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றது. தோழர்.கீர்த்தியை ஒரு ட்ரொட்ஸ்கிஸ்டாக நிலைநாட்டிய வேலைத்திட்டம், அடிப்படைக் கொள்கைகளை ஆய்வு செய்வதன் மூலமும் உலக சோசலிசப் புரட்சிக்காகப் போராடுவதன் மூலமுமே அவரை நினைவுகூர முடியும்.

1985ல் அனைத்துலகக் குழுவினுள் ஆதிக்கம் கொண்டிருந்த பப்லோவாத போக்கினரான பிரித்தானிய தொ.பு.க.வி.ன் ஜெரி ஹீலி, மைக் பண்டா, கிளிவ் சுலோட்டர் உட்பட்ட சந்தர்ப்பவாதிகளிடம் இருந்து அனைத்துலகக் குழுவின் பெரும்பான்மைக் குழு பிளவுபட்டது. அதன் மூலம் ட்ரொட்ஸ்கிச வேலைத்திட்டத்தின் மூலம் அனைத்துலகக் குழுவை ஆயுதபாணியாக்கவும் உலக சோசலிச புரட்சிக் கட்சியைக் கட்டியெழுப்புவதைப் பலவீனமாக்கிய சந்தர்ப்பவாதத்துக்கு எதிரான பலம் வாய்ந்த தாக்குதல் தொடுக்கவும் ட்ரொட்ஸ்கிஸ்டுகளுக்கு வாய்ப்புக் கிடைத்தது.

அமெரிக்க வேர்க்கர்ஸ் லீக்கின் தேசியச் செயலாளரான டேவிட் நோர்த் 1982 84 காலப்பகுதியினுள் பிரித்தானிய தொ.பு.க.ட்ரொட்ஸ்கிச வேலைத்திட்டத்தில் இருந்து விலகிச் சென்றதையிட்டு முன்வைத்திருந்த விமர்சனங்களைக் கீர்த்தி 1985 அக்டோபரிலேயே கண்டுகொள்ள முடிந்தது. அந்த விமர்சனங்களை ஆய்ந்ததும் கீர்த்தி அவற்றுடன் தனது உடன்பாட்டைத் தெரிவித்தார். 1985 பிளவின் மூலம் தேசியவாதத்துக்கு எதிராக அனைத்துலகவாத வேலைத்திட்டமும் பின்தங்கிய நாடுகள் தொடர்பான லியொன் ட்ரொட்ஸ்கி முன்வைத்த நிரந்தரப் புரட்சிக் கோட்பாடும் வரலாற்றுச் சடவாதமும் பேணிப் பாதுகாக்கப்பட்டது.

மார்க்சிச வரலாற்றினுள் வேரூன்றிக் கொண்டிருந்த மூலோபாயப் படிப்பினைகளுக்கு தன்னை அர்ப்பணிக்கும் விதத்தில் தோழர்.கீர்த்தி பாலசூரிய பு.க.க.வை வழிநடாத்தினார். இதன் மூலம் ட்ரொட்ஸ்கிச வேலைத்திட்டத்துடனும் அடிப்படைக் கொள்கைகளுடனும் தன்னை இறுக்கமாகப் பிணைத்துக் கொண்டார். சோசலிசத்துக்கான போராட்டம் என்பது ஒரு தொகை கோரிக்கைகளைச் சூழ தொழிலாளர் வர்க்கத்தை அணிதிரட்டுவது மட்டும் அல்ல, முக்கியமாக பிரமாண்டமான மார்க்சிச கலாச்சாரத்தினை தொழிலாளர் வர்க்கத்தினுள் ஸ்தாபிதம் செய்வதாகும்.

தொழிலாளர் வர்க்கம் சுயமாக மார்க்சிச நனவையும் கோட்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டுவிட முடியாது. புரட்சிகர நனவு மார்க்சிச வரலாற்றினுள் வேரூன்றிய சோசலிசத்துக்கான போராட்டத்தினைத் தனது வாழ்க்கையின் மைய இலக்காகக் கொண்ட ஒரு புரட்சிக் கட்சியினாலேயே தொழிலாளர் வர்க்கத்தினுள் எடுத்துச் செல்லப்பட முடியும். கீர்த்தி தனது அரசியல் போராட்டத்தில் அனைத்துலகக் குழுவை கட்டியெழுப்பும் போராட்டத்துக்கு தம்மை அர்ப்பணம் செய்து கொண்டிருந்தார்.

## ட்ரொட்ஸ்கிச பிணைப்பு

கீர்த்தி பாலசூரிய ட்ரொட்ஸ்கிச அரசியல் பக்கம் ஈர்க்கப்பட்டதற்கான சக்திகளை புரிந்து கொள்ள அவர் அரசியலுக்குத் தள்ளப்பட்ட அரசியல் காலப்பகுதியையும் அக்காலப்பகுதியில் அவர் ஈடுபட்டிருந்த பணியையும் ஆய்வு செய்தாக வேண்டும்.

1948 நவம்பர் 4ம் திகதி பிறந்த கீர்த்தி பாடசாலை மாணவனாக இருந்த காலத்தில் கலைத்துறையில் ஈடுபாடுகொண்டிருந்தார். 14வயதில் இருந்து கீர்த்தி எழுதிய கவிதைகள் பத்திரிகையில் வெளிவந்தன. அத்தோடு அவரின் சிறு கதைகளும் சஞ்சிகைகளில் வெளிவந்தன. 15வது வயதில் ஒரு கவிதை ஏட்டை வெளியிட்ட கீர்த்தி "கவுலுவ" என்ற பத்திரிகையின் இணை ஆசிரியராகவும் விளங்கினார்.

அத்தோடு கீர்த்தி கல்வி கற்ற மருதானை ஆனந்தாக் கல்லூரியின் சஞ்சிகைகளிலும் "கவுலுவ" பத்திரிகையிலும் கலை விமர்சனங்களை வெளியிட்டார்.

கீர்த்தியின் பாடசாலை காலத்தில் அவருக்கு முதலில் வாசிக்கக் கிடைத்த ட்ரொட்ஸ்கிச நூல் "கலாச்சாரமும் சோசலிசமும்" என்பதாகும். இந்த நூலில் ஆய்வு செய்யப்பட்ட விஞ்ஞான ரீதியான ஆய்வுகளினால் கீர்த்தி பெரிதும் ஈர்க்கப்பட்டார். கீர்த்தி அரசியல் அரங்கில் காலடி வைத்த காலத்தில் மனித வளங்களையும் கலாச்சாரத்தையும் நாசமாக்கிய பாசிசத்தின் எழுச்சி தொடர்பான காரணிகளை லியொன் ட்ரொட்ஸ்கியின் நூலில் அடிப்படையில் ஆய்வு செய்ததாக அவரின் சமகாலத்தவர் ஒருவர் கூறினார். ஸ்டாலினிசம் ஏகாதிபத்திய நெருக்குவாரம் எனவும் அதற்கு எதிராக நான்காம் அகிலத்தைக் கட்டியெழுப்புவது உடனடிப் பணியாகியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். நான்காம் அகிலத்தின் வேலைத்திட்டத்தை இறுக்கமாகப் பேணிக் கொண்டதும் வேலைத்திட்டத்துடன் பிணைந்து கொண்ட வரலாறு கொண்டதுமான அனைத்துலகக் குழுவினால் கீர்த்தி அந்த அமைப்புக்கு வென்றி கொள்ளப்பட்டார்.

1964ல் ட்ரொட்ஸ்கிஸ்டுகள் எனக் கூறிக்கொண்ட லங்கா சமசமாஜக் கட்சி முதலாளித்துவக் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்தது. இந்த வரலாற்றுக் காட்டிக் கொடுப்பு உலக அரசியல் நிலைமையில் ஒரு பிரிகோட்டை வரைந்தது. இதுகாறும் இலங்கையில் தமிழ் ஒடுக்கப்படும் மக்கள், விவசாயிகள் ல.ச.ச.க.விடம் இருந்து தலைமையை எதிர்பார்த்து வநதனர். அதாவது தொழிலாளர் வர்க்கத்தில் இருந்து கிடைக்கும் தலைமை, பாதுகாப்பு பக்கம் ஈர்க்கப்பட்டு இருந்தனர். 1953 ஹர்த்தாலிலும் 1963ன் 21 கோரிக்கைகள் இயக்கத்திலும் இது நிரூபிக்கப்பட்டது. மேற்சொன்ன காட்டிக்கொடுப்பினால் தொழிலாளி வர்க்கத் தலைமையில் இருந்து தமிழ் ஒடுக்கப்படும் மக்களும் விவசாயிகளும் பிளவுபட்டு குட்டி முதலாளித்துவ பாதைகளுக்குத் தள்ளப்படும் நிலை உருவானது. விவசாயி இளைஞர்கள் குட்டி முதலாளித்துவ அமைப்பின் ஜே.வீ.பி.பக்கமும் தமிழ் இளைஞர்கள் பிரிவினைவாத அமைப்புக்கள் பக்கமும் தள்ளப்பட்டனர்.

சமசமாஜக் கட்சியின் 1964 காட்டிக் கொடுப்பை எதிர்த்து அக்கட்சியின் சிறுபான்மைக் குழு அதிலிருந்து வெளியேறி ல.ச.ச.க.(புரட்சிகர) கட்சியாகியது. பு.க.க.வை அமைப்பதில் முன்னணியில் நின்ற தோழர்.வில்பிரெட் பெரெயிரா அக்கட்சியில் இருந்தவர். இந்தக் காட்டிக் கொடுப்புக்கு எதிரான இளைஞர்களில் கீர்த்தியும் ஒருவர்.

1964 ஜூன் 6ம் 7ம் திகதிகளில் நடந்த சமசமாஜக் கட்சி மகாநாட்டில் சி.ல.சு.க.வுடன் இணைந்து கொள்ளும் பிரேரணை பெரும்பான்மை வாக்குக்களால் நிறைவேறியது. அந்த மகாநாட்டில் கலந்து கொள்ள அனைத்துலகக் குழுவின் பிரித்தானியப் பகுதியான சோசலிச லேபர் லீக்கின் (பின்னர் தொழிலாளர் புரட்சிக் கட்சி) தலைவராக விளங்கிய ஜெரி ஹீலி இலங்கை வந்திருந்தார். அவர் மகாநாட்டில் கலந்து கொள்வது தடைசெய்யப்பட்டபோதிலும் இலங்கையினுள் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதியை கட்டியெழுப்ப அத்திவாரமிடப்பட்டது. நா.அ.அ.கு.வினுள் தலையெடுத்த பப்லோவாத சந்தர்ப்பவாதத்தில் இருந்து 1953ல் பிளவுபட்டதன் வரலாற்று படிப்பினைகளை. புரிந்து கொள்ளாமல் 1964 ல.ச.ச.க.காட்டிக் கொடுப்பினைப் புரிந்து கொள்ள முடியாது என ஹீலி சுட்டிக்காட்டியுள்ளார். 1964 மாபெரும் காட்டிக் கொடுப்பு பப்லோவாதிகளின் கோட்பாட்டின் படி இடம்பெற்றது. ஹீலி பின்வருமாறு சுட்டிக்காட்டினார்:

ல.ச.ச.க. புரட்சிகரக் குழுவின் பிரச்சினைகளை(ல.ச.ச.க.வின்) சீரழிவில் இருந்து பிரிக்க முடியாது. 1953 தொடக்கம் அனைத்துலக இயக்கத்தினுள் இடம்பெற்றது என்ன என்பது பற்றிய பல கலந்துரையாடல்கள் இடம்பெற வேண்டியுள்ளது என்பதை இத்தோழர்கள் அறிவார்கள்.

அனைத்துலக நடவடிக்கைகள் சம்பந்தமாக ஒரு சில வசனங்களும் ஒருசில சிறு குறிப்புக்களும் தவிர பத்து ஆண்டுகாலமாக ல.ச.ச.க.வினுள் எந்த விதமான தீர்க்கமான கலந்துரையாடலும் இடம்பெறவில்லை.(New Letter, July 1964)

அனைத்துலகக் குழுவினுள் இடம்பெற்ற 1953 பிளவினதும் 1963 பிளவினதும் படிப்பினைகளை ஆய்வு செய்து பு.க.க.வை கட்டியெழுப்ப முன்நின்ற குழு, அனைத்துலகக் குழுவுடன் கலந்துரையாடல்களை ஆரம்பித்தது. இந்தக் கலந்துரையாடல்களை ஆரம்பிப்பதில் முன்னின்ற இளைஞர்கள் குழுவில் கீர்த்தியும் இடம்பெற்றிருந்தார். 1966ல் சோசலிஸ்ட் லேபர் லீக்கின்(பிரித்தானியா) ரொனி பண்டாவுடன் நடாத்திய கலந்துரையாடல்களின் பின்னர் வில்பிரெட் பெரெயிராவும் இளைஞர் குழுவும் "விரோதய" (எதிர்ப்பு) என்ற பெயரில் அணிதிரண்டது. 1968 ஜூன் 16ம் திகதி அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதியாக பு.க.க.அமைக்கப்பட்டது. பு.க.க.வேலைத்திட்டத்தை ஸ்தாபிதம் செய்யும் போராட்டத்தில் முக்கிய பணிக்குத் தோள்கொடுத்த கீர்த்தி பாலசூரிய அதன் பொதுச் செயலாளராக தெரிவு செய்யப்பட்டார். அப்போது அவருக்கு வயது 20.

பப்லோவாதிகள் தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகரப் பணியை நிராகரித்தனர். அதற்குப் பதிலாக தேசிய முதலாளி வர்க்கத்துக்கு "முற்போக்கு பாத்திரம்" இருப்பதாகக் கூறிக்கொண்டு சகல குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகளையும் கவர்ந்தனர். சோசலிசப் புரட்சி தொழிலாளர் வர்க்கத்தினுள் ஆதிக்கம் செலுத்தும் முதலாளித்துவச் சிந்தனையின் வெளிப்பாடான ஸ்டாலினிச அதிகாரத்துவத்தை தூக்கிவீசுவதன் மூலம் மட்டுமே இடம்பெறும் என லியொன் ட்ரொட்ஸ்கி வலியுறுத்தினார். பப்லோவாதிகள் முதலாளித்துவ ஆட்சிக்கும் ஸ்டாலினிச உலகுக்கும் இடையேயான மோதுதலைக் கொண்ட சமூக யதார்த்தம் என்ற கோட்பாட்டை முன்வைத்தனர். இதன் மூலம் ஸ்டாலினிஸ்டுகள் இடதுபக்கம் பயணம் செல்வர் எனவும் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் உள்ளிருந்து இடதுசாரி வளர்ச்சி ஏற்படும் எனவும் கூறிக் கொண்டனர். இது சுயசீர்திருத்தத்தை சிருஷ்டிக்கும் என்றனர். இதன்மூலம் எதிர்ப்புரட்சி ஸ்டாலினிச அதிகாரத்துவத்துக்கு எதிரான தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகரப் பணியை புரட்சிகரக் கட்சியின் அரசியல் ரீதியில் சுயாதீனமானதும் தீர்க்கமானதுமான அவசியத்தை நிராகரித்தனர்.

1953ல் இந்த தேசியவாத தடம்புரளலை தோற்கடிக்கவும் ட்ரொட்ஸ்கிச வேலைத்திட்டத்தை ஸ்தாபிதம் செய்யவும் முன்னின்றது அமெரிக்க சோசலிசத் தொழிலாளர் கட்சியின் ஜேம்ஸ்.பீ.கனன். பப்லோவாதத்தில் இருந்து பிரிந்த ட்ரொட்ஸ்கிஸ்டுகள் அனைத்துலகக் குழுவை நிறுவினர். பிடெல் காஸ்ட்ரோவின் அரசியலுக்கு கீழ்ப்படிந்து போன அமெரிக்க சோ.தொ.க.1963ல் அடிப்படைக் கொள்கைகள் பற்றிய எந்த ஒரு கலந்துரையாடலும் நடாத்தாமல் மீண்டும் பப்லோவாதத்துடன் இணைந்து கொண்டது. காஸ்ட்ரோவின் வெற்றி, தொழிலாளர் வர்க்கம் ஆட்சியை கைப்பற்றியதையோ அல்லது சோசலிசப் புரட்சியையோ பிரதிநிதித்துவம் செய்யவில்லை. தீவிரவாத குட்டி முதலாளித்துவத் தலைமை சோசலிசத்தை ஸ்தாபிதம் செய்துவிட முடியாது. சோசலிசத்தின் தலைவிதி அனைத்துலக மார்க்சிச கட்சியினால் நனவான முறையில் வழிநடாத்தப்படும் தொழிலாளர் வர்க்கப் புரட்சியிலேயே தங்கியுள்ளது. 1963ல் ஜெரி ஹீலி இந்நிலைப்பாட்டில் மிகவும் உறுதியாக நின்றுகொண்டிருந்தார்

1971டிசம்பர் 6ம் திகதி பிரித்தானிய சோசலிஸ்ட் லேபர் லீக்கின் ஹீலி, பண்டா, சுலோற்றர் தலைமை வெளியிட்ட அறிக்கையில் பங்களாதேசத்துக்கு இராணுவ, பொருளாதார உதவி வழங்க இந்திய முதலாளித்துவ அரசாங்கம் எடுத்துள்ள முடிவை நாம் விமர்சனத்துடன் ஆதரிப்போம் எனக் கூறி இந்திய தேசிய முதலாளித்துவ அரசாங்கத்திற்கு ஆதரவளித்தது.

ஆனால் தோழர்.கீர்த்தி தலைமையிலான பு.க.க.எடுத்த நிலைப்பாடு வருமாறு: "பங்களாதேசுக்கான போராட்டத்தின் சார்பில் ட்ரொட்ஸ்கிஸ்டுகள் நிபந்தனையின்றியும் உறுதியுடனும் நின்றுவருவதோடு அவர்கள் முக்தி பாஹினி இராணுவம் பாகிஸ்தான் இராணுவத்தை தோற்கடிக்க கிளர்ந்து எழுந்துள்ளனர். பாகிஸ்தான் பாட்டாளி வர்க்கத்தின் பணி, தமது தலைவிதியை பங்களாதேசுக்கான போராட்டத்துடன் இணைத்துக்கொண்டு தமது இராணுவத்தின் தோல்விககாகப் போராடுவதேயாகும் என நாம் கூறுகின்றோம். பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதத்தின் நீண்ட பாரம்பரியங்களைக் கடைப்பிடித்து பாகிஸ்தான் பாட்டாளி வர்க்கம் லெனினிச புரட்சிகர தோற்கடிப்புவாதத்தை கடைப்பிடிக்க வேண்டும். பாகிஸ்தான் ஆளும் வர்க்கம் முன்னெடுக்கும் யுத்தம் தேசிய ஒடுக்குமுறைக்கான யுத்தமாகும். அது ஏகாதிபத்திய சமநிலையின் பேரிலான யுத்தமாகும்" என்றது.

தோழர்.கீர்த்தி இலங்கையில் தமிழ் தேசிய இனத்தவருக்கு எதிரான சிங்கள இனவாத யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து சிங்கள சோவினிச ஆளும் வர்க்கத்துக்கு எதிராக பாட்டாளி வர்க்க புரட்சிகர தோற்கடிப்பு வாதத்தின் அடிப்படையில் இனவாத யுத்தத்தினை எதிர்த்துப் போராடியவர்.

படிப்பகம்

படிப்பகம்

# சில்லி சர்வாதிகாரி பினோச்சேயை கைது செய்வதற்கு காஸ்ட்ரோ எதிர்ப்பு

சில்லியின் மாஜி சர்வாதிகார ஆட்சியாளரான ஒகஸ்டோ பினோச்சே லண்டனில் கைது செய்யப்பட்டதை எதிர்த்து குரல் கொடுப்போர் கும்பலில் கியூபா ஜனாதிபதி பிடெல் காஸ்ட்ரோவும் சேர்ந்து கொண்டுள்ளார். [வோல் ஸ்ரீட் ஜேர்னல்[ செய்தியின்படி சமீபத்தில் காஸ்ட்ரோ வெளியிட்ட அறிக்கை மனித இனத்துக்கு எதிராக இழைக்கப்பட்ட ஒரு தொகை குற்றங்களை அங்கீகரிப்பதாக அமைந்துள்ளது.



காஸ்ட்ரோ

கடந்த காலத்தில் காஸ்ட்ரோவும் பினோச்சேயும் என்றுமே இணக்கம் காணாத இரண்டு எதிரிகளாகச் சித்தரிக்கப்பட்டு வந்துள்ளனர். இந்தச் சித்திரத்தின்படி ஒருவர் புரட்சிக்காகப் போராடுபவர். மற்றையவர் அதே விதத்தில் இருந்து கொண்டுள்ள அமைப்பைக் கட்டிக்காக்க சமரசம் இன்றிப் போராடுபவர். பினோச்சேயின் குற்றங்கள் தொடர்பான காஸ்ட்ரோவின் நியாயப்படுத்தல்கள் பிரித்தானிய, ஸ்பானிய ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளுக்கு காஸ்ட்ரோ காட்டும் அக்கறையோடு முரண்பட்ட முறையில் மோதிக் கொள்கின்றது. பினோச்சே கைது தொடர்பான காஸ்ட்ரோவின் அக்கறை பெரிதும் ஈடாட்டம் நிறைந்தது.

பினோச்சே லண்டனில் கைதுசெய்யப்பட்ட வேளையில் காஸ்ட்ரோ ஸ்பெயினில் சுற்றுலாவில் ஈடுபட்டிருந்தார். அக்டோபர் 20ம் திகதி மெரிடா நகரில் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"உருவாகியுள்ள நிலைமையை மூன்று விதத்தில் நோக்க வேண்டும். முதலாவதாக ஒழுக்கவியல் ரீதியில். ஒழுக்கவியல் நோக்கின்படி கைது செய்வதும் தண்டனை வழங்குவதும் நியாயமானது.

இரண்டாவதாக சட்டப்படி. சட்டத்தின்படி பார்க்கும்போது இந்தக் கைது பிரச்சினைகளை உருவாக்கும் ஆபத்து உள்ளது.

மூன்றாவதாக அரசியல் நோக்கு நிலைப்பாடு. சில்லியினுள் வளர்ச்சி கண்டுள்ள அரசியல் பரம்பரையின் குரலின்படி இந்நடவடிக்கை சிக்கலான சூழ்நிலையை உருவாக்கத் துணைபோகும்.

காஸ்ட்ரோ இழைத்துள்ள குற்றங்கள் தொடர்பாக வெளிநாடு ஒன்றில் அவரையும் கைது செய்து நீதிமன்றத்தின் எதிரில் நிறுத்துவதற்கான சாத்தியம் பற்றி அவரும் கணக்குப் பார்ப்பதை இது பிரதிபலிக்கின்றது. இதையிட்டு பல வெகுஜனத் தொடர்புச் சாதனங்களின் பிரதிநிதிகள் காஸ்ட்ரோவிடம் கேள்வி எழுப்பியபோதிலும் காஸ்ட்ரோ அதில் இருந்து நழுவிக் கொண்டு, பல தசாப்தங்களாக உலகை வலம் வந்தது அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தம்மைக் கொலை செய்ய எடுக்கும் தவிர்க்க முடியாத ஒரு முயற்சி நிலைமையின் கீழாகும் எனப் பதிலளித்தார்.

மூன்றாவது அல்லது அரசியல் நோக்கு தொடர்பான அவரின் ஆய்வு ஊடாகத் தமது முக்கிய கூட்டாளியான சோவியத் யூனியனின் வீழ்ச்சியும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் விதித்துள்ள பொருளாதாரத் தடைகளின் தாக்கத்தின் கீழ் முடமாகிப் போயுள்ள தேசியவாத தீவிரவாத முதலாளித்துவ ஆட்சியாளர்களின் "நிஜ அரசியல்" அம்பலத்துக்கு வந்துள்ளது.

இங்கு நாம் ஸ்பெயினுக்கும் கியூபாவுக்கும் இடையே வளர்ச்சி கண்டுவரும் அரசியல், பொருளாதார உறவுகளை கணக்கில் கொண்டாக வேண்டும். பினோச்சே லண்டனில் கைது செய்யப்பட்ட செய்தி காஸ்ட்ரோவுக்கு முதன்முதலாகக் கிடைத்தது ஸ்பானிய மன்னர் ஜுவான் காலோசுடன் பொதுமக்கள் எதிரில் காட்சி கொடுக்கும் போது எனத் தெரிய வருகின்றது. சமீபத்தில் ஐபீரியன் குடாநாட்டில் நடைபெற்ற ஐபீரிய அமெரிக்க மாநாடு அந்நாடுகளுக்கு இடையே வளர்ச்சி கண்டுவரும் பொருளாதார, அரசியல் உறவுகளையிட்டு காஸ்ட்ரோவுக்கும் ஸ்பானியப் பிரதமர் அஸ்னருக்கும் இடையேயான கலந்துரையாடலுக்கான ஒரு சந்திப்பாக அமைந்தது.

காஸ்ட்ரோவின் ஐரோப்பிய சுற்றுலாவின் சில கிழமைகளுக்குப் பின்னர் 70 ஸ்பானிய வர்த்தகர்களைக் கொண்ட ஒரு குழு கியூபா சென்றது. இதற்குக் காஸ்ட்ரோவின் பழைய நண்பரான கார்சியன் அரசாங்கத்தின் முக்கியஸ்தரான மனுவேல் பிரபா தலைமை தாங்கினார். இந்த வலதுசாரி பழம் பிராங்கோவாதி, ஸ்பானிய பாசிச தலைவர்களுக்கு எதிரான வழக்குகளில் அவர்களைப் பாதுகாக்கும் பொருட்டு ஸ்தாபிதம் செய்யப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தின் முக்கியஸ்தராகப் பேர்போனவர்.

ஸ்பானிய முதலாளித்துவம் கியூபன் பொருளாதாரத்தினுள் முக்கிய பாத்திரத்தினை வகிப்பதோடு கியூபன் சுற்றுலா கைத்தொழிலின் அபிவிருத்தி சம்பந்தமாக ஸ்பானிய ஆட்சியாளர்களின் முதலீடு இங்கு முக்கியமானது.

லத்தீன் அமெரிக்க சமூகப் புரட்சியின் பிரேரிப்பாளராக தோன்ற வந்த கியூபாவின் தலைவர், சில்லியினுள் இருந்து கொண்டுள்ள வலதுசாரி எதிரிகளுக்கும் தாம் அங்கீகரிக்கும் இடதுசாரிகளுக்கும் ஆலோசனை ரீதியில் எதிர்ப்புத் தெரிவிப்பதன் மூலம் சில்லியினுள் தோன்றியுள்ள திட்டவட்டமான சூழ்நிலை பற்றி தமது கருத்தை வெளியிட்டார்:

"முதலாவதாக இராணுவத்தை கவனத்தில் கொள்ள வேண்டும். அது இந்நாட்டினுள் பலம் வாய்ந்த பணியை இட்டுநிரப்பும் ஒரு நிறுவனமாகும். திட்டவட்டமாகச் சொன்னால் அது கைது செய்யதலைக் கடுமையாக எதிர்க்கும் சிவில் அதிகாரிகளிடம் இருந்தும் சகல வெகுஜனத் தொடர்புச் சாதனங்களில் இருந்தும் பினோச்சேயை விடுதலை செய்வதை கருத்தில் கொண்டு பணியாற்றும்படி சிவில் அதிகாரிகளை வேண்டும்...

"மறுபுறத்தில் பாராளுமன்றம். அது வலதுசாரி ரீதியில் நிச்சயம் பினோச்சேய்க்கு வாய்ப்பான நிலைப்பாட்டை எடுக்கும். இதற்கிடையே கூட்டரசாங்கத்தினுள் இருந்து கொண்டுள்ள இடதுசாரிகள் மிகவும் கஷ்டமான நிலைமைகளினுள் ஒத்துழைப்பு வழங்குவதா இல்லையா என்பதைத் தாமே தேடிக் கொள்வர். அவர்கள் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கவே வாய்ப்புள்ளது. அப்படி இல்லையேல் கூட்டரசாங்கம் சிதறுண்டு போக இது காரணமாகிவிடும்.

"கூட்டரசாங்கம் சிதறுண்டு போவதற்கான ஆபத்து இருந்து கொண்டுள்ளதாக நான் நினைக்கின்றேன். அதுவும் மறைந்து கொண்டுள்ள ஒரு ஆபத்தாகும்.... அது வலதுசாரிகளை பொதுவில் பலப்படுத்துவதாகும். என்ன நடக்கும்? வலதுசாரிகள் ஒன்று சேர்ந்து இடதுசாரிகள் பிளவுபட்டுப் போவதன் மூலம் சில்லியினுள் ஒரு இக்கட்டான சூழ்நிலை உருவாகும்."

காஸ்ட்ரோவின் இந்த ஆய்வின்படி சில்லியின் இடதுசாரிகள் மாஜி.சர்வாதிகாரியை விடுதலை செய்யும்பொருட்டு இராணுவத்துக்கும் கிறிஸ்தவ ஜனநாயகவாதிகள் தலைமையிலான அரசாங்கத்துக்கும் ஆதரவளிக்கும்படி ஆலோசனை வழங்குவர். காஸ்ட்ரோவின் ஆலோசனையை ஏற்றாலும் சரி விட்டாலும் சரி சில்லியன் சோஷலிசக் கட்சி சில்லியன் இறைமையின் பேரில் பினோச்சேயை பாதுகாக்க ஏற்கனவே தயாராக உள்ளது.

பாராளுமன்ற நடைமுறைகளைக் காக்கும் பேரில் இடதுசாரிகளுக்கும் வலதுசாரிகளுக்கும் இடையே ஐக்கியத்துக்கு வழங்கும் ஆலோசனைகள் இராணுவத்தின் உணர்வுகளை கணக்கில் கொள்ளும் விதத்தில் செய்யும் வேண்டுகோளின் மூலம் மாஜி.சர்வாதிகாரியைப் பேண காஸ்ட்ரோ வழங்கும் ஆதரவானது கடந்த பல தசாப்தங்களாக லத்தீன் அமெரிக்காவினுள் அவரின் சேர்க்கையை அம்பலப்படுத்தியுள்ளது.

கியூபாவில் ஜூலை 26 இயக்கத்தின் வெற்றியோடு பிடெல் காஸ்ட்ரோவினாலும் ஏர்னஸ்டோ சே குவேராவினாலும் அபிவிருத்தி செய்யப்பட்டு வளர்க்கப்பட்ட கெரில்லா விதிமுறைகளினால் தவறான வழிகளில் தள்ளப்பட்ட லத்தீன் அமெரிக்க இளம் தலைமுறையினர் "கெரில்லாவாதம்" "ஆயுதப் போராட்டம்" பாதையில் தள்ளப்பட்டதோடு பல காலத்துக்கு முன்னர் இந்தப் பிராந்தியத்தினுள் காஸ்ட்ரோ ஏகாதிபத்திய, முதலாளித்துவ ஆட்சியாளர்களின் முதலீடுகளுக்கான கதவுகளைத் திறந்துவிட்டார்.



பினோச்சேயுக்கு எதிராக மார்ச்சுபட்டில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம்

காஸ்ட்ரோ சில்லியன் ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சியுடன் சேர்ந்து அங்கு சோசலிசப் புரட்சியை தடம்புரளச் செய்யும் பொருட்டு முக்கிய பாத்திரத்தை வகித்தார். சில்லித் தொழிலாளர் வர்க்கத்தின் உச்சக் கட்டத்திலும் பெரிதும் போர்க்குணம் நிறைந்த தொழிலாளர் பகுதியினர் அன்றிருந்த ஜனாதிபதி சல்வடோர் அலன்டேயின் மக்கள் முன்னணி அரசாங்கத்துடன் நேருக்கு நேர் மோதிக் கொண்ட தருணத்தில் 1971 நவம்பரில் சில்லியில் சுற்றுப்பயணம் செய்த காஸ்ட்ரோ சுயாதீனமான ஒரு புரட்சிகரப் போராட்டம் வளர்ச்சி பெறுவதற்கு எதிரான ஆலோசகர் சேவையில் ஈடுபட்டார். அவர் கியூபன் தொழிலாளர்களுக்கு சில்லி, கியூபாவில் இருந்து வேறுபட்டது எனப் போதித்தார். "ஏனெனில் சில்லிக்கு நீண்ட வரலாறு படைத்த அரசியலமைப்பு ரீதியான அரசாங்கம் உள்ளது. பாராளுமன்றப் பாதையூடாக சோசலிசத்துக்கு செல்லக் கூடியதாக இருப்பது தெளிவானது." என காஸ்ட்ரோ தெரிவித்தார். அதை சோசலிசத்துக்கான "சில்லியன் பாதை" என வேறுபடுத்திக் காட்டினர்.

அத்தோடு காஸ்ட்ரோ இராணுவத்துக்கும் படுபிற்போக்கு வலதுசாரி கட்சிகளுக்கும் உள்நாட்டு யுத்தத்துக்கு ஆயத்தமாகுவது பற்றி ஆலோசனை வழங்கியதோடு அதன் ஒரு பாகமாக அலன்டே அரசாங்கம் வளர்ச்சி கண்டுவந்த தொழிலாளர், விவசாயிகளின் பலம்வாய்ந்த வெகுஜன இயக்கத்தின் குரல்வளையை நசுக்கவும் செயற்பட்டது.

1973 சதியின் மூலம் இராணுவம் ஆட்சியை பிடுங்கிக் கொள்வதற்கு ஒரு மாதத்துக்கு முன்னர் இந்த அரசியலமைப்புச் சட்டவாதத்தின் கீழ் "ஜனநாயகம்" "தேசபக்த இராணுவம்" என்ற வாதங்கள் மூலம் பொதுமக்கள் குழப்பியடிக்கப்பட்டு இருந்தனர்.

இந்நிலைமையில் ஜனாதிபதி அலன்டே தமது அன்புக்குரியவரான ஜெனரால் அகஸ்டோ பினோச்சேயையும் உள்ளடக்கிய இராணுவத் தளபதிகளைக் கொண்ட தேசிய பாதுகாப்பு அமைச்சரவையை நிறுவினார். இந்த நிலைமையினுள் சில்லி இராணுவம் சட்டவிரோதமான ஆயுதங்களைத் தேடும் சாட்டில் தேசிய ரீதியில் பட்டறைகள், வீடுகள் கொண்ட பிராந்தியங்களை முற்றுகையிட்டு தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை பயங்கரத்துக்குள்ளாக்கியது.

1973 செப்டம்பர் 11ம் திகதி சதியின் மூலம் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றிய போது தொழிலாளர் வர்க்கம் அரசியல் ரீதியிலும் உடல் ரீதியிலும் நிராயுதபாணியாக்கப்பட்டு இருந்தது. அடுத்துவந்த குறுகிய காலத்தினுள் பினோச்சேயின் பேர்போன சித்திரவதை உதைபந்தாட்டத் திடலிலும் மற்றும் சித்திரவதைக் கூடங்களிலும் ஆயிரமாயிரம் தொழிலாளர்கள் கொலை செய்யப்பட்டனர். அல்லது காட்டுமிராண்டித்தனமான சித்திரவதைகளுக்கு உள்ளாகினர். அலன்டேயினதும் காஸ்ட்ரோவினதும் பாராளுமன்ற பாதை தொழிலாளர் வர்க்கத்துக்கு ஈட்டிக் கொடுத்த தலைவிதி இதுவே என்பதை வரலாறு நிரூபித்துள்ளது.

www.padippakam.com

www.padippakam.com



# இந்திய மாநிலத் தேர்தலில் பாரதீய ஜனதா கட்சி தோல்வி

அருண் குமார்

இந்தியாவில் கடந்த நவம்பர் 25ம் திகதி நடைபெற்ற நான்கு மாநிலங்களுக்கான சட்டசபைத் தேர்தலில் இந்திய ஆளும் கூட்டரசாங்கத்தின் தலைமைக் கட்சியான இந்து சோவினிச பாரதீய ஜனதா கட்சி படுதோல்வி கண்டுள்ளது. பல அரசியல் ஆய்வாளர்களால் ஒரு குட்டிப் பொதுத் தேர்தலாக அழைக்கப்பட்ட இதில் ஏற்பட்ட இந்தப் பின்னடைவு பாரதீய ஜனதாக் கட்சி தலைமையிலான 18 கட்சிகள் கூட்டரசாங்கத்தின் ஆயுளை மீண்டும் கேள்விக் குறியாக்கியுள்ளது.

தேசிய தலைநகர் பிராந்தியத்தை உள்ளடக்கிய டில்லியிலும் வறுமையில் தோய்ந்து போயுள்ள இராஜஸ்தானிலும் பா.ஜ.க.அரசாங்கத்தினர் படுதோல்வி கண்டுள்ளதோடு இந்தியாவின் பாரம்பரிய ஆளும் கட்சியான காங்கிரஸ் கட்சி ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டுள்ளது. நீண்டகாலமாக ஒரு பா.ஜ.க. கோட்டையாக விளங்கிவந்த டில்லியில் காங்கிரஸ் கட்சி மொத்தமாக உள்ள 70 ஆசனங்களில் 51 ஆசனங்களை வெற்றிகொண்டுள்ளது. இராஜஸ்தானில் காங்கிரஸ் 200 மாநில சட்டசபை ஆசனங்களில் நான்கில் மூன்று பங்கைக் கைப்பற்றிக் கொண்டுள்ளது.

நவம்பர் கடைசி வாரத்தில் தேர்தல் நடந்ததும் இந்த நான்கு மாநிலங்களிலும் சனத்தொகை கூடியது மத்தியப் பிரதேசத்தில் ஆட்சியில் இருந்து கொண்டுள்ள காங்கிரஸ் அரசாங்கம் மீண்டும் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிக்கு வந்துள்ளது. இந்தத் தேர்தல்களுக்கு முன்னோடியாக பா.ஜ.க.மத்திய பிரதேசத்தில் ஆட்சியில் உள்ள காங்கிரசை தாம் ஆட்சியில் இருந்து தூக்கிவீசிவிடுவோம் எனக் கூறிவந்தது. ஆனால் உண்மையில் அது 320 அங்கத்தவர்களைக் கொண்ட இந்த மாநில சட்ட சபையில் அதன் அங்கத்தவர்கள் எண்ணிக்கையை வெறும் மூன்றால் மட்டுமே-120-கூட்டிக் கொள்ள முடிந்துள்ளது.

சிறிய வட-கிழக்கு மாநிலமான மிஸோராமில் ஆளும் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் சிறிய பிராந்தியக் கட்சிகளின் கைகளால் தோற்கடிக்கப்பட்டனர். மிஸோ தேசிய முன்னணியும் மிஸோ மக்கள் மகாநாட்டுக் கட்சியும் முறையே 20. 13 ஆசனங்களை வெற்றிகொண்டன. மிஸரோம் சட்டசபையில் மொத்தமாக உள்ள 40 ஆசனங்களில் காங்கிரஸ் கட்சி 6 ஆசனங்களை மட்டுமே வெற்றி கொள்ள முடிந்தது. இந்து சோவினிச பாரதீய ஜனதா கட்சி இந்த மிஸோராமில் 12 ஆசனங்களில் போட்டியிட்டபோதிலும் அது ஒரு அரசியல் சக்தியாக வெளிப்பாடாகவில்லை. இம்மாநிலத்தின் சனத்தொகையில் 84 வீதத்தினர் கிறிஸ்தவர்கள்.


## விலைவாசி உயர்வு

உணவுப் பொருட்களின் விலைவாசி அதிகரிப்பினால்-சிறப்பாக மரக்கறி வகைகளின் விலைஉயர்வினால்-பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ள கசப்பு, பாரதீய ஜனதா கட்சிக்கு எதிரான முக்கிய திருப்பம் ஏற்படக் காரணமாக விளங்கியது. பெரும்பாலான இந்திய உணவுவகைகளில் முக்கியமாக இடம்பெறும் வெண்காயத்தின் விலை கடந்த ஆண்டில் ஆறுமடங்குக்கு மேலாக உயர்ந்துள்ளது. இந்தியாவில் இருந்துவரும் பெரும் வறுமை காரணமாக உணவுப் பொருட்களின் விலைவாசி உயர்வும் தட்டுப்பாடும் கோடானுகோடி மக்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்தாது போனாலும் இலட்சோப இலட்சம் மக்களின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

பா.ஜ.க.வின் தேர்தல் தோல்விக்கான இரண்டாவது காரணி, இந்தியாவின் சிறுபான்மை மதக்குழுக்களுக்கும் தாழ்த்தப்பட்ட ஜாதிகளுக்கும் எதிரான பாதுகாப்பற்ற நிலைமையின் வளர்ச்சியாகும். இவர்கள் பா.ஜ.க.வின் சோவினிச நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வரலாற்றுரீதியில் ஒடுக்கி நசுக்கப்பட்டனர். 1992-93ல் மும்பாயில்(பம்பாய்) இனவாத கலகத்தை மகாராஷ்டிர பா.ஜ.க.-சிவசேனை கூட்டரசாங்கம் தூண்டிவிட்டது என்ற குற்றச்சாட்டினைக் கொண்ட பகிரங்க விசாரணை கமிட்டி அறிக்கையை குழிதோண்டிப் புதைப்பதில் பா.ஜ.க..அதன் மகாராஷ்டிர கூட்டாளியான சிவசேனையுடன் சேர்ந்து கொண்டது. கடந்த கோடைக் காலத்தில் பாரதீய ஜனதாக் கட்சியின் டில்லி மாநில அரசாங்கம், பெரும் வைபவங்களில் "வைனின்" பாவனைக்கான கிறிஸ்தவ ஆலயங்களின் மத உரிமைகளைப் பறிக்கப் போவதாக பயமுறுத்தியது. பா.ஜ.க.வுடன் அணிதிரண்ட ஒரு அமைப்பான விஸ்வ ஹிந்து பர்ஷாத்தின் தலைவர் மத்திய பிரதேசத்தில் கிறிஸ்தவ கன்னியாஸ்திரிகள் கற்பழிப்புச் செய்யப்பட்டதை பகிரங்கமாக நியாயப்படுத்தியிருந்தார்.

இந்திய அரசியல் அரங்கில் சிறுசக்தியாக விளங்கிய பாரதீய ஜனதா கட்சி பலம் பெறத் தொடங்கியது, உயர்ந்த தீர்வை விதிப்புக்களையும் பெரும் அரசாங்கத் துறையையும் சோவியத் யூனியனுடனான ஒரு சிறப்புரிமை கொண்ட பொருளாதார உறவுகளையும் அடிப்படையாகக் கொண்ட காங்கிரஸ் தேசிய முதலாளித்துவ அபிவிருத்தி திட்டங்கள் சிதறுண்டு போகத் தொடங்கிய 1980பதுகளின் அரைஇறுதிக் காலப்பகுதியிலாகும்.பா.ஜ.க. அரச செலவினங்களைக் குறைக்கும்படியும் மேற்கத்தைய நுகர்வுப் பண்டங்களுக்குக் கதவுகளைத் திறந்துவிடும்படி கோருவதிலும் முன்னணியில் நின்றது. இதேசமயம் இவர்கள் அதிகரித்துவரும் சமூக சமத்துவமின்மையையும் பொருளாதார நெருக்கடியையும் அடிப்படையாகக் கொண்ட பதட்ட நிலைக்கு முஸ்லீம்களையும் மற்றும் சிறுபான்மையினர்களையும் பலிகடாக்கள் ஆக்குகின்றனர். 1988 தேர்தல்களில் பா.ஜ.க. தேர்தல் வாக்காளர்களின் சகல தரப்பினருக்கும் வேண்டுகோள் விடுக்கும் விதத்தில் பொருளாதார "சீர்திருத்தத்தை" முன்னெடுப்பதாக வாக்குறுதி அளிக்க முயன்றனர். இந்தத் திட்டத்தின் கீழ் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் சுரண்டலுக்கு கதவுகளைத் திறந்துவிட்ட அதேசமயம் "சுதேச" அல்லது "சுதேசிய" பொருளாதார அபிவிருத்தியை புத்துயிர் பெறச் செய்வதாகவும் உத்தரவாதம் அளித்தனர்.

கடந்த மேயில் 25 ஆண்டுகளில் இந்தியா மேற்கொண்ட முதலாவது அணுக்குண்டு பரிசோதனையின் இலக்கு புதிய ஆளும் கூட்டரசாங்கத்தினுள் பா.ஜ.க.யின் நிலைப்பாட்டைப் பலப்படுத்துவதும் சோவினிசத்தை பகிரங்கமாகத் தூண்டிவிடுவதுமாகும். இது தனியார்மயமாக்க புதிய அலைக்கும் உணவு, உரம் , மற்றும் உபமானியங்கள் வெட்டுக்குமான ஒரு திரையாகப் பயன்படுத்தப்படமுடியும். இந்த அணுவாயுத பரிசோதனைகள்-சிறப்பாக பாகிஸ்தான் நேரில் பதிலளித்ததன் பின்னரும், அமெரிக்காவும் மற்றும் மேற்கத்தைய சக்திகளும் பொருளாதாரத் தடைகளை விதித்ததன் பின்னரும் ஒரு தேசியவாத வாடையைத் தூண்டிவிட்டது. ஆனால் பெரும் வர்த்தக நிறுவனங்களை உஜாரிழக்கச் செய்யும் வகையில் பா.ஜ.க.அதன் வலதுசாரி சமூக-பொருளாதார வேலைத்திட்டத்தில் முன்னேற்றம் காணமுடியாது போய்விட்டது.




காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியுடன் சீபீ(எம்) தலைவர் ஜோதி பாசு

இதற்குக் காரணம் பொதுமக்களின் எதிர்ப்பும் கூட்டரசாங்கத்தை கலக்கிய பிராந்திய மற்றும் கோஷ்டி இழுபறிகளேயாகும்.

கடந்த மாநிலத் தேர்தல்கள் பா.ஜ.க.வின் முக்கிய அரசியல் பலவீனத்தையும் இனவாதக் கூச்சல்களின் வெற்றுவீச்சையும் எடுத்துக்காட்டின. பா.ஜ.க.வின் சோவினிச எதிர்க் கூச்சல்களுக்கிடையேயும் இந்து, முஸ்லீம் தொழிலாளர்களும் விவசாயிகளும் பொதுச் சமூகப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். "இந்து" இந்தியா கோஷம் வர்க்க முரண்பாடுகளால் சிதறுண்டு போயுள்ளது. "இந்தியா ருடே" சஞ்சிகை குறிப்பிட்டது போல் —

"பா.ஜ.க.க்கு எதிரான பரந்த அளவிலான பொதுஜன வெறுப்பு பல தசாப்த கால ஆட்சியின் மூலம் இந்து சோவினிசத்திற்கும் சாதிவாதத்துக்கும் பிராந்தியவாதத்துக்கும் இந்தியா அனைத்துலக மூலதனத்தின் கட்டளைகளுக்கு கீழ்ப்படுவதையும் உக்கரமாக்கிய காங்கிரஸ் கட்சியின் தேர்தல் வெற்றிக்கு வழிவகுத்தது."

இது தொழிலாளர் வர்க்கம் ஒரு புதிய அரசியல் தகவமைவினை ஏற்படுத்திக் கொள்வதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டுகின்றது.

இங்கு இந்திய ஸ்டாலினிசக் கட்சிகளான இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும்(சீ.பீ.ஐ) இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும்(சீ.பீ.எம்) மிகவும் தீர்க்கமானதும் கண்டனத்துக்குரியதுமான பாத்திரத்தினை வகிக்கின்றன.பல தசாப்தங்களாக இவை தொழிலாளர் வர்க்கத்தை காங்கிரஸ் கட்சிக்கும் பல்வேறு முதலாளித்துவக் கட்சிகளுக்கும் கீழ்ப்படுத்தச் செயற்பட்டுவந்தன. தேசிய முதலாளி வர்க்கத்தின் "முற்போக்குக்" கன்னையுடன் சேர்ந்து ஜனநாயகப் புரட்சியினைப் பூர்த்தி செய்யும் வரையில் சோசலிசத்துக்கான போராட்டம் காத்திருக்க வேண்டும் என இவர்கள் கூறிவந்தனர். கடந்த காலத்தில் ஸ்டாலினிஸ்டுகள் காங்கிரஸ் கட்சியின் "தேசிய வேலைத்திட்டங்கள்" ஏகாதிபத்திய எதிர்ப்பு நிறைந்தவை எனக் கூறி அவற்றுக்கு ஆதரவளித்தனர். இப்போது சீ.பீ.ஐ., சீ.பீ.எம். இரண்டும் காங்கிரசைத் திரும்ப ஆட்சிக்குக் கொணர அதற்கு ஆதரவளிக்கும்படி பொதுமக்களை வேண்டுகின்றனர். இனவாதத்துக்கு எதிரான இறுதி தடைக்கல் அதுதான் என இவர்கள் கூறிக்கொள்கின்றனர்.

வட இந்திய மாநில சட்டசபைகள் மூன்றிலும் காங்கிரஸ் அதிகாரத்தைச் சுவீகரித்துக் கொண்டுள்ள போதிலும் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி, மத்தியில் ஒரு அரசாங்கத்தை அமைப்பது பற்றி ஒரு தொலைக்காட்சி பேட்டியாளரின் செவ்விக்கு பதிலளிக்கையில் "நிலைமைகளின் அபிவிருத்தியுடன் நாம் யோசிப்போம்" என்றுள்ளார். பா.ஜ.க..அரசாங்கத்தை வீழ்த்த காங்கிரஸ் கொள்கையால் முடியாது போயிற்று ஆனால் "நாம் அதற்குக் காத்திருக்க வேண்டியுள்ளது."எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.இதைத் தொடர்ந்து காங்கிரஸ் செயற்குழு இரண்டு பிராந்திய எதிர்க் கட்சிகள் பா.ஜ.க..அரசாங்கத்துக்கு எதிராகக் கொணர்ந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவளிப்பதில்லை என்பதற்கு சார்பாக வாக்களித்தது.

காங்கிரஸ் கட்சியினால் கீறப்பட்ட கோட்டைத் தாண்ட தாம் தயார் இல்லை என்பதைக் காட்டும்பொருட்டு சீ.பீ.ஐ.தலைவர்களும் கூட இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் வாக்களிப்பதில்லை என முடிவுசெய்தனர். காங்கிரஸ்காரர்கள் இந்த விடயத்துக்கு சூடுகொடுப்பதையிட்டு எந்த விதமான பிரச்சினையும் இருக்கமுடியாது: பாரதீய ஜனதா கட்சி அரசாங்கம் வீழ்ச்சியடையும். இன்றைய கூட்டரசாங்கத்தில் பா.ஜ.க.வுக்கு அடுத்ததாக பெரும் கட்சியான-ஒரு தமிழ் தேசியவாதக் கட்சியான அனைத்திந்திய அண்ணா தி.மு.க., காங்கிரஸ் தலைமையிலான ஒரு கூட்டரசாங்கத்துக்கு மாறிச் செல்லத் தனது தயார்நிலையைத் தொடர்ந்து காட்டிவந்துள்ளது.

ஊழல்களுக்கும் முறைகேடான ஆதரவுகளுக்கும் பேர்போன ஒரு கட்சியான காங்கிரஸ் ஆட்சிக்கு உடனடியாக உரிமைகோராது விட்டதற்குப் பல காரணங்கள் உள்ளன. இன்றைய பா.ஜ.க.ஆட்சியாளர்களைப் போலவே ஒரு காங்கிரஸ் அரசாங்கமும் ஒரு தொகை குட்டி, பிராந்திய, ஜாதி அடிப்படை கட்சிகளில் சார்ந்திருக்க வேண்டியிருக்கும். ஏனெனில் பாராளுமன்ற எண்கணிதம் அந்த விதத்தில் இருந்து கொண்டுள்ளது. ஒரு அரசாங்கத்தை அமைப்பதற்கு முன்னர் காங்கிரஸ் கட்சி எவ்வளவுக்கு எவ்வளவு தாமதிக்கின்றதோ அவ்வளவுக்கு அதன் பலம் அதிகரிக்கும். அது அரசாங்கத்தை அமைத்துக் கொள்ளும் வழியில் இறங்கின் இன்றைய பாராளுமன்றத்தினைக் கலைத்து ஒரு இடைக்காலத் தேர்தலை நடாத்தும்படி ஜனாதிபதியை நெருக்க வேண்டியிருக்கும். இறுதியாக கிழக்கு ஆசிய பொருளாதார நெருக்கடி, அதிகரித்தவிதத்தில் இந்தியா மீது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. டிசம்பர் முதல் வாரத்தில் இந்திய நிதி அமைச்சர் யஸ்வர் சிங், அரசாங்க வருமானத்திலான பற்றாக்குறை 1991ல் போன்று இந்தியாவை ச.நா.நி.யிடம் அவசரகால நிதி உதவி கேட்கத் தள்ளும் எனத் தெரிவித்தவர்களைப் பகிரங்கமாக கண்டனம் செய்யத் தள்ளப்பட்டார். பொருளாதார நிலைமை மேலும் சிக்கலாகும் வரை பா.ஜ.க.வை ஆட்சியில் வைத்திருப்பது தனக்கு இலாபமானது எனக் காங்கிரஸ் கட்சித் தலைமை கணித்துக் கொண்டுள்ளது.

பாரதீய ஜனதா கட்சி பொருளாதார "தாராண்மைமயமாக்கத்தை" முன்னெடுப்பதாக வாக்குறுதியளித்ததன் மூலம் தேர்தல் முடிவுகளை பிரதிபலித்துக் கொண்டுள்ளது. இந்திய வர்த்தக, கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் தேர்தல் முடிவுகள் அரசாங்கம் "கண்டிப்பான தீர்மானங்கள்" எடுப்பதை தாமதிக்கச் செய்யுமோ என அஞ்சுவதாகத் தெரிவித்த ஒரு சில மணித்தியாலங்களுள் பிரதமர் அடல்பிகாரி வாஜ்பாய் "இன்றைய ஜனநாயக நாடகம்" இந்த அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலில் அடிப்படைத் தாக்கத்தை ஏற்படுத்திவிடாது எனப் பிரகடனம் செய்துள்ளார்.

இரண்டு ஸ்டாலினிசக் கட்சிகளுடனும் காங்கிரஸ் கட்சியுடனும் இணைந்த தொழிற்சங்க சம்மேளனங்கள் டிசம்பர் 10ம் 11ம் திகதிகளில் தனியார்மயமாக்கத்திற்கும் அரசாங்கத்துறைக் கம்பனிகளை இழுத்து மூடுவதற்கு எதிராகவும் ஒரு அகில இந்திய வேலைநிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்துள்ளன. தொழிற்சங்க அதிகாரத்துவங்களைப் பொறுத்தமட்டில் இந்த வேலைநிறுத்தம் ஒரு அரசியல் செப்படிவித்தை. இதன் சிக்கலான தன்மையை பூசிமெழுகுவதையும் இதன் கூட்டுகள் மூலதனம் வேண்டி மறுசீரமைப்பு நடவடிக்கைகளை அமுல் செய்வதையும் இலக்காகக் கொண்டது. தனியார்மயமாக்க வேலைத்திட்டம் நரசிம்மராவ் அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டு ஸ்டாலினிஸ்டுகள் ஆதரவுடன் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் தொடரப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



# இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள்

விஜே டயஸ்

பாகம்–16

இந்திய ஆளும் வர்க்கம் இலங்கை அரசியல் நெருக்கடியில் தலையிட முடிவு செய்ததற்குக் காரணம் தமிழ் மக்கள் முகம் கொடுத்த அடக்குமுறையினால் ஏற்பட்ட கருணையோ அல்லது தமிழ் முதலாளித்துவத் தலைவர்களின் நெருக்குவாரத்தின் பேரில் ஏற்பட்டதோ அல்ல. தமிழர் எதிர்ப்பு அடக்குமுறையும் தமிழ் முதலாளித்துவ தலைவர்களின் பயணமும் இந்தியத் தலையீட்டுக்கான வழிசமைத்துக் கொடுத்தது.

1976ல் இந்தியாவில் ஆட்சிக்கு வந்த வலதுசாரி ஜனதா அரசாங்கத்தைத் தோற்கடித்து 1979ல் திரும்பவும் ஆட்சியை அமைத்துக் கொண்ட காங்கிரஸ் கட்சிக்கும் பிரதமர் இந்திரா காந்திக்கும் தமது கேடுகெட்ட அவசரகால ஆட்சியின் இரத்தக் கறையை கழுவித்துடைப்பதற்கு ஒரு தீவிரவாத மாறுவேடம் தேவையாக இருந்தது. அத்தகைய ஒரு மாறுவேடத்துக்கு இதைவிட அவசியமான இன்னொரு காரணமும் இருந்து கொண்டிருந்தது. ஜனதா கட்சி அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டு முடிமறைக்கப்படாத ஏகாதிபத்தியச் சார்பு வேலைத்திட்டத்தில் இருந்து மாறுபட்ட வேலைத்திட்டம் எதுவும் அதனிடம் எஞ்சியிருக்கவில்லை. அது உலகப் பொருளாதார, அரசியல் நிலைமையினால் ஏற்பட்டு வந்த மாற்றம் கண்ட தன்மையினால் நிர்ணயம் செய்யப்பட்டது. இந்தியப் பொருளாதாரத்தை ஏகாதிபத்திய ஏகபோகங்களுக்கு திறந்துவிடும் அதேசமயம் துணைக்கண்டப் பிராந்தியத்தில் முன்னணிப் பொலிஸ்காரனாக நின்று சோவினிச அலையின் மூலம் பொதுஜன எதிர்ப்பைக் கழுவித் துடைத்துவிட இந்திரா காந்தி யோசித்தார். வடக்கில் காஷ்மீர் பிரச்சினைக்கு மேலாக பஞ்சாப் காலிஸ்தான் பிரச்சினையும் அவளுக்கு வழியமைத்துக் கொடுத்தது.

இலங்கையில் தோன்றிய அரசியல் நெருக்கடியில் இந்திய ஆட்சியாளர்கள் செய்து கொண்ட தலையீட்டை "இந்திய விஸ்தரிப்புவாதமாகக்" காட்ட ஜே.வி.பி. உள்ளடங்கலான சிங்கள இனவாதிகள் துள்ளிப் பாய்ந்தனர். இந்தியா ஏகாதிபத்தியவாதிகளின் சிலேடைக்கு கட்டுண்டு போய்க் கிடந்த ஒரு அரசாகும். இப்போது பொருளாதாரத்திலும் அவ்வாறே அரசியலிலும் ஆதாளபாதாளத்தில் குமிபறிந்து போயுள்ள ஏகாதிபத்திய வல்லரசுகளுடன் போட்டியிட்டு தமது காலனித்துவ விதிமுறைகளைக் கடைப்பிடிக்கும் அளவுக்கு இந்தியாவுக்கு பலம் இருந்தது கிடையாது.

இந்திய ஆளும் வர்க்கம் முழுமையாகவும் சிறப்பாக காங்கிரஸ் அரசாங்கமும் முகம் கொடுக்கும் பிரச்சினை என்ன எனில் பொது மக்களிடமிருந்து கிளர்ந்து வரும் எதிர்ப்புகளின் மத்தியில் தமது உயிரைப்பிடித்துக் கொண்டு ஏகாதிபத்தியச் சார்பு வேலைத்திட்டத்தை நடைமுறைக்கிடுவது எப்படி என்பதேயாகும். இந்த ஆளும் வர்க்கம் ஏகாதிபத்திய ஆதரவிலேயே சார்ந்து இருந்தது. சீனாவுக்கு எதிராகவும் அவ்வாறே பாகிஸ்தானுக்கு எதிராகவும் முன்னர் நடாத்திய யுத்தங்களில் பிராந்தியத்தின் தலைமைப் பொலிஸ் அதிகாரத்தை தமது கைக்குள் போட்டுக் கொண்டு ஏகாதிபத்தியவாதிகளதும் அவ்வாறே சோவியத் ஸ்டாலினிச அதிகாரத்துவங்களதும் ஆதரவைத் தம்பக்கம் அணிதிரட்டிக் கொள்வதே நோக்கமாக விளங்கியது. அப்பயணத்தில் தமக்கு அச்சுறுத்தலாக விளங்கும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை சோவினிசத்தினால் மூச்சிழக்கச் செய்து அவர்களின் பலத்தை தவிடுபொடியாக்குவதாகும். சிங்கள இனவாதிகள் இந்திய ஆளும் வர்க்கத்தின் ஏகாதிபத்தியச் சார்பு தன்மையையும் அரசியல் நெருக்கடியையும் செத்துப்போன விஸ்தரிப்புவாதத்தையும் தூக்கிப் பிடித்ததற்குக் காரணம், யூ.என்.பி. ஆட்சியின் ஏகாதிபத்தியச் சார்பு விதிமுறைக்கு ஒரு முடுதிரை வழங்கவும் தமிழ் மக்களுக்கு எதிரான அதனது தேசாபிமானத்தை தூக்கிப்பிடிப்பதற்கேயாகும். அதன்மூலம் சிதறுண்டு போன முதலாளித்துவ ஆட்சியைக் கட்டிக் காப்பதற்கேயாகும்.



ஜே.ஆர்.ஜயவர்தன

தமிழ்நாட்டைத் தாயகமாகக் கொண்டு தமிழர் விஸ்தரிப்புவாதப் பூதத்தைச் சிருஷ்டித்த பிற்போக்காளர்கள் 1965 70 யூ.என்.பி. அரசாங்கத்தின் இறுதிக் காலத்தில் நடாத்திய வெறிப்பிரச்சார இயக்கத்தின் முண்டு கோலுடன் ஜே.வீ.பி. இந்நாட்டுத் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக வப்பளப்பதை இங்கு காணக்கூடியதாக இருந்தது. யூ.என்.பி. ஆட்சி சிதறுண்டு போன நிலைமையில் அதன் மரணத்தை ஒத்திப்போடவும் முடியாது போன நிலைமையில் சோசலிசப் பதிலீட்டுக்கு எதிராக வேறு ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ கூட்டரசாங்கத்தை ஆட்சியில் இருத்தவும் என்ற இரண்டுக்கும் அன்று போலவே 1980பதுகளின் கடைப்பகுதியிலும் தலைநீட்டிய "இந்திய விஸ்தரிப்புவாதம்" பற்றிய பயக்கூச்சலை பயன்படுத்திக் கொள்வர் என்பதை இன்று நன்கு புரிந்து கொள்ள முடியும்.

இலங்கையில் ஜனாதிபதி ஜயவர்தனாவை ஆட்சியை வெளியேற்றுவது மட்டுமல்ல அதை ஆட்டம் காணச் செய்யும் அவசியம் தன்னும் இந்திய அரசாங்கத்துக்கு இருந்ததில்லை. ஜயவர்தன தேவைக்கு அதிகமான வேகத்தில் கூட்டுச்சேரா நாடுகள் எனப்படுவதன் வங்குரோத்து நிலைப்பாட்டில் இருந்து விடுபட்டு மேற்கத்தைய ஏகாதிபத்தியவாதிகளின் மடிக்குள் புகுந்து கொள்ளவும் அதன்மூலம் இலங்கையின் யூ.என்.பி. யானையைக் கட்டுப்படுத்தவும் கடவுளைத் தோற்றுவிக்க முடியும் எனவும் இந்திரா காந்தி நம்பினார். ஜயவர்தன பிராந்தியத்தின் ஏகாதிபத்திய அவசியங்களின் காப்பாளனாக தோன்றியுள்ளமை அந்தப் பிற்போக்கு நடவடிக்கையின் பிராந்தியத் தலைவியாகக் தாம் கொண்டுள்ள பதவியை சேதமாக்கும் என்பதையிட்டு இந்திரா காந்தி கவனம் செலுத்தினார்.



ஆர்.பிரேமதாச

## முதல் தொலைபேசி உரையாடல்

1983 கறுப்பு ஜூலையின் தீச்சுவாலை தணிவதற்கிடையே இந்திரா காந்தி ஜயவர்தனவுடன் நடாத்திய முதலாவது தொலைபேசி கலந்துரையாடலும் இந்திய ஆளும் வர்க்கம் கொழும்பு ஆட்சியாளர்களின் ஸகிரப்பாட்டாளர்களாகத் தோன்றியதை தெளிவுபடுத்துகின்றது:

இந்திரா காந்தி: இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் கொலை செய்யப்படுவது பற்றி எனக்குக் கிடைத்துள்ள தகவல்கள் பற்றிய அறிக்கைகளையிட்டு கவலையடையும் அதே வேளையில் அதையிட்டு அக்கறை காட்டுகின்றேன். தற்சமயம் இடம்பெற்றுவரும் லோக் சபா கூட்டத்தில் அதைப்பற்றி கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

ஜயவர்தன: நானும் அதற்கு நிகரான விதத்தில் அதையிட்டு கவனம் செலுத்துகின்றேன். கிளர்ச்சியையும் அழிவையும் கட்டுப்படுத்தக் கூடிய சகல நடவடிக்கைகளையும் நான் எடுத்துவருகின்றேன்.

இந்திரா காந்தி: நான் எனது வெளிநாட்டு அமைச்சர் ஸ்ரீ நரசிம்மராவை இலங்கைக்கு அனுப்பவா? உங்களுடன் பேச்சுவார்த்தை நடாத்த முடியுமா?

ஜயவர்தன: நான் உங்களின் வெளிநாட்டு அமைச்சரைப் பெரிதும் வரவேற்கின்றேன்.

இது இரண்டு எதிர்ப்பாளர்களுக்கு இடையேயான ஒரு கோபதாபப் பேச்சுவார்த்தை அல்ல. அதற்கு மாறாக் சமமான அரசியல் நெருக்கடியில் மாட்டிக் கொண்டுள்ள இருவர் கைகோர்த்துக் கொண்டு தலையெடுக்கச் செய்யும் முயற்சியின் ஒரு அறிக்கையாகும் என்பதைப் புரிந்து கொள்ள சிறப்பு சிந்தனைச் சக்தி அவசியம் இல்லை.

## நரசிம்மராவின் விஜயம்

இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்ற அன்று மாலையே நரசிம்மராவ் இலங்கையில் வந்திறங்கினார். மறுநாள் காலை உணவை வாட் பிளேசில் உள்ள ஜயவர்தன இல்லத்தில் எடுத்துக் கொண்டு நரசிம்மராவ் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தார். அவர் கவனம் செலுத்தியது இந்நாட்டில் வாழும் தமிழ் மக்களுக்கு எதிராக சிருஷ்டிக்கப்பட்டுள்ள அழிவுகளையும் இரத்தக் களரிகளையும் பற்றி அல்ல. இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கும் இந்திய வர்த்தகர்களுக்கும் சொந்தமான 17 பக்டரிகள் தீயில் வெந்ததையிட்டே அவர் கவனம் செலுத்தினார்.

கண்டிக்கு ஹெலிகொப்டரில் பயணம் செய்த நரசிம்மராவ் அங்கும் தனது பணிகளை இந்தியத் துணைத் தூதுவருடனான பேச்சுவார்த்தையுடன் நிறுத்திக் கொண்டார்.

நரசிம்மராவ் திரும்பவும் இந்தியாவில் காலடி வைத்ததன் பின்னர் லோக் சபாவில் அறிக்கை வெளியிட்ட இந்திரா காந்தி, இலங்கையின் பூகோள ஒருமைப்பாட்டுக்காக இந்திய நின்றுவருவதாகவும் தமது அக்கறையை மனிதாபிமான உதவிகளை வழங்குவதோடு நிறுத்திக் கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மாஸ்கோ ஸ்டாலினிஸ்டுகளைப் போலவே இந்திய கம்யூனிஸ்ட்(மார்க்சிஸ்ட்) கட்சியின் ஸ்டாலினிஸ்டுகளும் இந்திரா காந்தியை ஏகாதிபத்திய எதிர்ப்பு வீராங்கனையாக தூக்கிப் பிடித்து வந்ததைப் போலவே இலங்கையின் சமசமாஜ கம்யூனிஸ்ட் நவசமசமாஜக் கட்சித் தலைவர்களும் இந்திரா காந்தியை ஜனாதிபதி ஜயவர்தனவின் ஏகாதிபத்தியச் சார்பு விதிமுறையை மட்டம் தட்டும் ஒருவராகவும் தமிழ் மக்களின் பாதுகாவலராகவும் தலைமேல் வைத்துக் கொண்டாடினர். முதலாளித்துவ சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பின்னால் இழுபட்டு வயிறளக்கும் மக்கள் முன்னணிவாதத்தை இந்தியாவரை விஸ்தரித்து, இந்தியத் துணைக்கண்டம் அளவிலான சுயாதீன தொழிலாளர் வர்க்க விதிமுறைக்கு எதிராக விலங்கு மாட்டுவதற்கு இந்திரா காந்தி தமது பிற்போக்கு வர்க்க அவசியங்களின்படி இந்தச் சகாப்தத்தில் முன்னெடுத்த உபாயங்களை இந்தத் துரோகிகள் கையாண்டு கொண்டனர்.

இதற்காகச் சகல காரணிகளையும் அணிதிரட்டிக் கொண்டனர். இந்த அர்த்தமற்ற காரணிகளை அணிதிரட்டும் சாரத்தின் சுருக்கத்தை முன்னர் சமசமாஜக் கட்சியாளரும் சுகப்படுத்தமுடியாத மக்கள் முன்னணிவாதியுமான சரித்த விஜேரத்ன என்பவர் "ஜவுண்ட" பத்திரிகைக்கு எழுதிய ஒரு கட்டுரையில் பின்வருமாறு கூறுகின்றார்: இந்த மும்மூர்த்திகளும் (இலங்கை, இந்தியா, சோவியத் குடியரசு) இடையேயான கூட்டு கூட்டுச்சேரா நாடுகளின் இயக்கமும் இப்பிராந்தியத்தில் அமெரிக்கத் திட்டங்களுக்கு இருந்துவந்த முக்கிய தடையாகும். அவ்வாறே அவை இந்தியாவினதும் இலங்கையினதும் வாழ்க்கை சம்பந்தமாகத் தீர்க்கமானதாக விளங்கியது. இந்து சமுத்திர சமாதான வலய திட்டம் அவர்களுக்கு அந்தளவுக்கு முக்கியமாக விளங்கியதற்கு அதுவே காரணம். ஆசியாவில் இந்திய வெளிநாட்டுக் கொள்கை முக்கியமாக தள்ளப்பட்டு இந்து சமுத்திரம் அமெரிக்க களமாக மாறுவதைத் தவிர்ப்பதே."

இந்துசமுத்திரத்தில் இருந்து தோன்றிய புகழ்பெற்ற சரஸ்வதியைப் போல் இந்திராகாந்தி பிராந்திய சமாதானத் தூதராக ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போரிட்டு நிற்பதாகக் காட்டும் இந்தச் சித்திரம் அர்த்தமற்றதாகும். உள்ளங்கையில் நடனமாட விரல் நுனி வரையிலான தூசிக் கும்பல் வரை எழுந்துநிற்கும் நுள்ளான் போன்ற சரித்த விஜேரத்னாக்கள் இன்னமும் அலைவது ஏகாதிபத்திய அரச சார்பற்ற அமைப்புக் கடைகள் ஊடாகவாகும்.

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



ஏகாதிபத்தியவாதிகளுடன் "சமாதான சகவாழ்வு" விதிமுறையுடன் இணைந்து கொண்ட சோவியத் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தை மையமாகக் கொண்டு ஸ்டாலினிஸ்டுகளின் முண்டு கோலில் நின்று கொண்டிருந்த இந்திரா காந்தி காங்கிரசும் சிரிமா பண்டாரநாயக்கவின் கூட்டரசாங்கமும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதத்துக்கு எதிராக தென்ஆசியாவில் ஒரு காப்பரண் அமைத்துக் கொண்டு இருந்தது என்ற உளறல்களிலும் இந்த மக்கள் முன்னணிக்காரர்கள் ஈடுபட்டிருந்தனர். இலங்கை . இந்திய ஆட்சியாளர்கள் சோவியத் யூனியனுடன் கொண்டிருந்த சந்தர்ப்பவாத உறவுகளை உலக வல்லரசு என்ற முறையில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் சகித்துக் கொள்ளவில்லை என்பது உண்மை. ஆனால் அதைச் சாட்டாகக் கொண்டு இலங்கையிலும் இந்தியாவிலும் முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கு ஏகாதிபத்தியத்தில் இருந்து சுதந்திரமான அரசியல் விதிமுறை இருந்ததாகக் கூறுவது முற்றிலும் அர்த்தமற்றது.

இந்துசமுத்திரப் பிராந்தியத்தை "சமாதான வலயமாக" பிரகடனம் செய்யும் பிரச்சாரத்தில் ஈடுபட்டு, தியாகோ கார்ஷியாவில் அமெரிக்க கடற்படை முகாம் அமைப்பது தொடர்பாக வாயளவில் எதிர்ப்பு அறிக்கைகள் விடுத்த அதே வேளையில் இந்திய இராணுவத்தின் உயர் அதிகாரிகளைப் பயிற்றியெடுக்கும் வேலை பிரித்தானிய, அமெரிக்க இராணுவத் தளபதிகளிடம் ஒப்படைக்கப்பட்டு இருந்தது. அத்தோடு இந்து சமுத்திரத்தில் கடற்படைப் பயிற்சிகளை அமெரிக்க, இந்திய இராணுவங்கள் கூட்டாக நடாத்தி வந்தன. அமெரிக்க ஆளுமையின் கீழான உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் கடன்கள், உதவிகளில் தங்கியிருந்த இந்திய, இலங்கை முதலாளித்துவ ஆட்சியாளர்களை இந்த தொப்புள்க் கொடி உறவில் இருந்து பிரிக்க முடியாது.

## இஸ்ரேல் உறவு

ஜே.ஆர்.ஜயவர்தன இஸ்ரேலுடன் உத்தியோகபூர்வமான தூதுவர் உறவுகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்ததும் இந்திரா காந்தி ஏகாதிபத்திய எதிர்ப்பு பாலஸ்தீன விடுதலைப் பிரச்சாரத்தில் துள்ளிக் குதித்து இறங்கி யூ.என்.பி.அரசாங்கத்துக்கு எதிராகத் தலையிடக் காரணமாகியதாகக் காட்டுகின்றார்கள். ஆனால் அன்றைய தருணத்தில் இஸ்ரேல் வர்த்தக சபை அலுவலகங்களை பம்பாயில் அமைத்துக் கொண்டு இருந்ததை இந்தப் பொய்யர்கள் மறந்துவிடக் கூடாது. முன்னர் நாடுகளைக் கைப்பற்றுபவர்கள் முதலில் பைபிளையும் இரண்டாவதாக துவக்கையும் அதற்காகப் பயன்படுத்தினார்களாயின் இந்த இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் முதலாவதாக வர்த்தகத்தையும் இரண்டாவதாக காலனித்துவம் என்ற விதிமுறையையும் கடைப்பிடிக்கத் தள்ளப்பட்டு உள்ளனர்.

அமெரிக்கன் குரலை (VOA) இறக்குவதற்கு ஜனாதிபதி ஜயவர்தனா தொழிற்பட்டமை இந்திரா காந்தி ஏகாதிபத்திய எதிர்ப்பு தலைமீடுகளில் குதிக்க இலங்கையையும் திறந்துவிட்டதாகக் கூறிக்கொள்ளப்படுகின்றது. சிறப்பாக தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் அமெரிக்க ஏகாதிபத்திய பிரச்சாரங்களைக் கட்டவிழ்த்துவிடும் பொருட்டு செயற்படும் பிராந்திய "அமெரிக்கன் குரல்" இலங்கையில் இறங்குவதற்கு முன்னர் இந்தியாவிலேயே இறங்க இருந்தது. அதை இலங்கைக்குக் கொணர அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தீர்மானம் செய்தது, அமெரிக்கன் குரலை வெறும் கம்யூனிச எதிர்ப்பு பிரச்சார நிலையம் என்ற நிலையில் இருந்து பாரசீக வளைகுடா தொடக்கம் பசுபிக் சமுத்திரம் வரையிலான முழுப் பிராந்தியத்திலும் இராணுவ நடவடிக்கைகளுக்கான நிலையமாக மாற்றத் தீர்மானம் செய்துதுடனாகும். கிழக்கிலும் அவ்வாறே மேற்கிலும் எலெக்ரொனிக் பரிமாற்றத்துக்கான ஒரு சிறிய தீவு என்ற விதத்தில் இந்தியத் துணைக் கண்டத்தின் தென்கரையில் குண்டு போல் காட்சிதரும் இலங்கை தொழில்நுட்ப ரீதியிலும் பெரிதும் பொருத்தமானதாக விளங்கியது. அமெரிக்கன் குரலை இந்தியாவில் இருந்து இலங்கைக்கு மாற்றியது இந்தியக் காங்கிரஸ் அரசாங்கத்தின் விருப்பு வெறுப்பு மீது ஏற்பட்டது அல்ல. மத்திய கிழக்குப் போலவே தூர கிழக்கிலும் ஏகாதிபத்தியச் சார்பு கைப்பொம்மை ஆட்சியாளர்கள் பொதுமக்கள் எதிர்ப்புக்கு முகம் கொடுக்கும் ஒரு நிலைமையில் அமெரிக்க ஏகாதிபத்திய அவசியங்களின் இராணுவ மாற்றங்களுடன் இணைந்த விதத்தில் எடுக்கப்பட்ட ஒரு முடிபு ஆகும்.



இனவாத பேரழிவில் இருந்து தப்ப இராமேஸ்வரத்தில் தரையிறங்கும் தமிழ் அகதிகள்

இச்சமயத்தில் மாற்றம் கண்டுவந்த உலக் முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் கட்டுண்டு போய்க் கிடந்த தேசியவாத பொருளாதார அமைப்பைக் கொண்டு நடாத்துவது மக்கள் ஒடுக்குமுறை இல்லாது முடியாத காரியமாகிவிட்டது. சமசமாஜக் கட்சியின் "தங்கூழளை" யைக் கொணர்ந்து சிரிமா பண்டாரநாயக்க 1970 77 காலப்பகுதியில் எடுத்த அத்தகைய முயற்சி இளைஞர் படுகொலைகளுக்கும் தொழிலாளர் அடக்குமுறைகளுக்கும் வழிவகுத்ததைப் போலவே இந்திரா காந்தியின் காங்கிரஸ் அரசாங்கமும் அவமானம் நிறைந்த அவசரகாலச் சட்ட ஆட்சியின் மூலம் செல்வாக்கிழந்து போயிருந்தது. இந்திரா காந்தியை தோற்கடித்து ஆட்சிக்கு வந்த ஜனதா அரசாங்கம் ஆரம்பத்தில் இருந்து திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு வழிதிறந்து விட்டது. அந்த அரசாங்கம் இரண்டரை வருடகாலத்துக்கு மேலாக நின்று பிடிக்க முடியவில்லை. அவ்வாறே அதைத் தொடர்ந்து வந்த காந்தி காங்கிரஸ் முன்னைய அரசாங்கத்தின் கொள்கைகளை மாற்றாதிருக்க ஏகாதிபத்திய பொருளாதாரத்துக்கு நெருக்கமான முறையில் உறவு கொள்ளவும் முடிவு செய்தது. இச்சமயத்தில் இந்திரா காந்தியின் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கோல் களன்று கொட்டி ஏகாதிபத்தியவாதிகளுடன் இயைந்து போகும் புதிய பொருக்கு வைக்கத் தொடங்கி இருந்தது.

ஏகாதிபத்திய உலக நிலைமையினுள் ஏகாதிபத்தியச் சார்பு தேசிய முதலாளித்துவ ஆட்சியாளர்கள் அனைத்து நாடுகள் தோறும் காட்டிக் கொண்டிருந்த தேசியவாத பொருளாதாரத் திட்டத்தைக் கைவிடும் பொதுவேலைத்திட்டத்துடன் தொடர்பு படாத விதத்தில் இந்திரா காந்தியை ஏகாதிபத்திய எதிர்ப்பு வீர பாரத மாதாவாகக் காட்டுவது இந்திய விஸ்தரிப்புவாதம் பற்றிய கதையளப்பைப் போலவே ஒரு அர்த்தமற்றதாகும்.

இதை உரித்துக் காட்டும் ஒரு விடயம் திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை சிங்கப்பூர்க் கம்பனிக்கு குத்தகைக்கு விடுவதற்கு யூ.என்.பி.அரசாங்கம் செய்திருந்த முடிவு இந்திய அரசாங்கத்துக்கு ஆத்திரமூட்டியது என்பதாகும். சிங்கப்பூர் கம்பனியுடன் போட்டியாக இந்தியக் கம்பனியும் எண்ணெய் தாங்கிகளை குத்தகைக்கு அமர்த்த கேள்விப் பத்திரங்களை கோரியிருக்கலாம். அது இரண்டு கம்பனிகளுக்கும் இடையேயான வர்த்தக இழுபறியாகும். ஆனால் இந்திய கம்பனிக்கு எண்ணெய் தாங்கிகள் குத்தகைக்கு கொடுபடாததால் இந்தியாவின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதாயும் சிங்கப்பூர் கம்பனிக்கு அந்தக் குத்தகையை வழங்குவதன் மூலம் இந்தியாவின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகி உள்ளதாயும் சிங்கப்புர் கம்பனிக்கு அக்குத்தகையை வழங்கும் தீர்மானத்தின் மூலம் இந்திய அரசாங்கத்தின் எதிர்ப்பு தூண்டப்பட்டது எனவும் கூறுவது தேவைக்கு அதிகமாக அதில் அடங்கியுள்ள சாதகமான காரணிகளை இழுத்துக் காட்டுவதாகும். இந்தியாவின் பாதுகாப்பு தொடர்பாக எண்ணெய் தாங்கிகளின் அவசியம் தலையெடுத்து இருக்கமானால் அவற்றை இந்தியாவிலேயே தயார் செய்து கொள்ள முடியாத ஒரு நிலைமை இந்தியாவுக்கு இருந்தது எனக் கூற முடியுமா? மறுபுறத்தில் எண்ணெய் உற்பத்தியாளரான இந்தியாவுக்கு அவற்றைச் சேகரித்து வைக்கும் தாங்கிகள் மூலம் பிரச்சினை ஏற்படுமா? 1974ல் இந்திரா காந்தி அரசாங்கம் அணுக்குண்டினையும் பரீட்சித்துப் பார்க்கும் அளவுக்கு பாதுகாப்பு ஆயுத திட்டங்களை முன்னெடுத்திருந்தது என்ற விடயத்தை கவனத்தில் கொள்ள வேண்டும் திருகோணமலையில் எண்ணெய் தாங்கிகள் யாருக்குச் சொந்தமாக இருந்தாலும் அதை ஒரு நிமிடத்தில் தவிடுபொடியாக்கும் சக்தியை அது காட்டுவதாகும். அத்தகைய ஒரு நிலைமையின் கீழ் எண்ணெய் தாங்கிப் பிர்சசினையை காரணமாக்கிக் கொண்டு இந்தியா இலங்கையின் அரசியல் நிலைமையில் தலையிட்டது எனக் கூறுவது மிகவும் மந்த புத்தி வாதமாகும். அது மக்கள் முன்னணிவாதத்தை பலப்படுத்தும் பொருட்டு தயார் செய்யப்பட்ட புஷ்வாணமாகும். இக்கோஷத்தை தமிழர் எதிர்ப்பு இனவாதிகளே தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

யூ.என்.பி..அரசாங்கத்தின் கீழ் இலங்கையில் நடைபெற்ற அனைத்தையும் பற்றி கண்ணை மூடிக் கொண்டு இருப்பதற்கான வாய்ப்போ அல்லது தயார் நிலையோ இந்திய ஆளும் வர்க்கத்துக்கு இருந்து வந்தது என்பது இதன் அர்த்தமாகாது. இலங்கையில் இடம்பெறும் தமிழர் மக்கள் படுகொலைகளையிட்டு உணர்ச்சிவசப்பட்ட ஐந்து கோடிக்கும் அதிகமான தமிழ் மொழி பேசும் மக்கள் இந்தியாவில் இருந்தது அதற்கு ஒரு முக்கிய காரணமாகும்.

மறுபுறத்தில் பிராந்தியத்தில் முக்கிய ஏகாதிபத்தியச் சார்பு தரகர் என்ற விதத்தில் தமது பிடியில் இருந்து விடுபட்டு இலங்கை ஆட்சியாளர்கள் ஏகாதிபத்தியவாதிகளுடன் திட்டவட்டமாக கொடுக்கல்வாங்கல்களுக்கு செல்வது இந்திய ஆளும் வர்க்கம் பொதுமக்களை ஏமாற்ற கடைப்பிடித்து வந்த சோவினிச நிலைப்பாட்டை சவால் செய்வதற்கும் ஒரு காரணமாகியது.

அதன்படி தமிழ் மக்களின் பாதுகாவலனாக வேடம் போடவும் ஜயவர்தன ஆட்சிக்கு நெருக்குவாரம் தரவும் முதலில் தமிழர் விடுதலைக் கூட்டணியையும் பின்னர் பல்வேறு குட்டி முதலாளித்துவ தமிழ் குழுக்களையும் இந்தியக் காங்கிரஸ் பொம்மைகளாக கையாண்டது.அதன் துணைப் பணிகளை தமிழ் நாட்டின் தி.மு.க., அ.தி.மு.க.கட்சிகள் இட்டுநிரப்பின.

இந்திய காங்கிரஸ் அரசாங்கத்தின் இந்தத் திட்டம் ஜனாதிபதி ஜயவர்தனாவின் மோசடி சர்வகட்சி மகாநாடு சம்பந்தமாக அசு கடைப்பிடித்த விதிமுறை மூலம் வெளிப்பாடாகியது.

ஏனைய ஏகாதிபத்தியவாதிகள் ஜயவர்தன ஆட்சிக்கு பகிரங்கமாக இராணுவ உதவி வழங்கி இந்தியத் துணைக்கண்டத்தில் தமது தலைமைத் தரகரான இந்தியாவின் ஆளுமையை ஈடாட்டம் காண வைப்பதை விரும்பவில்லை. அதனால் யூ.என்.பி. அரசாங்கம் ஏகாதிபத்திய கையாளானான இஸ்ரேலிடமிருந்து இராணுவ உதவி கோரியது. இலங்கையின் அரசியல் நனவுபடைத்த மக்களிடையே இஸ்ரேலின் விஸ்தரிப்புவாதி சியோன்வாதி நடவடிக்கைகள் பற்றி பரந்துபட்டு இருந்த எதிர்ப்பினால் அதனிடம் இராணுவ உதவி பெறுவது மிகவும் அந்தரங்கமான முறையில் செய்து கொள்வதில் ஜனாதிபதி ஜயவர்தன கவனமாக இருந்தார்.

கட்டுநாயக்கவில் வந்திறங்கிய இஸ்ரேல் இராணுவ பயிற்சியாளர்கள் சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகளின் கீழ் நேரடியாக பனாகொடை இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு இராணுவ பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். இந்தத் திட்டம் அந்தளவுக்கு பரம இரகசியமான முறையில் சசெய்யப்பட்டதால் ஜனாதிபதி ஜயவர்தன இதற்கென தமது மகன் ரவி ஜயவர்தனாவையே நியமித்தார்.

ஆனால் இந்திய வெளிநாட்டு அமைச்சர் நரசிம்மராவ் லோக் சபாவில் இந்த இரகசிய கொடுக்கல் வாங்கல்களை அம்பலமாக்கினார். இந்தத் தகவல்கள் வெளியானதும் இலங்கை மக்கள் குழம்பிப் போகலாம் என்பதையிடடு கலக்கம் கண்ட யூ.என்.பி..அரசாங்கம், அத்தகைய எதிர்ப்பை உடைத்துக் கொண்டு முன்செல்லக்கூடிய வாய்வீச்சுக்களை கட்டவிழ்த்துவிட பிரதமர் பிரேமதாசவின் வாயைத் திறந்துவிட்டது.

இந்திய அரசாங்கம் இலங்கையின் இறைமையில் கைபோடுவதாக பிரேமதாச 1984 மார்ச் 22ம் திகதி பாராளுமன்றத்தில் கர்ச்சித்தார். ஏகாதிபத்திய கைத்தேங்காயான இஸ்ரேலை தமது அரவணைப்பில் வைத்துக்கொண்டு யூ.என்.பி..அரசாங்கத்தின் பிரதமர் விடுத்த ஒரு அறிக்கையாக இதை நோக்கும் போதுதான் இந்த அறிக்கையின் சுயகோலம் புரியும்.

பிரேமதாச பாராளுமன்றத்தில் மேலும் பேசுகையில் மாவட்ட அபிவிருத்திச் சபைக்கு மேலாக வேறு எதையும் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளின் பேரில் வழங்க அரசாங்கம் தயார் இல்லை எனத் தெரிவித்தார்.

அந்த அறிக்கையின் மூலம் சங்கடத்துள் தள்ளப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி சர்வகட்சி மகாநாட்டில் இருந்து விலகிக் கொள்ள மீண்டும் தீர்மானம் செய்தது. ஆனால் இந்திய வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் பார்த்தசாரதி ஊடாக இந்திரா காந்தியின் காங்கிரஸ் அரசாங்கம் தனது முழுப் பலத்தையும் பாவித்து , தமிழர் விடுதலைக் கூட்டணியின் இந்த முடிவை மாற்றவும் ஜயவர்தன அரசாங்கத்தின் தூண்டிலில் மாட்டி வைக்கவும் செயற்பட்டது. இது ஜயவர்தன அரசாங்கத்தின் ஏகாதிபத்தியச் சார்புத் தன்மைக்கு இந்திரா காந்தியின் ஏகாதிபத்திய எதிர்ப்பிடம் இருந்து கிடைத்த பதிலா?அப்படிச் சிந்திப்போர் இன்று அரசியலில் மிகவும் கீழ்த்தரமானவர்கள்.

சிறப்பாக இந்தியாவின் பாரதீய ஜனதா கட்சி அரசாங்கம் அணுக்குண்டை பரீசோதனை வெடிப்புக்களில் இறங்கியதோடு அமெரிக்காவை முன்னணியில் கொண்ட ஏகாதிபத்திய வல்லரசுகள் விதித்த பொருளாதாரத் தடையை தூக்கிப்பிடித்து இந்திய ஆளும் வர்க்கம் ஏகாதிபத்திய எதிர்ப்பைச் சுட்டிக்காட்டி இந்திய சோவினிசத்தை தூண்டிவிட்ட நிலைமையின் கீழ் இந்த அரசியல் படிப்பினைகள் இந்தியத் துணைக்கணடம் பூராவும் உள்ள தொழிலாளர்,ஒடுக்கப்படும் மக்கள் ஆயுதபாணிகளாக வேண்டும்.இந்திரா காந்திக்கு ஏகாதிபத்திய எதிர்ப்பு முக்காடு போட முயற்சிப்பவர்களுக்கு பாரதீய ஜனதா கட்சியின் பாசிச அணியின் பேரில் அச்சோடனையை மாட்ட முடியாது.

தொடரும்.

படிப்பகம்

படிப்பகம்

# சோ.ச.க.வும் சிறீலங்கா–ஈழம் சோசலி

*1ம் பக்கத் தொடர்ச்சி*

சோ.ச.க. மதிப்பீடு தேசிய ஒடுக்குமுறையை வெற்றிகொள்ளும் மூலோபாயம், வரலாறு, வேலைத்திட்டம் பற்றிய விசாரணைகளை அதிகரிக்கத் தூண்டியது.

நா.அ.அ.கு.வின் சிறீலங்கா பகுதியான சோ.ச.க. சிறீலங்கா ஈழம் சோசலிச ஐக்கிய அரசுகளை ஸ்தாபிதம் செய்வதற்கான தமிழ், சிங்களத் தொழிலாளர் விவசாயிகளின் புரட்சிகரக் கூட்டை உருவாக்கப் போராடுகின்றது. வெகுஜனங்களின் ஜனநாயக அல்லது சமூக அபிலாசைகளை இலங்கை முதலாளி வர்க்க ஆட்சியினுள்ளோ அல்லது 1947-48ல் இந்தியத் துணைக் கண்டத்தில் உருவாக்கப்பட்ட தேசிய அரச முறைகளின் எல்லைகளுக்குள்ளோ அடையமுடியாது. சிறீலங்கா ஈழம்களின் பின்தங்கிய நிலைமையில் இருந்தும் அவற்றின் காலனித்துவக் கடந்த காலத்தினதும் தொடர்ச்சியான ஏகாதிபத்திய மேலாதிக்கத்தினதும் சிருஷ்டி ஒரு தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தை ஸ்தாபிதம் செய்வதன் மூலமும் உலக சோசலிசப் புரட்சியின் மூலமுமே தலையெடுக்க முடியும்.

15வருடகால நீண்ட யுத்தத்தின் போது சிறீலங்கா அரசு தமிழர்களை அடிமைப்படுத்த முயன்றது. சோ.ச.க.புரட்சிகர தோற்கடிப்புவாத நிலைப்பாட்டைக் கடைப்பிடித்தது. வடக்கு கிழக்கில் இருந்து சிறீலங்கா பாதுகாப்பு படைகள் நிபந்தனையின்றி உடனடியாக வாபஸ்பெறப்பட வேண்டும் என அது வேண்டுகின்றது.

யுத்தத்துக்கு எதிரான சோ.ச.க.நிலைப்பாடு, தொழிலாளர் வர்க்கத்தை முதலாளி வர்க்கத்தின் அரசியல் மேலாதிக்கத்தில் இருந்து விடுதலை செய்து சகல ஒடுக்கப்பட்ட மக்களதும் தலைமை பாத்திரத்தை வகிக்க இலாயக்கான ஒரு நனவான புரட்சிச் சக்தியாக அதை மாற்றப் போராடுவது என்பதை மையமாகக் கொண்டுள்ளது. இந்த யுத்தம் சோகமாக விளங்குவது போரின் சுமையை தாங்கிக் கொண்டுள்ள வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ் வெகுஜனங்களுக்கு மட்டும் அல்ல. இது சிறீலங்கா முதலாளி வர்க்கத்தினால் தெற்கில் உள்ள வெகுஜனங்களின் ஜனநாயக உரிமைகள் மீதும் வாழ்க்கைத் தரத்தின் மீதும் ஒரு திட்டமிட்ட தாக்குதலை நடாத்தவும் சிங்கள சோவினிச சித்தாந்தத்தினை பிரச்சாரம் செய்யவும் ஒரு மூடுதிரையாகப் பயன்படுத்தப்படுகின்றது.

சமீப மாதங்களில் பொதுஜன முன்னணி அரசாங்கம் யுத்தத்தை மாகாண சபைத் தேர்தல்களைக் காலவரையின்றி ஒத்திப்போடுவதை நியாயப்படுத்தவும் தீவுபூராவும் அவசரகாலச் சட்டத்தை விஸ்தரிக்கவும் இராணுவ பொலிஸ் நடவடிக்கைகள் மீதான சகல அறிக்கைகள் மீதும் இராணுவ தணிக்கையைத் திணிப்பதை நியாயப்படுத்தவும் தூண்டிவிட்டுள்ளது. இறுதி நடவடிக்கையாக தெற்கில் சமூக அமைதியின்மையை நசுக்கும் பொருட்டு பாதுகாப்பு படைகளைப் பரந்த அளவில் பயன்படுத்துவதை பகிரங்கமாக பிரசுரிப்பதையும் அம்பலப்படுத்துவதையும் சட்டரீதியில் முடியாததாக்கியுள்ளது. பொதுஜன முன்னணி அரசாங்கம் அரசாங்கத் துறை தொழிலாளர்களின் மீது ஒரு சம்பள வெட்டையும் திணித்துள்ளது. அரசாங்கத்தின் யுத்த நடவடிக்கைகளுக்கான 'சுயவிருப்பின்' பேரிலான பங்களிப்பு என்ற பம்மாத்தின் கீழ் இது திணிக்கப்பட்டுள்ளது. 'தேசிய நெருக்கடி' கட்டத்தில் தொழிலாளர்கள் தமது கோரிக்கைகளுக்காக நெருக்குவது சந்தர்ப்பத்துக்கு ஒவ்வாதது என்ற வாதத்தை முன்வைத்துவரும் தொழிற்சங்க அதிகாரத்துவங்களின் உதவியோடு பொதுஜன முன்னணி அரசாங்கம் சம்பள சிக்கன நடவடிக்கையை தனியார்துறைக்கும் விஸ்தரிக்க முயற்சிக்கின்றது.

சோ.ச.க.வின் யுத்த எதிர்ப்பு எதுவிதத்திலும் விடுதலைப் புலிகளின் தேசிய பிரிவினைவாத வேலைத்திட்டத்துக்கு ஆதரவு வழங்குவது ஆகாது. விடுதலைப் புலிகள் வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ் மக்களின் நிச அபிலாசைகளையோ அல்லது நலன்களையோ எதுவிதத்திலும் பிரதிபலிக்கவில்லை என சோ.ச.க.எச்சரிக்கின்றது. ஈழத்தில் தற்சமயம் தனது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் விடுதலைப் புலிகளின் நிர்வாகம் போக்குவரத்தையும் சில்லறை வியாபாரத்தையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டுள்ள முதலாளிகளுக்கு உடந்தையாக இருந்து கொண்டு, யுத்தத்தினால் ஏற்படும் நிதி இழப்புக்களுக்கு தொழிலாளர்களையும் விவசாயிகளையும் இறுத்துக்கட்டச் செய்துள்ளது. அத்தோடு வெகுஜனங்களின் ஜனநாயக உரிமைகளின் பேரில் சிறீலங்கா அரசு காட்டும் மரியாதைக்கு நிகரானதையே விடுதலைப் புலிகளும் காட்டிக் கொண்டுள்ளது. ஒரு தமிழ் அரசு ஸ்தாபிக்கப்படுமேயானால் அதுவும் இன்றைய சிறீலங்கா அரசைப் போலவே ஒரு முதலாளித்துவ அரசாகவும் பூகோளரீதியான மூலதனத்தின் கட்டளைகளுக்கு அடிபணிந்ததாகவும் விளங்கும்.

சோ.ச.க.தெற்கில் யுத்தத்துக்கும் பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கும் எதிராக வெகுஜனங்களை அணிதிரட்ட போராடுகையில் விடுதலைப் புலிகள் வடக்கிலும் கிழக்கிலும் தனது ஆட்சியை நிலைநாட்டுவதற்கு யுத்தத்துக்கு எதிரான ஒரு தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையிலான வெகுஜன இயக்கத்தை சுரண்டிக் கொள்ளும் என்ற வாதத்தினால் தைரியம் இழந்துவிடாது. ஒடுக்கப்படும் தமிழ்-சிங்கள வெகுஜனங்களின் ஐக்கியத்தை பிற்போக்கு சிறீலங்கா அரசின் பிராந்திய ஒருமைப்பாட்டை காப்பதன் மூலம் உருவாக்க முடியாது.

யுத்தம் தொழிலாளர் வர்க்கத்தின் சுயாதீனமான நடவடிக்கையின் பெறுபேறாக முற்றுப்பெற வேண்டுமானால் தீவின் வர்க்க நிலைமை தீவிரமாக மாற்றம் கண்டாக வேண்டும். உடனடி இராணுவ நடவடிக்கைகளின் பெறுபேறுகள் என்னவாக இருந்தாலும் யுத்தத்துக்கு எதிராக தொழிலாளர் வர்க்கத்தை வெற்றிகரமாக அணிதிரட்டுவதானது சிங்கள, தமிழ் தொழிலாளர்களை ஒன்றுபடுத்துவதற்கும் தொழிலாளர் வர்க்கத்தினதும் நகர்ப்புற, கிராமப்புற சிங்கள, தமிழ் குட்டி முதலாளித்துவ வெகுஜனங்களதும் ஒரு கூட்டினை உருவாக்குவதற்கும் பெரிதும் சாதகமான நிலைமைகளை உருவாக்கும். யுத்தத்துக்கு ஒரு முற்றுப் புள்ளிவைக்கத் தள்ளுவதன் மூலம் தொழிலாளர் வர்க்கம், தமிழ் வெகுஜனங்களின் விடுதலையின் நிஜ ஏஜன்ட் என்பதையும் ஒரு மாற்று சமூக ஆட்சிக்கான தலைவன் என்ற தனது வாதத்தையும் ஸ்தாபிதம் செய்யும்.

கொழும்பில் ஒரு தொழிலாளர், விவசாயிகள் அரசாங்கம் ஆட்சிக்கு வரும் சாத்தியம் ஈழத்தின் உள்ளேயான வர்க்கப் பகைமையை முக்கியமாக்குவதோடு நிர்வாணமுமாக்கும். இதன் மூலம் விடுதலைப் புலிகளையும் அதன் பிரிவினைவாத வேலைத்திட்டத்தையும் அம்பலமாக்குவதைப் பெரிதும் எளிதாக்கும். ஒரு சிறீலங்கா ஈழம் சோசலிச ஐக்கிய அரசுகளின் ஸ்தாபிதத்தின் ஊடாக தமது ஜனநாயக, வர்க்க அபிலாசைகள் இரண்டையும் யதார்த்தம் ஆக்குவதற்கான கதவுகளைத் திறந்து வைக்கும் நடவடிக்கையாக தெற்கில் உள்ள தமது வர்க்க சகோதரர்களின் நடவடிக்கையை தமிழ் தொழிலாளர்கள் காண்பர். அதேசமயம் தமிழ் முதலாளிகள் ஆட்சிக்கும் சொத்துக்குமான தமது போட்டியாளர்களான சிங்கள முதலாளிகளின் அச்சத்தை பகிர்ந்து கொள்வர். அத்தகைய ஒரு நிலைமையின் கீழ் வடக்கு கிழக்கில் ஒரு தமிழ் அரசினை சிருஷ்டிப்பதானது ஏகாதிபத்தியத்தினதும் சிங்கள முதலாளி வர்க்கத்தின் பெரும் பகுதியினரது ஆதரவையும் கூட வெற்றி கொள்வதற்கான ஆதரவுத் திட்டமாக மாறும் என நாம் திட்டவட்டமாகக் கூறமுடியும்.

## வரலாற்று வெளிச்சத்தில் "சுயநிர்ணயம்"

தமிழீழ விடுதலைப் புலிகளும் போலி சோசலிஸ்ட் குழுக்களில் உள்ள அவர்களின் எண்ணற்ற ஆதரவாளர்களும் — தமிழ்ஈழம் தேசிய அரசை ஸ்தாபிதம் செய்வதை எதிர்க்கும் சோ.ச.க.எதிர்ப்பு உட்பட எந்த ஒரு எதிர்ப்பும் தமிழர்களின் — "சுயநிர்ணய உரிமையை" மறுப்பதாகும் என்கின்றனர். ஏதேனும் ஒரு சிறப்பு அரசியல் வேலைத்திட்டத்துக்கு தொழிலாளர் வர்க்கம் காட்டும் எதிர்ப்பினை பிற்போக்கு அந்தவேலைத்திட்டத்துக்குக் காட்டும் எதிர்ப்புடன் ஒப்பிடுவதானது முன்னர் இருந்தே தொழிலாளர் வர்க்கம் அதனது அரசியல் சுயநிர்ணய உரிமையைக் கையாள்வதற்கு -தனது சொந்த வர்க்க பதிலீட்டை முன்வைப்பதற்கு எதிராக தேசிய முதலாளி வர்க்கம் கையாண்ட ஒரு பொய்யாகும். "தேசிய ஒடுக்குமுறையை ஒழித்துக்கட்டும்" "சுயநிர்ணயத்தின்" அத்தியாவசியமான முற்போக்கு உள்ளடக்கத்தை சோ.ச.க.வின் சிறீலங்கா ஈழம் சோசலிச ஐக்கிய. குடியரசுகள் வேலைத்திட்டத்தின் ஊடாக மட்டுமே அடைய முடியும்.

தேசிய இனப்பிரச்சினை நீண்ட காலமாக மார்க்சிச இயக்கத்துக்கு பிரச்சினைக்குரியதாக இருந்து வந்துள்ளது. நாண்டகாலமாக மார்க்சிச இயக்கத்துக்கு பிரச்சினைக்குரியதாக இருந்து வந்துள்ளது. எவ்வாறெனினும் பெரும் நிகழ்வுகள் தேசிய ஜனநாயக, சோசலிச கோரிக்கைகள் போராட்டத்துக்கும் தேசிய சுயநிர்ணயத்துக்கான அழைப்புக்களுக்கான செல்லுபடியான தன்மைக்கும் இடையேயான உறவுகளை விளக்க உதவியுள்ளன.

தேசியவாதிகள் தேசியத்தை(nation) ஆதியும் அந்தமும் அற்ற வகையறாவாகவோ அல்லது மனித இனத்தின் வளர்ச்சியின் அதி உயர்ந்த கட்டமாகவோ சித்தரிக்கின்றார்கள். மார்க்சிஸ்டுகள் தேசியம் ஒரு வரலாற்று உற்பத்தியாகும் என வலியுறுத்துகின்றார்கள். தேசிய இயக்கங்கள் ஊடாகவும் தேசிய அரசுகளின் ஸ்தாபிதம் ஊடாகவும் மேற்கு ஐரோப்பாவிலும் வடஅமெரிக்காவிலும் வளர்ச்சி கண்டு வந்த முதலாளி வர்க்கம் ஒரு உள்நாட்டு சந்தை மீது தனது கட்டுப்பாட்டை உறுதிப்படுத்தியதோடு முதலாளித்துவத்தின் அபிவிருத்தியைத் தடைசெய்த நிலமானித்துவ சமூக உறவுகளையும் மிச்சசொச்சங்களையும் நிர்மூலமாக்கியது.

இந்தியாவில் நேரடி காலனித்துவ ஆட்சியும் அல்லது சீனா, ஈரான் போன்றவற்றில் அரைக் காலனித்துவ சுரண்டலும் இருந்து வந்தது போன்று உலகின் பரந்த பாகங்களில் நவீன முதலாளித்துவ உறவுகள் தோன்றிக் கொண்டிருந்த சமயத்தில் [சுயநிர்ணயம்[ போல்ஷிவிக் கட்சியினதும் பின்னர் கம்யூனிஸ்ட் அகிலத்தினதும் வேலைத்திட்டத்திலும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியதாகியது.

ஒரு நிலமானித்துவ எதேச்சாதிகார முடியரசினால் ஆளப்பட்டதும் பொருளாதார அபிவிருத்தியின் வெவ்வேறுபட்ட கட்டங்களில் இருந்து வந்ததுமான பல்வேறு தேசியவாத இனக்குழுக்களைக் கொண்டதுமான ஸார் ஆட்சிக்குட்பட்ட ரூஷ்யாவில் போல்ஷிவிக்குகள் சுயநிர்ணய சுலோகத்தை எழுப்பினர். பல்வேறுபட்ட தேசிய இனத் தொழிலாளர்களிடையேயும் ஸார் ஆட்சியின் அடக்குமுறை உருவாக்கிய பகைமைகளில் இருந்து தலையெடுப்பதற்கான மார்க்கமாகவும் தமது சொந்த வர்க்க நலன்களை மேம்படுத்தும் ரூஷ்ய பேரின் சோவினிசத்துக்கு எதிரான வெகுஜனங்களின் எதிர்ப்பைச் சுரண்டிக் கொள்ளும் முதலாளி வர்க்க தேசியவாதிகளின் நச்சுத்தனமான செல்வாக்கில் இருந்து தலையெடுப்பதற்கான ஒரு சாதனமாகவுமே இந்த சுயநிர்ணய சுலோகம் எழுப்பப்பட்டது. சுயநிர்ணய உரிமை ஒரு "எதிர்மறை" கோரிக்கை என லெனின் வலியுறுத்தினார். அது தேசிய பிரிவினைவாதத்தினைத் தெரிந்தெடுக்கப்பட்ட மார்க்கமாக ஆதரவு வழங்குவதைக் குறிக்காது. ஆதலால் அது ஸார் ஆட்சியாளர்கள் எந்த ஒரு ஒடுக்கப்படும் தேசிய இனத்தினையும் தனது முடியரசினுள் வைத்திருக்க இராணுவ பலத்தைப் பயன்படுத்துவதற்கு போல்ஷிவிக்குகளின் எதிர்ப்பை வெளிக்காட்டியது.

அதைத் தொடர்ந்து வந்த காலத்தில் இந்த சுயநிர்ணயம் என்பதன் அர்த்தம் எந்த ஒரு தேசிய கோரிக்கைக்கும் மறைமுக ஆதரவு வழங்கும் அர்த்தத்தில் ஸ்டாலினிஸ்டுகளாலும் மற்றும் மார்க்சிசத்தை கொச்சைப் படுத்தியவர்களாலும் திசைதிருப்பப்பட்டது. இன்று சுயநிர்ணயத்துக்கு வாதிடுவ தவிர்க்கமுடியாதவிதத்தில் ஒரு தனிநாட்ட ஸ்தாபிதம் செய்வதற்கான ஆதரவாக கொள்ளப்படுகின்றது.

லெனினும் அவரது சமகால சோசலிஸ் களும் சிறிய தேசிய இனங்களது அவ நிலைமைகளையும் அவர்களது தேசிய கோரிக்கைகளையும் ஏகாதிபத்தியவாதிக வாய்ப்பாக கையாள்வதையும் நன் அறிந்திருந்தனர். பால்க்கனை பொறுத்தமட்டில் சோசலிஸ்ட் இயக்க தேசியவாதிகளின் குட்டி தேசிய அரசுகள கூறுபோடும் இரத்தக்களரி நடவடிக்கைகளுக் எதிராக பால்கன் சோசலிச ஐக்கிய அரசுக முன்னோக்கினை வைத்தது. தொழிலாள வர்க்கத்தினதும் ஒடுக்கப்படு வெகுஜனங்களதும் புரட்சிகர தொழிற்பாட்டின் மூலம் பால்கனை ஜனநாயக ரீதியில் ஐக்கியப்படுத்துவதன் மூல மட்டுமே தேசியப் பிளவுகளில் இருந் தலையெடுக்கவும் ஒரு நவீன கைத்தொழில் பொருளாதார அபிவிருத்திக்குமான அ கட்டுமானத்தை சிருஷ்டிக்க முடியும்.

மாபெரும் போலந்து மார்க்சிஸ்டான றோ லக்சம்பேர்க் தூரதிருஷ்டிமிக்க விதத்தி "சுயநிர்ணய" சுலோகத்துக்கு எதிர்ப்பை தெரிவித்தார். தேசிய முதலாளி வர்க்க தனது சொந்த வர்க்க இலக்குகளை எட்டி கொள்ள தவிர்க்க முடியாத விதத்தில் இதன சுரண்டிக் கொள்ளும் என எச்சரித்தா சுயநிர்ணய உரிமை ஒரு தேசிய விருப் இருந்து கொண்டுள்ளதாக எடுத்து கொண்டது. ஆனால் லக்சம்பேர்க் குறிப்பிட்ட போல் அத்தகைய ஒரு விருப்பு வர்க்க போராட்டத்துக்கு வெளியேயோ அல்ல மேலேயோ இருந்து கொண்டில்லை. ஆனா அது அதனது உற்பத்தியாகும்.

## நிரந்தரப் புரட்சி

இரண்டாம் உலக யுத்தத்துக்கு முன்னரு அதைத் தொடர்ந்து வந்தது தசாப்தங்களிலு தேசியப் பிரச்சினை மாபெரும் காலனித்து எதிர்ப்பு இயக்கங்களுடன் பிணைக்கப்பட் இருந்தது. மதம், மொழி, சாதி, கன குழுக்களால் பிளவுபடுத்தப்பட் புறக்கணிக்கப்பட்ட மக்களை ஐக்கியப்படுத் இந்த இயக்கங்கள் ஒரு ஆழமான ஜனநாய ஏகாதிபத்திய எதிர்ப்பு உள்ளடக்கத்தை கொண்டிருந்தன. ஆனால் தேசி இணைப்பானது காலனித்துவ அல்லது அரை காலனித்துவ அடிமைத்தளையில் இருந் விடுதலை பெறுவதுடன் இணைக்கப்பட் இருந்தும் கூட முதலாளித்துவத்துக்கு முந்தி சுரண்டல் வடிவங்களை துடைத்துக்கட்டுவது ஒரு துரித நவீன பொருளாதா அபிவிருத்திக்கான அடிப்படையா சேவையாற்ற இலாயக்கான பெரும் அரசிய பொருளாதார அலகுகளை ஸ்தாபித செய்வதும் தேசிய, இன பிரச்சினையி வர்க்க இயக்கமானது 19ம் நூற்றாண்டி மேற்கு ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலு இருந்ததைக் காட்டிலும் ஆசியாவிலு ஆபிரிக்காவிலும் பெரிதும் வேறுபட்டது விளங்கியது. ஏகாதிபத்தியத்தி அபிவிருத்தியுடனும் பாட்டாளி வர்க்க முதலாளி வர்க்கத்துக்கு ஒரு புரட்சிக போட்டியாக வளர்ச்சி கண்டதுடனும் தேச முதலாளி வர்க்கம் பெரிதும் மலட்டுத்தன கொண்டதாயும் பிற்போக்கானதாயும் வளர்ச் கண்டது. தேசிய ஜனநாயகப் புரட்சியி வரலாற்று ரீதியில் முற்போக்கானதாயு அவசியமானதாயும் விளங்கியதை முதலாளி வர்க்கத்தின் அரசியல் தலைமையின் கீ தொடர்ந்தும் அடைய முடியவில்லை.

இங்குதான் லியொன் ட்ரொஸ்கியி நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டின் சிறப்ப தங்கியுள்ளது. ஒரு காலங்கடந்த முதலாளித்து அபிவிருத்தியைக் கொண்ட நாடுகளி முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியி அத்தியாவசியமான பணியான - முதலாளித்துவத்துக்கு முன்னைய சுரண்ட வடிவங்களையும் ஒடுக்குமுறையையு ஒழிப்பதும் ஜனநாயக தேசிய ஒருங்கிணைப்பு சமத்துவமும் —தேசிய முதலாளி வர்க்கத்துக் எதிரான போராட்டத்தின் ஊடாக தொழிலா

www.padippakam.com

# ஐக்கிய அரசுகளுக்கான போராட்டமும்




.ா.ச.க.அங்கத்தவர்களை விடுதலைப் புலிகள் விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரி கட்சி ாழும்பு கோட்டை புகையிரத நிலையத்தின் எதிரில் நடாத்திய மறியல் போராட்டம்

க்கத்தின் தலைமையில் ஒடுக்கப்படும் களுடன் ஒரு புரட்சிகர கூட்டுக்கு செல்வதன் ம் உலகப் பாட்டாளி வர்க்கத்தின் லாளித்துவ எதிர்ப்பு போராட்டத்துடன் ணைந்த விதத்தில் மட்டுமே ர்த்தமாக்கப்பட முடியும்.

அதன் மூலம் தேசிய ஒடுக்குமுறைகளுக்கு ிரான போராட்டம் அதனது சிறப்பு க்கியத்துவத்தையோ அல்லது வசரத்தையோ இழந்துவிடாது. ஆனால் நாழிலாளர் வர்க்கத்தின் தலைமையின் கீழ் ந ஒடுக்கப்பட்ட மக்களின் புரட்சிகரக் ட்டை ஸ்தாபிதம் செய்வதன் மூலம் இது னைய சகல ஜனநாயகப் பணிகளைப் ாலவே தேசிய முதலாளி வர்க்கத்துக்கும் காதிபத்தியத்துக்கும் எதிரான ஒரு புதிய மக அமைப்புக்கான போராட்டத்தினுள் காணரப்படுகின்றது.

எதிரிடையாக தேசிய விடுதலை அது சமூக டுதலையில் இருந்து தனிமைப்படுத்தப்பட்டு ருக்கும் வரையில் ஒரு அரசியல் னக்கோட்டையாகவே விளங்கும். இந்தியா, னா மற்றும் காலனித்துவ மக்களின் தேசிய ந்திரத்துக்கான போராட்டத்தை ஆதரித்த தே வேளையில் ட்ரொட்ஸ்கி நான்காம் கிலத்தின் சார்பில் 1940ல் எழுதுகையில் ன்வருமாறு எச்சரித்தார். "காலங்கடந்த தேசிய ரசுகள் ஒரு சுதந்திரமான ஜனநாயக பிவிருத்தியைத் தொடர்ந்தும் கொண்டிருக்க டியாது. சிதைந்து போகும் தலாளித்துவத்தினால் சூழப்பட்டும் காதிபத்திய முரண்பாடுகளில் சிக்குண்டும் ான நிலையில் ஒரு பின்தங்கிய அரசின் ந்திரமானது தவிர்க்கமுடியாத விதத்தில் ரு அரைப் போலியாகவே விளங்கும். தனது அரசியல் ஆட்சியானது உள்வாரி ர்க்க முரண்பாடுகளதும் வெளிவாரி நருக்குவாரங்களதும் செல்வாக்கின் கீழ் விர்க்க முடியாத விதத்தில் துருக்கியின் க்கள் கட்சி, சீனாவில் குவாமின்டாங். இந்தியாவின் நாளைய காந்தி ஆட்சி பான்றவை மக்களுக்கு எதிரான ர்வாதிகாரத்தினுள் விழும்."

இந்த முன்நோக்கு இரண்டாம் உலக த்தத்தின் பின்னைய காலனித்துவ ஒழிப்பு அனுபவங்களின் மூலம் துன்பகரமான றையில் ருசுப்படுத்தப்பட்டுள்ளது. இதில் பெரும் காலனித்துவ பேரரசுகள் ாயப்பட்டதோடு அரசியல் அதிகாரம் தேசிய தலாளி வர்க்கத்தின் ஆட்சியிடம் கைமாற்றப்பட்டது. அரச அதிகாரத்தை கையேற்ற தேசிய முதலாளி வர்க்கம் டுக்கப்படும் வெகுஜனங்களின் ஒரு விடுதலையாளனாகத் தொழிற்படவில்லை. ஆனால் ஏகாதிபத்திய கொள்ளையில் ஒரு னிஷ்ட பங்காளனாக செயற்பட்டது. புதிதாகச் தந்திரம் அடைந்த முதலாளித்துவ ஆட்சிகள் "தேசிய அபிவிருத்தி திட்டங்களை" கையாண்டன. அவை முதலாளித்துவத்துக்கு முன்னைய ஒடுக்குமுறை வடிவங்கள் தொடர்ந்து நீடிப்பதை ஒழிக்கவோ அல்லது அவர்களின் நாடுகள் ஒரு கையளவு இயற்கை வளங்களிலும் விவசாய ஏற்றுமதிகளிலும் தங்கியிருப்பதை நீக்கவோ அல்லை. இந்தத் திட்டங்கள் பொதுவில் "சோசலிசங்களாகச்" சோடிக்கப்பட்டன.எவ்வாறெனினும் இவை அரிதான வளங்களை ஒரு பேராசையும் கொள்ளை நோக்கும் கொண்ட முதலாளி வர்க்கம் திசைதிருப்பத் துணைபோயிற்று.

காலனி ஒழிப்பு தேசிய ஒடுக்குமுறை பிரச்சினைகளுக்கு ஒரு நிசமான தீர்வு காண்பதற்கான ஒரு அடிப்படையை வழங்கிவிடவில்லை. காலனித்துவ கொள்ளைக்காரர்களாலும் ஏகாதிபத்திய தந்திரோபாயக்காரர்களாலும் ஸ்தாபிதம் செய்யப்பட்ட அரசியல் அலகுகள் அவை அமைக்கப்பட்ட நோக்கத்துக்கு மாறாக புதிய ஆசிய, ஆபிரிக்க அரசுகள் அடிப்படை ஜனநாயக கொள்கைகளையே இழிவுபடுத்தின. அவற்றின் அரச எல்லைகள் எந்த ஒரு விதத்திலும் தேசிய இனக்குழு அல்லது புவியியல் எல்லைகளுடனோ அல்லது வெகுஜனங்களின் ஜனநாயக அபிலாசைகளுடனோ தொடர்புபடவில்லை. வெகுஜனங்களின் அபிலாசைகளை ஈடுசெய்வதற்கு மாறாக அவர்களின் அபிலாசைகளுக்கு முரணான விதத்தில் தேசிய முதலாளி வர்க்கத்தின் ஆட்சிகள், ஜனநாயக உரிமைகளை மீறியதோடு அதிகாரத்துக்கும் வசதி வாய்ப்புக்களுக்காகவும் சமூக பதட்ட நிலையையும் சம்பளப் போராட்டங்களையும் தடம்புரடளச் செய்யவும் வகுப்புவாத,தேசிய இனக்குழு பதட்டங்களையும் பயன்படுத்தினர்.

இந்தியத் துணைக்கண்டத்தில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடம் இருந்து அரசியல் அதிகாரம் தேசிய முதலாளி வர்க்க ஆட்சியாளர்களுக்கு இந்தியா, பாகிஸ்தான், இலங்கை மாற்றப்பட்டது காலனி ஒழிப்புக்கு ஒரு சிறப்பான எடுத்துக்காட்டாகும். இருபதாம் நூற்றாண்டின் முதல் அரை இறுதிக் காலகட்டத்தில் இந்தியத் துணைக்கண்டம் ஒரு சக்திவாய்ந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தினால் அதிர்ந்தது. முக்கியமாக அது தொழிலாளர், விவசாயிகளின் சமூகப் பதட்டத்தினால் முன்தள்ளப்பட்டது. ஆனால் அது தொடர்ந்து தேசிய முதலாளி வர்க்கத் தலைமையின் கீழ் இருந்து வந்ததால் இந்தப் பலம் வாய்ந்த கிளர்ச்சி பிரித்தானிய ஏகாதிபத்தியத்துடன் ஒரு சமரசத்தில் முற்றுப்பெற்றது. அது இந்தியா ஒரு இனவாத அடிப்படையில் முஸ்லீம் பாகிஸ்தான் எனவும் இந்து இந்தியா எனவும் பிரிவினை செய்யப்பட்டது. இதன் மூலம் பிரபுத்துவம் சாதிவாதத்துடன் இனவாதப் பிளவுகளை நிலைநிறுத்தியதோடு மோசமாக்கவும் செய்தது. இந்தியத் தேசிய காங்கிரஸ் அதனது சொந்த வேலைத்திட்டமான ஒரு ஐக்கிய இந்தியா என்ற வேலைத்திட்டத்தைக் கைவிட்டு விட்டு பிரிவினையை ஏற்றுக்கொண்டது. ஏனெனில் இதன் வர்க்கச் சேர்க்கையும் நோக்கும் இந்து, முஸ்லீம் விவசாயிகளும் தொழிலாளர்களும் தமது நிலச்சுவாந்தர்கள் முதலாளித்துவ சுரண்டலாளர்களுக்கு எதிராக கிளர்ந்து எழுந்து ஐக்கியப்படுவதே ஒரே வழி என்பதை பின்வாங்கச் செய்தது.

இன்று தேசிய முதலாளி வர்க்க ஆட்சியின் ஒரு அரை நூற்றாண்டின் பின்னர் இந்தியன் வெகுஜனங்களின் சீரழிவு பிரித்தானியர் ஆட்சியின் கீழ் இருந்ததைக் காட்டிலும் பெரிதும் மோசமானதாகியுள்ளது. கிட்டத்தட்ட 320 மில்லியன் இந்தியர்கள் முழுப்பட்டினியில் வாழ்கின்றனர். ஒரு முழுநாளுக்கு அவசியமான கலோரி உணவு இல்லாதுள்ளனர். 186 மில்லியன் மக்கள் சுத்தமான தண்ணீர் இல்லாதுள்ளனர். கிட்டத்தட்ட 650 மில்லியன் மக்கள் சுகாதார வசதிகள் இல்லாதுள்ளனர். சமீப தசாப்தங்களில் சமூக நெருக்கடி ஆழமாகியதால் முதலாளி வர்க்கம் சாதி, இன, மொழிப் பிளவுகளைக் கையாள்வதில் பெரிதும் தங்கியுள்ளது. மூன்று தடவைகளில் இந்தியா பாகிஸ்தானுடன் யுத்தத்தில் ஈடுபட்டது. கடந்த மேயில் இந்து சோவினிச பாரதீய ஜனதா கட்சி தலைமையிலான இந்திய அரசாங்கம் இந்திய இராணுவத்தை அணுவாயுதமயமாக்கம் செய்யும் தயாரிப்பு நடவடிக்கையாக அணுக்குண்டை வெடிக்க வைத்தது.

பிரித்தானியர் ஆட்சிக்கு ஒரு முடிவு கட்ட நெருக்க சில வெகுஜன இயக்கங்களுக்கு இந்திய முதலாளி வர்க்கம் ஊக்கமளித்ததைப் போல் அல்லாது இலங்கை முதலாளி வர்க்கம் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்துடன் எதுவிதமான உறவும் கொண்டிருந்தது கிடையாது. இது பிரதான நிலப்பரப்பில் இருந்து இலங்கையை மனம்போன போக்கில் அரசியல் ரீதியில் பிரிப்பதில் தொங்கிக் கொண்டது. இந்தியாவில் இருந்து தீவிரவாத செல்வாக்குகளைத் தடைசெய்வதற்கான ஒரு வழியாக இதைக் கருதியது. பாக்குநீரிணையைக் கடந்து தமது இந்தியன் சகோதரர்களுடன் ஐக்கியப்படும் இலங்கைப் போராளித் தொழிலாளர்களின் முயற்சிக்குக் குறுக்கே இது நின்றுகொண்டது.1948ல் பிரிட்டிசாரால் இதற்கு வழங்கப்பட்ட அரச அதிகாரத்தைக் கொண்டு இலங்கை முதலாளி வர்க்கம் புதிய அரசின் சிங்களப் பெரும்பான்மையினரை தமிழ்ச் சிறுபான்மையினருக்கு எதிராக தூண்டிவிடும் பொருட்டு அதன் ஆட்சியை உடனடியாக இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டது. தமிழ் அரசியல் பிரமுகர்களின் பூரண சம்மதத்துடன் "சுதந்திர" இலங்கையின் முதலாவது பாராளுமன்றம் மலைநாட்டு பெருந்தோட்டத் தமிழ்த் தொழிலாளர்களின் குடியுரிமையைப் பறித்தது. 1949ம் ஆண்டின் குடியுரிமை மசோதா சிறீலங்கா, ஈழம் தமிழர்களின் ஜனநாயக உரிமைகள் மீதான தொடர்ந்து வந்த தாக்குதல்களுக்கான அத்திவாரத்தையிட்டது.

## தொழிலாளர் வர்க்கத் தலைமை நெருக்கடியும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தோற்றமும்

வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் எப்போதும் அல்லது நீண்ட காலத்துக்கு முன்பிருந்தே ஒரு சுதந்திர அரசை ஸ்தாபிதம் செய்ய முயன்றனர் எனக் விடுதலை புலிகள் காட்டுவது கஷ்டம். மாறாக தமிழ்ப் பிரிவினைவாதம், லங்கா சமசமாஜக் கட்சி நான்காம் அகிலத்தில் இருந்து பிளவுபட்டு, நிரந்தரப் புரட்சி வேலைத்திட்டத்தைப் புறக்கணித்ததைத் தொடர்ந்து தொழிலாளர் வர்க்கத் தலைமையில் ஏற்பட்ட நெருக்கடியினால் கொழுத்தது.

சுதந்திரத்தைத் தொடர்ந்து வந்த காலப்பகுதியில் இயக்கம் தொழிலாளர் வர்க்கத் ட்ரொட்ஸ்கிச தலைமையில் இலங்கையில் இருந்தது ஒரு சிறப்பம்சமாகும். 1948ல் பெருந்தோட்டத் தமிழ் தொழிலாளர்களின் குடியுரிமைக்கான போராட்டத்தில் புதிய அரசினுள் தமிழர்களின் ஜனநாயக உரிமைகளை ஸ்தாபிதம் செயவதும் சிங்கள சோவினிசத்தை எதிர்ப்பதும் நேரடியாக தொழிலாளர் வர்க்கத்துடனும் அதன் தலைமையாக அன்று விளங்கிய ட்ரொட்ஸ்கிச லங்கா சமசமாஜக் கட்சியுடனும் இணைந்து கொண்டிருந்தது.தமிழ் வெகுஜனங்கள் தொழிலாளர் வர்க்கம் தமது ஜனநாயக உரிமைகளை ஈட்டிக் கொடுக்கும் என்பது 1953 ஹர்த்தால் மூலமும் 1963 64 21 கோரிக்கைகள் இயக்கத்தின் மூலமும் சடரீதியில் எடுத்துக்காட்டப்பட்டது.

எவ்வாறெனினும் லங்கா சமசமாஜக் கட்சியின் தேசியவாத சீரழிவு தமிழ் மக்கள் போராட்டத்துக்கும் தொழிலாளர் இயக்கத்துக்கும் இடையேயான உறவுகளை அடிப்படையில் சிதறுண்டு போகச் செய்தது. இது தமிழ் வெகுஜனங்கள் முதலாளித்துவ தேசியவாத அரசியல் வண்டியின் பக்கம் ஈர்க்கப்படும் நிலைமைகளைச் சிருஷ்டித்தது. இலங்கை முதலாளித்துவ தேசிய அபிவிருத்தித் திட்டங்களைத் தழுவிக்கொண்டிருந்த ஒரு தசாப்தத்தின் பின்னர் ல.ச.ச.க. 1964ல் சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஒரு கூட்டரசாங்கத்துக்கு சென்றதன் மூலம் ட்ரொட்ஸ்கிசத்துடனான பிளவைப் பூர்த்தி செய்து கொண்டது. சி.ல.சு.க. வின் ஸ்தாபகர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க சிங்களம் மட்டும் அரச மொழியாக்கப்பட வேண்டும் என்ற பிரச்சாரத்தை வெற்றிகரமான முறையில் முன்னெடுத்தவர். ல.ச.ச.க. 1972ல் சி.ல.சு.க.வுடன் இரண்டாவது கூட்டரசாங்கத்தில் இருக்கும் போது சிங்களத்துக்கு தனிச்சிறப்புரிமைகள் கிடைப்பதையும் பௌத்தம் அரச மதமாக்கப்படுவதையும் அரசியலமைப்பு சட்டத்தினால் ஊர்ஜிதம் செய்வதில் முன்னணிப் பாத்திரம் வகித்தது.

தொழிலாளர் வர்க்கம் தம்மை கைவிட்டுவிட்டதாக எண்ணிய தமிழ் மக்களில் பெரும் பகுதியினரும் ல.ச.ச.க. சிங்கள சோவினிசத்துக்கு அடிபணிந்து போன சமயத்தில் தேசிய அடக்குமுறைகளை எதிர்த்து நிற்பதற்கான புதிய வழிகளைத் தேடினர். இது இறுதியில் 1970பதுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளையும் அதையொத்த தமிழ் தேசியவாத குழுக்களையும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் மாணவர். இளைஞர்கள் மத்தியில் தோன்றச் செய்தது.

தமிழ்ப் பிரிவினைவாதத்தின் தோற்றத்துக்கான இரண்டாவது மாபெரும் காரணி, இலங்கையிலும் அனைத்துலகிலும் ஸ்டாலினிசத்தின் பாத்திரமாகும். ல.ச.ச.க.வுக்கு நீண்ட காலத்துக்கு முன்பே இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி தொழிலாளர் வர்க்கத்தை பண்டாரநாயக்காவுக்கும் அவரது சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் கீழ்ப்படுத்த முயன்று வந்தது. கம்யூனிஸ்ட் கட்சி சி.ல.சு.க.வை "முற்போக்கினதும்" "ஏகாதிபத்திய எதிர்ப்பு" முதலாளி வர்க்கத்தினதும் பிரதிநிதி என அழைத்துக் கொண்டது.இது இரண்டு கட்டப் புரட்சியின் இலங்கை வகையறாவாக விளங்கியது. மென்ஷிவிக்-ஸ்டாலினிச கருத்தின்படி தேசிய முதலாளி வர்க்கம் ஜனநாயகப் புரட்சியை பூர்த்தி செய்யும் வரையில் தொழிலாளர் வர்க்கம் அதனது தலைமையைக் கட்டாயம் ஒப்புக் கொண்டாக வேண்டும்.

எதிர்ப்புரட்சி சோவியத் ஸ்டாலினிச அதிகாரத்துவம் வகித்த பாத்திரம் இன்னும் பெரும் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. குளிர் யுத்தத்தின் வரையறைக்குள் சோவியத் யூனியன்(USSR) ஏகாதிபத்தியத்தின் மீது நெருக்குவாரம் கொணர்வதற்கான சாதனங்களாக பல்வேறு தேசியவாத இயக்கங்களையும் ஊக்குவித்ததோடு அவற்றைச் சாதுரியமாகக் கையாண்டது. சோவியத் அதிகாரத்துவம் அத்தகைய இயக்கங்களுக்கு ஆதரவளித்தமை ஏகாதிபத்தியத்துடனான அதனது உறவுகளுக்கு எப்போதும் கீழ்ப்படுத்தப்பட்டது. எரிட்டேரியன் தேசியப் போராட்டத்துக்கான தனது ஆதரவை சோவியத் யூனியன் விலக்கிக் கொண்டமையும் எதியோப்பிய மன்னருடனான பழைய எல்லைகளைப் பராமரிக்கும் முயற்சியாக மென்கிஸ்டு ஆட்சிக்கு பின்னர் இராணுவ ஆதரவு வழங்கியமையும் பல்வேறு தேசிய இயக்கங்களுக்கும் மாஸ்கோ வழங்கிய ஆதரவு பெரும் வல்லரசு அரசியல் ஆதிக்க நலன்களின் பேரில் கணக்கிடப்பட்டுச் செய்யப்பட்டவை என்பதற்கு ஒரு அப்பட்டமான உதாரணமாகும். இருப்பினும் சோவியத் அதிகாரத்துவம் தேசியவாதத்தை ஊக்குவித்து வந்தமையானது தேசிய விடுதலை முன்நோக்கானது அது சில வரலாற்று நியாயத்துடன் கூடிய உலக சோசலிசத்துக்கான போராட்டத்தில் இருந்தும் புரட்சிகரச் சிறப்பியல்புகளில் இருந்தும்

-12ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

# சோ.ச.க.வும் சிறீலங்கா—ஈழம் சோசலிச ஐக்கிய அரசுகளுக்கான போராட்டமும்

(11ம் பக்கத் தொடர்ச்சி)

அன்னியப்பட்டதாகக் காட்ட உதவியது.

ல.ச.ச.க.வின் காட்டிக் கொடுப்பே தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தை தொழிலாளர் வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்தில் இருந்து முறிவுபடவும் ஸ்டாலினிசம் தேசியவாதத்தை நாசகரமான விதத்தில் ஊக்குவிக்கவும் செய்தது. சோ.ச.க.வின் முன்னோடியான பு.க.க. 1972 அரசியலமைப்புச் சட்டத்துடனும் பல்கலைக்கழக இனவாத தரப்படுத்தல் முறையுடனும் தோன்றிய தமிழ் இளைஞர் குழுக்களிடையே தலையிட்டது. இந்தக் குழுக்கள் பெரும் போராளித் தன்மையையும் தியாகத்துக்கான தயார் நிலையையும் காட்டிக் கொண்ட அதே வேளையில் இவர்கள் தமிழ் பிரமுகர்களின் வர்க்க அரசியலுடன் கட்டுண்டு போய்க் கிடந்தனர். இவர்கள் தமது ஆரம்ப காலங்களில் தமிழ் முதலாளி வர்க்கத்தின் முக்கிய அரசியல் அமைப்பாக விளங்கிய தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் நெருக்கமான முறையில் சேர்ந்து தொழிற்பட்டனர்.

1970பதுகளின் அரை இறுதிக் கட்டத்தில் குறிப்பாக யூ.என்.பி.1977ல் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் அது தமிழர்கள் மீது புதிய தாக்குதல்களைக் கட்டவிழ்த்துவிட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளும் ஏனைய தமிழ் இளைஞர் குழுக்களும் தமது வாய்வீச்சுக்களிலும் உபாயங்களிலும் தீவிரம் கொண்டவையாக மாறின. இவை முதலாளித்துவ தேசியவாத இயக்கங்கள் பயணம் செய்த பாதைகளைக் கடைப்பிடித்தன. இவை ஏனைய முதலாளித்துவ அரசுகள்(இந்தியா) சோவியத் யூனியன், சீன ஸ்டாலினிஸ்டுகள் பக்கம் ஆதரவுக்குத் திரும்பின. மேலும் இதுகாறும் தாம் புறக்கணித்துவந்த கோரிக்கைகளைக் கொண்ட தமிழ்த் தொழிலாளர், விவசாயிகள் பக்கம் ஆதரவுக்குத் திரும்பினர். ஸ்டாலினிஸ்டுகளுடன் ஆதரவு காட்டிக் கொள்ள விடுதலைப் புலிகளும் மற்றும் தீவிரவாத தமிழ்த் தேசியவாதக் குழுக்களும் தம்மை "சோசலிஸ்டுகள்" எனப் பிரகடனம் செய்து கொண்டனர். இந்தத் தேசியவாத குழுக்கள் தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் அபிலாசைகளைத் தொட்டதும் கிடையாது. அவர்களின் தேசியவாத வேலைத்திட்டங்கள் ஏகாதிபத்தியவாதிகள் திணித்த பாக்குநீரிணை எல்லை பரிசுத்தத்தினை சவால் செய்ததும் கிடையாது. இப்பிரச்சினைகளை எழுப்பும்போது நாம் ஒரு மாபெரும் தமிழ்நாடு திட்டத்தையோ அல்லது தமிழ் அரசையோ சிபார்சு செய்வது பெரிதும் முற்போக்கானது அல்லது நின்றுபிடிக்கக் கூடிய இலக்கு எனக் கருதவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளதும் மற்றும் தமிழ் பிரிவினைவாதக் குழுக்களதும் நோக்கும் அபிலாசைகளும் வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ் முதலாளி வர்க்கப் பிரமுகர்களின் தனிச்சிறப்புரிமைவாத அரசியலின் தொடர்ச்சியை எடுத்துக்காட்டுகின்றது.

## தேசிய விடுதலை என்ற பெயரில் தனிச்சிறப்புரிமைவாதம் —புதிய தேசியவாத இயக்கங்கள்

1970பதுகளிலும் 1980பதுகளிலும் சுயநிர்ணயம் என்ற பெயரில் ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் காலனி ஒழிக்கப்பட்ட அரசுகளை கூறுபோடத் தோன்றிய புதிய பல தேசிய இயக்கங்களுள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பும் ஒன்றாகும். இந்தியாவை எடுத்துக் கொண்டால் கடந்த இரண்டு தசாப்தங்களில் பிரிவினைவாத பிரச்சாரங்களால் பஞ்சாப், காஷ்மீர், வடகிழக்கு மாநிலம்(அசாம், குர்காஸ், போடாஸ் மற்றும் கணக்குழு மக்கள் உட்பட) அதிர்ந்து போயிற்று.

வரலாற்று ரீதியிலான தேசியவாத இயக்கங்கள் காலனித்துவத்துக்கு எதிரான போராட்டத்தில் வேறுபட்ட மக்களை ஒன்றுபடுத்த வாதிட்டு இருக்குமானால் இந்தப் புதிய தேசியவாத இயக்கங்களோ இனக்குழு மொழி, மத வேறுபாடுகளை புதிய அரசுகளைச் சிருஷ்டிப்பதற்கான தமது கோரிக்கைகளின் அடிப்படையாக்கிக் கொண்டன.

மிகவும் ஆழமான சமூகப் பொருளாதார தேசியக் குறைபாடுகள் காரணமாக இந்த தனிச்சிறப்புரிமைவாத இயக்கங்கள் மக்கள் ஆதரவை வெற்றிகொண்டதோடு வீர தியாகங்களுக்கும் ஊக்கம் வழங்கியது. ஆனால் வரலாற்று தேசியவாத இயக்கங்களின் அழுகலும் அவை ஸ்தாபிதம் செய்த தேசிய அரசுகளும் தேசிய இனக்குழு, மொழி, மத பிரிவினைவாத வேலைத்திட்டத்தை செல்லுபடியான தாக்கிவிடவில்லை. மாறாக இது நிரந்தரப் புரட்சியின் ட்ரொட்ஸ்கிச முன்னோக்கின் அவசரத்தைக் கோடிட்டுக் காட்டுவதோடு இந்தியத் துணைக் கண்ட ட்ரொட்ஸ்கிஸ்டுகளின் தூரதிருஷ்டியை எடுத்துக்காட்டுகின்றது. அவர்கள் 1947ம் 48ம் காலப்பகுதியில் புதிதாக உருவாக்கப்பட்ட இந்தியா, பாகிஸ்தான், இலங்கை அரசுகள் ஒரு அடிப்படை வரலாற்று அர்த்தத்தில் நின்று பிடிக்க முடியாதவை என்றும் அவை ஜனநாயகப் புரட்சியின் வெற்றி அல்ல.கருச்சிதைவின் உற்பத்தி எனவும் வலியுறுத்தினர்.

தென்ஆசியாவிலும் சரி பால்கன் அல்லது ஆபிரிக்காவிலும் சரி பல்லாயிரக் கணக்கான தேசிய இனக்குழுக்களை குழப்பத்தில் இருந்து விடுவித்து தேசிய அரச எல்லைகளுக்கு இணங்கிப் போக வைக்க முடியாது. அங்ஙனம் செய்ய முயற்சிப்பதானது முடிவில்லாத பிரிவினைக் கோரிக்கைகளுக்குக் கதவுகளைத் திறந்து விடுவதாகும். மேலும் அவை தவிர்க்கமுடியாத விதத்தில் ஏகாதிபத்தியச் சக்திகளால் சாதுரியமாகக் கையாளப்படவும் பயங்கரமான இரத்தக் களரிகளுக்கும் இட்டு செல்லும்.

தேசிய ஒடுக்குமுறைக்கும் மோதுதல்களுக்கும் ஒரு ஜனநாயகமானதும் நிரந்தரமானதுமான தீர்வை ஒரு உயர்ந்த சமூக அமைப்புக்கான ஒரு போராட்டத்தின் பாகமாக மட்டுமே முதலாளித்துவத்தையும் அது வரலாற்று ரீதியில் வேரூன்றியுள்ள தேசிய அரச முறையை ஒழிப்பதன் மூலம் மட்டுமே யதார்த்தமாக்க முடியும்.

வரலாற்று ரீதியான தேசிய இயக்கங்களின் சீரழிவும் புதிய பிரிவினைவாத இயக்கங்களின் அலைவீச்சின் தோற்றமும் அரசியல் பொருளாதாரத்தின் பெரும் மாற்றங்களில் வேரூன்றி உள்ளது.

உற்பத்தியின் பூகோளரீதியான ஒருங்கிணைப்பு, பின்தங்கிய முதலாளித்துவ அபிவிருத்தி கொண்ட நாடுகளின் தேசிய முதலாளி வர்க்கத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் இடையேயான மோதுதலை ஏற்படுத்தும் பொருளாதாரக் கண்டிப்புக்களைக் கீழறுத்துவிட்டது. உற்பத்தி மூலதனம் பெருமளவுக்கு தேசிய அரச கட்டுமானத்தினுள் ஒழுங்கமைக்கப்பட்டு கிடக்கும் வரையும் தேசிய அரசின் அரசியல் கட்டுப்பாடு தோற்றம் எடுக்கும் தேசிய முதலாளி வர்க்கம் ஏகாதிபத்திய நெருக்குவாரத்தைத் தாக்கிப்பிடித்து நிற்கவும் உள்நாட்டுச் சந்தைமீது கட்டுப்பாட்டை வலியுறுத்தவும் முக்கிய சாதனங்களை வழங்கியது. பூகோளமயமாக்கமும் இதனால் இந்தத் தேசியச் சந்தைகளின் சிறப்பு முக்கியத்துவம் வீழ்ச்சிகண்டு போனமையும் இந்தியா தொடக்கம் மெக்சிக்கோ, ஆர்ஜன்ரைனா வரையிலான முதலாளித்துவ தேசிய ஆட்சியாளர்களை அவர்களின் பாரம்பரிய தேசிய பொருளாதார மூலோபாயங்களை கைவிடும்படி நெருக்கியுள்ளது. இப்போது பல்வேறுபட்ட தேசிய முதலாளி வர்க்க ஆட்சிகள் தமது நாடுகளின் மனித இயற்கை வளங்களைச் சுரண்டும் அனைத்துலக மூலதனத்துக்கு இருந்துவரும் சகல தடைகளை அகற்றுவதன் மூலம் தமது நலன்களை அடைய முயற்சிக்கின்றார்கள்.

புதிய பூகோளரீதியான பொருளாதார உறவுகள் பாரம்பரிய முதலாளித்துவ தேசிய இயக்கங்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாசாங்குகளை தகர்த்து எறிந்துவிட்டது. அத்தோடு அவை ஒரு புதிய வகையான தேசிய இயக்கத்தின் தோற்றத்துக்கான புறநிலை அடிப்படையையும் வழங்கியுள்ளன. அது அனைத்துலக மூலதனத்துடன் அவற்றின் பிரமுகர்கள் ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் இன்றுள்ள அரசுகளை கூறுபோட முயற்சிக்கின்றன.ஏகாதிபத்தியத்தினால் ஒடுக்கப்படும் நாடுகளில் மட்டுமன்றி கணிசமான அளவு பிரிவினைவாத இயக்கங்கள் பழைய முதலாளித்துவ தேசிய அரசுகளிலும் கனடா, இத்தாலி, பிரித்தானியா உட்பட தோன்றியுள்ளன.

சமீபத்திய ஒரு அறிக்கையில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு குறிப்பிட்டது போல் "இந்தியாவிலும் சீனாவிலும் தேசிய இயக்கங்கள் வேறுபட்ட மக்களை ஏகாதிபத்தியத்துக்கு எதிரான ஒரு பொதுப் போராட்டத்தில் ஐக்கியப்படுத்தும் ஒரு முற்போக்கும் பணியை முன்வைத்தன. இது தேசிய முதலாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் யதார்த்தமாகாது என்பதை நிரூபித்தது. இந்தப் புதிய வடிவிலான தேசியவாதம் உள்ளூர் சுரண்டலாளர்களின் நலன்களுக்கு இன, மொழி, மத அடிப்படையில் பிரிவினையை ஊக்குவிக்கின்றது. அத்தகைய இயக்கங்கள் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தில் எதுவும் செய்வதற்கில்லை. அல்லது அவை ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக அபிலாசைகளை எந்தவிதத்தில் உள்ளடக்கிக் கொண்டதும் இல்லை. அவை தொழிலாளர் வர்க்கத்தைப் பிரிக்கவும் வர்க்கப் போராட்டத்தை இனக்குழு-இனவாத யுத்தங்களாக திருப்பவுமே சேவை செய்கின்றன." (பூகோளமயமாக்கமும் அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கமும் ஒரு மார்க்சிச ஆய்வு பக்கம் 109)

## தமிழீழ விடுதலைப் புலிகளின் வரலாறு

ஒரு கால்நூற்றாண்டுக்கும் மேலாக தீவிரவாத தமிழ்த் தேசியவாதக் குழுக்கள் தமிழரசுக் கட்சியினதும் தமிழர் விடுதலைக் கூட்டணியினதும் நாடாளுமன்ற அரசியலமைப்புக்கு அமைவான அரசியலுக்கு ஒரு பதிலீடாகத் தோன்றின. அவை ஈழம் தமிழ் மக்களை தேசிய ஒடுக்குமுறையில் இருந்து விடுதலை செய்ய இலாயக்கற்றவையாகவும் தமிழ் வெகுஜனங்களின் கொதிக்கும் சமூகப் பிரச்சினைகளுக்கு எந்த ஒரு தீர்வையும் வழங்க இயலாதவையாகவும் காட்டிக் கொண்டன.

ஈழம் மக்கள் ஜனநாயகக் கட்சி(EPDP) தமிழ் ஈழ விடுதலை அமைப்பு (TELO) தமிழீழ மக்கள் விடுதலை அமைப்பு(PLOTE) மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு போட்டியான தேசியவாத குழுக்களும் சிறீலங்கா அரசுடனும் முதலாளி வர்க்கத்துடனும் கூட்டுச் சேர்ந்து கொண்டன. இன்று அவை வடக்கு கிழக்கு மாகாண தமிழ் மக்களை கொழும்பு அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொணரும் போராட்டத்தில் சிறீலங்கா பாதுகாப்பு படையின் துணைப்படையாக தொழிற்படுகின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தமிழ் மக்களின் சுயநிர்ணயம் பற்றிய அதனது வார்த்தை ஜாலங்களுக்கிடையேயும் சிங்கள முதலாளி வர்க்கத்தின் சில பகுதியினருடனும் இந்திய அரசாங்கத்துடனும் ஏகாதிபத்திய சக்திகளுடனுமான சூழ்ச்சிகளுடன் தனது அடித்தளத்தை தொடர்கின்றது. விடுதலைப் புலிகளின் முதன்மைத் தலைவரான பிரபாகரன் இந்திய இலங்கை உடன்படிக்கையில் கைச்சாத்திட ஏமாற்றப்பட்டுவிட்டதாகக் கூறப்பட்ட 10 ஆண்டுகளின் பின்னரும் விடுதலைப் புலிகள் தமிழர்களின் சாத்தியமான விடுதலையாளர்களாக புதுடில்லி ஆட்சியாளர்களையே இன்னமும் காணுகின்றது. அத்தோடு இந்திய முதலாளி வர்க்கத்தை தென்ஆசிய பிராந்திய சக்தியாக ஜம்பம் அடிப்பதிலும் ஆர்வமும் அக்கறையும் காட்டுகின்றது. முன்னர் "சோசலிசம்" என்ற பம்மாத்தின் கீழ் தேசியவாத பொருளாதார மூலோபாய தரகராக விளங்கிய விடுதலைப் புலிகள் இப்போது ஒரு சுதந்திர தமிழ்ஈழம் கிழக்கு ஆசிய "புலிகளுடன்" போட்டியிடும் எனவும் முதலீட்டாளர்களின் மலிவு உழைப்பு சுவர்க்கமாக விளங்கும் எனவும் வாதிடுகின்றது. வெளிநாட்டு செல்வந்த முதலாளிகளில் நிதிக்கு சார்ந்திருப்பது பற்றி மௌனம் சாதிக்கும் விடுதலைப் புலிகளின் வர்க்க தந்திரமானது அதன் காரியாளர்களின் தியாகங்களை அவமானம் செய்யும் அரசியல் உறவுகளுக்கு ஈவிரக்கமற்ற விதத்தில் இட்டுச் செல்கின்றது. 1994ல் விடுதலைப் புலிகள் இன்றைய பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கு தேர்தலில் ஆதரவளித்தது. இன்று இது ஏகாதிபத்திய ஆதிக்கம் கொண்ட ஐக்கிய நாடுகள் சபையை உள்ளே கொணர்வதன் மூலம் தமிழ் சிறீலங்கா பிரச்சினையை "அனைத்துலக மயமாக்கலாம்" என நம்புகின்றது.

சிங்கள வெகுஜனங்களைப் பொறுத்தமட்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் என்பது பகைமையும் வெறுப்பும் அன்றி வேறொன்றும் அல்ல. அதிகரித்த அளவில் இது தெற்கில் உள்ள சிங்களத் தொழிலாளர்கள் மற்றும் குடிசனங்கள் மீது குண்டு வெடிப்புக்களிலும் ஆயுதத் தாக்குதல்களிலும் ஈடுபட்டுள்ளது. அத்தகைய சில்லறைத்தனமான நடவடிக்கை அல்லது பயங்கரம் சிங்களச் சோவினிசத்தை பலப்படுத்த மட்டுமே துணைபோகின்றது. தமிழ் மக்களின் போராட்டத்தை இனக்குழு இனவாத அர்த்தத்தில் மதிப்பீடு செய்யவும் சிறீலங்கா முதலாளி வர்க்கத்தின் அட்டூழியங்களுக்காக சிங்கள ஒடுக்கப்படும் மக்களைப் பழிவாங்கவுமே துணைபோகின்றது.

சமீபகாலங்களில் விடுதலைப் புலிகள் 1996ல் யாழ்ப்பாணத்தில் கட்டுப்பாட்டை இழந்தது உட்பட கணிசமான இராணுவப் பின்னடைவுகளுக்கு உள்ளானது. ஆனால் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் நெருக்கடியினாலும் தெற்கில் யுத்தத்துக்கு எதிராக வளர்ச்சி கண்டுவரும் எதிர்ப்பினாலும் விடுதலைப் புலிகள் மீண்டும் ஒரு தடவை எதிர்த்தாக்குதலில் இறங்குவது சாத்தியமாகலாம். புதிய இராணுவ ரீதியான வெற்றிகள் விடுதலைப் புலிகளின் தலைமையிடம் இருந்து அனைத்துலக அங்கீகாரத்துக்கான புதிய நெருக்குவாரங்களுக்கு இட்டுச் செல்லலாம்.இன்று இருந்து கொண்டுள்ள அரசு முறைக்கு ஸ்திரமின்மையின் தாக்கம் ஏற்படுத்தும் சவால் பற்றிய அச்சம் உலகின் பெரும் சக்திகளை ஒரு தமிழ் தேசிய அரசுக்கான ஒரு அங்கீகாரத்தையும் பேரம் பேசும் மேசைக்கு வரும்படி விடுதலைப் புலிகளுக்கு அழைப்பையும் விடுக்கலாம்.

1987 இந்திய இலங்கை உடன்படிக்கையில் ஏற்கனவே நிழலாடியதைக் காட்டிலும் வேறு எந்த வகையில் தமிழீழம் கோரிக்கை யதார்த்தமாக முடியும். அமெரிக்காவும் பிரித்தானியாவும் மற்றும் ஏகாதிபத்தியச் சக்திகளும் இந்திய முதலாளி வர்க்கமும் ஒரு சமாதான மகாநாட்டை கூட்டி ஒரு தமிழ் அரசினை துண்டாடுவதை மேற்பார்வை செய்யும். அத்தகைய ஒரு தீர்வுக்கான அவர்களின் வாழ்த்துக்களுக்கான ஒரு நிபந்தனையாக இவை இந்த இரண்டு அரசுகளிலும் அதிகாரத்துக்காகவும் செல்வாக்குக்காகவும் தம்மிடையே குதிரையோடும் அதேசமயம் கொழும்பில் இருந்தும் விடுதலைப் புலிகள் தலைமையிடம் இருந்தும் பொருளாதார, புவியியல், அரசியல் உத்தரவாதங்களைக் கறந்து கொள்ளும்.

ஒரு புதிய எல்லையை வரைந்து கொள்வதும் தீவின் சொத்துக்களையும் வளங்களையும் பங்கிட்டுக் கொள்வதும் தவிர்க்க முடியாத விதத்தில் சிங்கள, தமிழ் பதட்டநிலையை மேலும் சூடுபிடிக்க வைக்கும். இதனை ஏகாதிபத்தியம் தனது நலனுக்காகச் சுரண்டிக் கொள்ளும். இதன் இறுதிப் பெறுபேறு போட்டி, இராணுவமயமான அரசுகளை சிருஷ்டிப்பதாக விளங்கும். இவை ஒவ்வொன்றும் தேசிய, இனவாத பிளவுகளின் வடுக்களைக் கொண்டிருக்கும். விடுதலைப் புலிகள் இந்து புராணக் கதைகளுக்கு உயிரூட்டுவதையும் இந்துக்கள்

www.padippakam.com

www.padippakam.com





தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் படையணி

அல்லாதவர்களுக்கு எதிரான முழுஅளவிலான வன்முறைகளும் தமிழ்பேசும் முஸ்லீம்களையும் கிறிஸ்தவர்களையும் அன்னியப்படுத்தி உள்ளதோடு பெருமளவுக்கு முஸ்லீம்களைக் கொண்ட கிழக்கு மாகாணத்தில் இன்று பொதுஜன முன்னணியுடன் சேர்ந்து கொண்டுள்ள ஒரு முதலாளித்துவ பிரிவினைக் கட்சி தோன்றவும் எண்ணெய் வார்த்துள்ளது. அது முஸ்லீம்களுக்கென தனியரசு நிறுவப்பட வேண்டும் எனக் கோருகின்றது. யாழ்ப்பாணத்தில் முஸ்லீம்களும் சிங்களம் பேசும் மக்களும் சிறீலங்கா இராணுவத்தில் மட்டுமே எஞ்சியுள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகள் அதனது தமிழ் அரசைக் கூறுபோட்டுக் கொள்வதில் வெற்றிகாணுமானால் சிங்கள சோவினிஸ்டுகள் தமது புறத்தில் தெற்கில் உள்ள தமிழர்கள் மீது நாற்றம் எடுக்கும் பழிக்குப்பழி வாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவர். அவர்களை சிறீலங்கா முதலாளி வர்க்கத்தின் யுத்தக் கொள்கையின் வீழ்ச்சியின் பலிகடாக்களாக்குவர்.

இது ஒரு ஊகத்துக்குரிய விடயம் அல்ல. கடந்த அரை நூற்றாண்டு காலமாக திரும்பத் திரும்ப தொழிலாளர் வர்க்கமும் ஒடுக்கப்படும் மக்களும் முதலாளித்துவ "விடுதலை" இயக்கங்களின் தலைவர்கள் தமது கெரில்லா-, வர்த்தக உடைகளை பரிமாறி, ஏகாதிபத்தியவாதிகளின் தரகுடன் இடம்பெற்ற தீர்வுகளை ஏற்றுக்கொள்வதை தரிசித்துள்ளனர். அவற்றில் அரசியல் அதிகாரத்துக்கான ஒரு பங்காக அவர்கள் ஏகாதிபத்திய முதலீடுகளையும் நலன்களையும் உத்தரவாதம் செய்பவர்களாகின்றனர். இந்தப் போக்கில் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ், சின்பின், ஐரிஸ் குடியரசு இராணுவம் , பாலஸ்தீன விடுதலை அமைப்பு ஆகியன 1990களில் ஒரு தலைசிறந்த எடுத்துக்காட்டாகும்.

விடுதலைப் புலிகள் தனது வேலைத்திட்டத்தை அடையும் பொருட்டு இதில் மற்றொரு காட்சியை சித்தரிப்பதை நாம் சவால் செய்கின்றோம். ஒரு தமிழீழம் அரசுக்கு அனைத்துலக அங்கீகாரத்தை ஈட்டிக்கொள்வதைத் தவிர தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைக்கு வேறு பெரும் அபிலாசை கிடையாது. இது உண்மையல்லவா? அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்தை அணிதிரட்டுவதை அடிப்படையாகக் கொண்ட ஒரு முன்னோக்கிற்கு எதிராக சிறீலங்கா, அனைத்துலக முதலாளி வர்க்கங்களுடன் ஒரு புதிய உறவை செய்து கொள்வதற்கான ஒரு சாதனமாக விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் விளங்கவில்லையா?

பல அம்சங்களில் விடுதலைப் புலிகளின் நீண்ட ஆயுதப் போராட்ட வரலாறும் பெரும் பின்னடைவும் பீ.எல்.ஓ.வினதைப் பெரிதும் ஒத்திருக்கின்றது. பீ.எல்.ஓ.வெகுஜன ஆதரவைக் கொண்டிருந்ததோடு வீரம் நிறைந்த தியாகங்களையும் தன்னகத்தே கொண்டிருந்தது. ஆனால் அதனது அரசியல் எப்போதும் முதலாளித்துவ தேசியவாத இயக்கத்தினதாகவே விளங்கியது.அவர்களின் பெரும் பீதி தேசிய விடுதலைப் போராட்டம் தனது கட்டுப்பாட்டில் இருந்து விடுபட்டு ஒடுக்குமுறையினதும் சுரண்டலதும் சகல வடிவங்களையும் துடைத்து எறியும் ஒரு சோசலிசப் போராட்டத்துடன் இணைந்து கொள்ளுமோ என்பதாகவே இருந்தது. ஒஸ்லோ "சமாதான" மகாநாட்டில் இது இணைந்து கொள்வதை இரண்டு காரணிகள் நிர்ணயம் செய்தன: இன்ரபாடாவின் போராளிக் குணத்தின் வளர்ச்சி பற்றிய அச்சமும் சோவியத் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் வீழ்ச்சியும். சோவியத் ஸ்டாலினிச அதிகாரத்துவும் இதற்கும் பல்வேறு முதலாளித்துவ அரபு ஆட்சியாளர்களுக்கும் ஏகாதிபத்தியத்துக்கு நெருக்குவாரம் கொடுப்பதற்கான செல்வாக்கை வளங்கின.கடந்த காலத்தில் பீ.எல்.ஓ.தலைமை எல்லா வகையறாவிலான ஏகாதிபத்திய எதிர்ப்பு விஞ்ஞாபனங்களையும் வெளியிட்டு வந்தது. இன்று அதனது பாலஸ்தீன அதிகாரிகள் வெகுஜனங்களின் பதட்டநிலைமையை அடக்க அமெரிக்கன் சீ.ஐ.ஏ.யுடனும் சியோனிச அரசுடனும் ஒத்துழைக்கும் அதே வேளையில் முதலாளி வர்க்கத்தின் ஒரு சிறிய தட்டினரின் சொத்துக்களையும் இலாபங்களையும் காக்கின்றது.

காஸாவிலும் மேற்குக் கரையிலும் ஸ்தாபிதம் செய்யப்பட்டுள்ள பாலஸ்தீன அதிகாரத்தின் கீழ் உள்ள வெகுஜனங்களின் நிலைமையைக் காட்டிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையின் கீழ் ஸ்தாபிதம் செய்யப்படும் தமிழீழம் எந்த விதத்தில் பெரிதும் முற்போக்கானதாகவும் முன்னேற்றமானதாகவும் விளங்க முடியும்? இதை விளக்கும்படி நாம் விடுதலைப் புலிகளை சவால் செய்கின்றோம்.

தமிழீழம் பிரிவினையும் தீவில் ஒரு இரண்டாவது முதலாளித்துவ அரசின் ஸ்தாபிதமும் எந்த விதத்தில் சிறீலங்கா தமிழ் ஈழம் தமிழர்களதும் சிங்களவர்களதும் சகவாழ்வு பிரச்சினையின் தீர்வுக்கு ஒரு நிஜமான ஜனநாயக அடிப்படையை வழங்க முடியும்? ஒரு தமிழீழத்தின் ஸ்தாபிதம் அதன் பிரஜைகளில் பெரும்பான்மையினரான தமிழ் தொழிலாளர்களும் விவசாயிகளும் முகம் கொடுக்கும் கொடிய சமூகப் பிரச்சினைகளில் இருந்து தலையெடுப்பதற்கான அடிப்படையை எப்படி வழங்க முடியும்? தொழிலாளர்களின் சம்பளம் உயர்த்தப்படுமா?உலக வர்த்தகப் பொருட் சந்தையில் விவசாயிகளின் உற்பத்திகளுக்கு உயர்விலை கிடைக்குமா? வெகுஜனங்களின் சமூக, கலாச்சார மட்டம் உயருமா?

ஆசிய பொருளாதார "அதியங்களின்" வீழ்ச்சியோடு ஒரு குட்டி. வ்றிய அரசின் அபிவிருத்திக்கான சாத்தியங்கள் மேலும் சிதறுண்டு போகும். உலக முதலாளித்துவ பொருளாதார மந்தம் பொதுமக்களின் வாழ்க்கையில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களை எதிர்கொள்வதற்கு மாறாக விடுதலைப் புலிகள் கிழக்கு ஆசிய அபிவிருத்தி "மாதிரி"யை தழுவிக் கொண்டுள்ளது.

இந்தக் கேள்விகளை எழுப்புவது விடுதலைப் புலிக் காரியாளர்களின் தியாகத்தை மறுப்பதற்கு அல்ல. எமது நோக்கம் , அரசியல் வேலைத்திட்டத்தினதும் வர்க்க உறவுகளதும் தர்க்கத்தைச் சுட்டிக் காட்டுவதற்கேயாகும்.

விடுதலைப் புலிகளின் தலைமை தமிழ் மக்கள் அனைவரதும் சார்பில் பேசிக் கொள்வதாகக் கூறிக் கொள்ளும் அதேசமயம் அதனது வேலைத்திட்டம் , வரலாறு, வர்க்கச் சேர்க்கையின் மூலம் ஏகாதிபத்தியத்துக்குக் கீழ்ப்படிந்ததும் தொடர்புபட்டதுமான தமிழ் முதலாளி வர்க்கத்தின் அரசியல் ஆயுதமாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் காரியாளர்களின் நிலைமைக்கான அனுதாபம் விடுதலைப் புலிகள் தமிழ் வெகுஜனங்களை முட்டுச்சுவருக்கு இட்டுச்சென்றுவிட்டது எனக் கூறத் தவறுவதற்கான மன்னிப்பாகிவிடாது.

## எதிர்காலப் பாதை

சமசமாஜக் கட்சி சிங்கள தேசியவாதத்துக்கு அடிபணிந்து போனாலும் முதலாளித்துவ தேசியவாத முட்டுச் சுவரில் இருந்து வெளியேறுவதற்கான ஒரேபாதை சிங்கள தமிழ் தொழிலாளர் வர்க்கத்தின் கூட்டு போராட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட முன்நோக்கு மட்டுமே. தமிழ். சிறீலங்கா தொழிலாளர்களின் மேலாதிக்கத்தின் கீழ் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் தேசிய முதலாளி வர்க்க ஆட்சிக்கு எதிராக சகல ஒடுக்கப்படும் மக்களையும் அணிதிரட்டும் போராட்டத்துடன் இணைக்கப்பட வேண்டும். இன்னமும் இட்டுநிரப்பப்படாது உள்ள ஜனநாயகப் புரட்சியின் ஏனைய சகல பணிகளைப் போலவே தேசிய ஒடுக்குமுறையையும் ஒரு சோசலிச உலகுக்கான ஒரு போராட்டத்தின் ஒரு பாகமாக புரட்சிகத் தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தினுள்ளேயே துடைத்துக் கட்ட முடியும். இதன் அர்த்தம், வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மக்களுக்கு எதிரான சிறீலங்கா அரசின் யுத்தத்தில் அதை திட்டவட்டமாக எதிர்ப்பதாகும். 1978 அரசியலமைப்பு சட்டத்தை ஒழித்துக்கட்டும்படி கோருவதாகும். ஈழம் சிறீலங்கா சோசலிசக் குடியரசு ஒன்றியத்துக்கான பதாகையை உயர்த்துவதாகும். இப்போராட்டத்தின் முக்கிய அம்சம் இந்தியா, பாகிஸ்தான் , பங்களாதேஷ், சிறீலங்கா, ஈழம் மக்கள் 1947 48ல் நிறுவப்பட்ட பிற்போக்கு அரச அமைப்புக்கு எதிராக ஒரு தென்ஆசிய ஐக்கிய சோசலிசக் குடியரசு ஒன்றியத்துக்காக மக்களை அணிதிரட்டுவதேயாகும். சோசலிச சமத்துவக் கட்சியும் அதன் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் சிங்கள தேசியவாதத்துக்கும் சிங்கள சோவினிசத்துக்கும் லங்கா சமசமாஜக் கட்சி அடிபணிந்து போனதற்கு எதிராகக் கிளர்ந்த பாட்டாளிவர்க்க அனைத்துலகவாதப் போக்கினை மூலமாகக் கொண்டவை. மூன்று தசாப்தங்களுக்கு மேலாக சோ.ச.க.வும் பு.க.க.வும் தொழிலாளர் வர்க்கத் தலைமையிலான ஒரு ஒடுக்கப்படும் மக்கள் இயக்கத்தின் தோற்றத்துக்கு லங்கா சமசமாஜக் கட்சியின் காட்டிக்கொடுப்பு ஏற்படுத்திய தடையை மிகவும் முக்கியமாக தமிழ் மக்களையும் தென் இலங்கையின் தொழிலாளர் வர்க்கத்தையும் பேதப்படுத்துவதையும் ஜே.வீ.பி.யின் குட்டி முதலாளித்துவ சோவினிச அரசியலையும் துடைத்துக்கட்டப் போராடியது.

எவ்வாறெனினும் இன்று உலகிலும் இலங்கைத் தீவிலும் பிரமாண்டமான முறையில் மாற்றம் கண்டுவரும் புறநிலை நிலைமைகள் தொழிலாளர் வர்க்கம் தமிழ் வெகுஜனங்களின் கண்களில் மீண்டும் ஒரு தடவை அவர்களது விடுதலையின் நிஜ ஏஜண்டாகத் தோன்றுவதற்கான கதவுகளைத் திறந்துவிட்டுள்ளது.

அனைத்துலக முதலாளி வர்க்கத்தினால் ஒரு அமைப்பு நெருக்கடியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள கிழக்கு ஆசிய வீழ்ச்சியானது மூலதனத்தின் எதிராளியாக மீண்டும் ஒருதடவை அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கம் முன்னணிக்கு வருவதைச் சமிக்கை செய்து கொண்டுள்ளது. இந்த விதத்தில் மீண்டும் முன்னணிக்கு வருவதானது உலக அரசியல் நிலைமையைத் தீவிரமாக மாற்றம் அடைய வைக்கும். சிறப்பாகக் கடந்த மூன்று

எண்ணிக்கையிலும் தாக்கத்திலும் பெரும் வளர்ச்சி கண்டுள்ள ஆசியாவின் நிலைமையைத் தீவிரமாக மாற்றம் காண வைக்கும்.

இதேசமயம் பூகோளமயமாக்கமும் சோவியத் அதிகாரத்துவத்தின் வீழ்ச்சியும் பின்தங்கிய முதலாளித்துவ வளர்ச்சி கொண்ட நாடுகளில் தேசிய முதலாளி வர்க்கத்தை முன்னொருபோதும் இல்லாத விதத்தில் ஏகாதிபத்தியத்தின் ஏஜண்டாகவும் கூட்டாகவும் அம்பலப்படுத்திக் கொண்டுள்ளது.

சோ.ச.க.வின் பாதுகாப்பு பிரச்சார இயக்கத்துக்கு தீவின் தென்பகுதியில் உள்ள தமிழர்களிடம் இருந்தும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் சமூகத்தினரிடம் இருந்தும் கிடைத்த பரந்த ஆதரவு தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் வீழ்ச்சியையும் ஒரு மாற்று முன்னோக்கின் பேரில் வளர்ச்சிகண்டுவரும் அக்கறையையும் எடுத்துக்காட்டுகின்றது. உண்மையில் சோ.ச.க.அங்கத்தவர்களைக் கைது செய்யும் அலைவீச்சானது அத்தகைய ஒரு அபிவிருத்தியை முன்கூட்டியே தடுத்துவிட விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ஒரு தாக்குதலாகும்.

எதிர்வரும் வாரங்களிலும் மாதங்களிலும் சோ.ச.க. தமிழ், சிங்கள ஒடுக்கப்படும் மக்களை விடுதலைப் புலிகளின் பிரிவினைவாத, முதலாளித்துவச் சார்பு வேலைத்திட்டத்துக்குப் பதிலாக ஒரு சோசலிச அனைத்துலகவாத வேலைத்திட்டத்தினால் ஆயுதபாணியாக்கும் தனது போராட்டத்தை உக்கிரமாக்கும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சோசலிச சமத்துவக் கட்சிக்கும் இடையே ஒரு பெரும் அரசியல் ஆதாளபாதாளம் இருந்து கொண்டுள்ளது. இருப்பினும் நாம் இந்த அறிக்கையை தமிழ் போராளிகளுடன் கலந்துரையாடலுக்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்தும் என்ற எதிர்பார்ப்புடனேயே விடுக்கின்றோம். யுத்த ரீதியான அவசியங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிராந்தியங்களில் அரசியல் கலந்துரையாடல்களை நசுக்குவதை அவசியமாக்கிவிட்டது என்ற விடுதலைப் புலிகளின் வாதத்தை நாம் நிராகரிக்கின்றோம். அதற்கு மாறாக அத்தகைய ஒரு பேச்சுவார்த்தையானது தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராக சிறீலங்கா ஈழம் தமிழ் வெகுஜனங்கள் தொழிலாளர் வர்க்கத் தலைமையில் ஒரு புதிய அரசியல் அச்சினைக் கண்டு கொள்வதன் மூலம் தமிழ் போராட்டத்தைப் பலப்படுத்தும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம்.

படிப்பகம்

www.padippakam.com



# பூகோளமயமாக்கமும் அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கமும்

## மார்க்சிசத்தின் குட்டி முதலாளித்துவ எதிரிகளுக்கு ஒரு பதில்

### நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கை

*அமெரிக்க ஸ்பார்ட்டசிஸ்ட் லீக்கின் ஒரு தொடர் கட்டுரைகளுக்கு எதிராக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால் தயார் செய்யப்பட்ட பதில் மே இதழில் இருந்து தொழிலாளர் பாதையில் பிரசுரமாகின்றது.*

**பகுதி -இரண்டு**

### கார்ள் மார்க்சும் கூலியின் இரும்பு விதியும்

ஸ்பார்ட்டசிஸ்டுகள் தொழிற்சங்க அமைப்பின் வடிவங்களைக் காக்கச் செய்யும் முயற்சியில் முன்வைக்கும் முக்கிய வாதத்தில் ஒன்று என்னவெனில் தொழிலாளர் வர்க்கத்தின் சம்பளம்,சமூக நிலைமைகளைக் கீழே தள்ளிவிடச் செயற்படும் முதலாளித்துவ உற்பத்தியின் பூகோளமயமாக்கத்தின் புறநிலைத் தாக்கங்கள் பற்றிய எந்த ஒரு ஆய்வும் 19ம் நூற்றாண்டின் "கூலி பற்றிய இரும்பு விதி எனப்" பெயர் சூட்டப்பட்டதன் புதிய பாணியை அணைத்துக் கொள்வதற்குச் சமமானது.

இந்த வடிவங்கள் அவர்களின் அரசியல் முன்னோக்கில் ஒரு முக்கியமான அங்கமாக இருந்து கொண்டிருப்பதால் சற்று விரிவாக அவர்களின் திரிப்புக்களையும் அப்பட்டமான. பொய்மைப் படுத்தல்களையும் அம்பலப்படுத்துவது அவசியம்.

"இரும்பு விதி" ஆய்வுக் கட்டுரையின் கீழ் இருந்து கொண்டுள்ள அடிப்படை என்னவெனில் தொழிலாளர்கள் தொழிற்சங்க அல்லது வேறு வடிவிலான நடவடிக்கைகள் மூலம் சம்பளத்தை அதிகரிக்கச் செய்யும் முயற்சியானது பண்டங்களின் விலைகளில் ஒரு பொது அதிகரிப்பை ஏற்படுத்தி இதன்மூலம் அதிகரிக்கப்பட்ட சம்பளத்தின் தாக்கத்தைத் துடைத்துக்கட்டும் என்பதேயாகும்.

முதலாம் அகிலத்தின் பொதுச் சபையின் ஒரு அங்கத்தவரான ஜோர்ஜ் வெஸ்டனுக்கு பதிலளிக்கும் விதத்தில் 1865ல் எழுதிய கூலி, விலை, இலாபம் என்ற நூலில் மார்க்ஸ் இக்கருத்தைத் தெளிவுபடுத்தினார்.ஸ்பார்ட்டசிஸ்டுகள் மார்க்ஸ் உண்மையில் எழுதியது என்ன என்பதையோ அல்லது அவர் என்ன சமூக, பொருளாதார அடிப்படையில் இந்தப் பிரச்சினையை ஆய்வு செய்தார் என்பதையோ ஒரு போதும் ஆராய்ந்தது கிடையாது. இருப்பினும் பூகோளரீதியான உற்பத்தி வாழ்க்கைத்தரத்தின் மீது ஏற்படுத்தியுள்ள புறநிலைத் தாக்கத்தையும் தொழிலாளர் வர்க்கத்தின் மிகவும் அடிப்படையான நலன்களைக் காப்பதற்கு தொழிற்சங்கங்கள் இலாயக்கற்றுப் போனதையும் ஆய்வு செய்கையில் அனைத்துலகக் குழு "கூலியின் இரும்பு விதிகளுக்கு" திரும்பிவிட்டதாகவும் "அடிப்படை மார்க்சிச நிலைப்பாட்டை "கைவிட்டுவிட்டதாகவும் அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

முதலாம் அகிலத்தில் உரைநிகழ்த்துகையில் மார்க்ஸ் வெஸ்டனால் முன்வைக்கப்பட்ட இரும்பு விதி பண்டங்களின் விலை சம்பளத்தினால் நிர்ணயம் செய்யப்பட்டு கட்டுப்படுத்தப்படுகின்றது என்ற தவறான கருத்துப்பாட்டை அடிப்படையாகக் கொண்டது எனச் சுட்டிக்காட்டினார். மார்க்சின் ஆய்வினது திட்டவட்டமான இலக்கு வெஸ்டனின் நிலைப்பாடு விளங்கியதோடு அவர் உண்மையில் தனது தாக்குதலை அனைத்துலகத்தின் பிரான்சிய. மற்றும் பகுதிகள் மீது கணிசமான அளவு தாக்கத்தை ஏற்படுத்திய புரூதனின் ஆதரவாளர்களின் மீது தொடுத்தார்.

புரூதனின் சமூக அடிப்படை சிறப்பாக பாரிசில் வாழ்ந்த குட்டி முதலாளித்துவ கைவினைஞர்களை பிரதிபலித்தது. அவர்கள் பெருமளவுக்கு பெரும் கைத்தொழில் பக்டரிகளுக்கு வெளியிலேயே வேலை செய்தனர். இந்தச் சமூகத் தட்டினரின் குறுகிய பார்வை புரூதன்வாத வேலைத்திட்டத்தின் முக்கியதுறைகளில் பிரதிபலித்தது. தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு, அரசினைக் கொண்டு சேவை நிலைமையை நிர்வகிக்கும் சட்டங்களை இயற்றும் அரசியல் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு, உழைப்பு படையில் பெண்கள் சேர்வதற்கு எதிர்ப்பு ஒரு மக்கள் வங்கியை ஸ்தாபிதம் செய்வது.

குட்டி முதலாளித்துவ கைவினைஞர்களின் சமூக அடிப்படையின் அவசியங்களைப் பிரதிபலித்த புரூதனிசத்தின் அடிப்படை வேலைத்திட்டம் முதலாளித்துவ சமூக உறவுகளை தூக்கிவீசுவதாக இருக்கவில்லை..அதற்குப் பதிலாக சுதந்திர சந்தையின் இயக்கத்தின் மீது நிலவிய ஏகபோகத் தடைகளை நீக்குவதாயும் மக்கள் வங்கி மூலம் சிறிய உற்பத்தியாளர்களுக்கு மலிவான கடன்வசதிகளை பெருமளவில் வழங்குவதாகவும் விளங்கியது.

முதலாளித்துவ கைத்தொழில்மயமாக்கத்தினால் வளர்ச்சிகண்ட தொழிலாளர் இயக்கத்தின் அபிவிருத்திக்கு குட்டி முதலாளித்துவ புரூதன்வாத அராஜகக் கருத்துக்களை தோற்கடிப்பது அவசியம் என மார்க்ஸ் கருதினார். புரூதன்வாதிகள் முதலாளித்துவப் பொருளாதாரத்திலான மாற்றத்தினால் பின்னடிக்குத் தள்ளப்பட்ட சமூக சக்திகளின் அரசியல் பேச்சாளர்களாக விளங்கினர்.

இங்கு ஸ்பார்ட்டசிஸ்டுகளின் பாத்திரத்துக்கு சரிநிகரான ஒன்று இருந்து கொண்டுள்ளது. புரூதன்வாதிகளைப் போல் இவர்களும் பொருளாதாரத்தின் பாரிய மாற்றங்களால் குழிபறிக்கப்பட்ட பொருளாதார, சமூக, அரசியல் உறவுகளுடன் பிணைக்கப்பட்ட சமூக வாழ்க்கையைக் கொண்ட குட்டி முதலாளித்துவத் தட்டினரின் பேரில் பேசுகின்றனர்.

1847ல் மெய்யியலின் வறுமை (Poverty of Philosophy) என்ற நூலை எழுதியதில் இருந்து மார்க்ஸ் புரூதன்வாதத்தின் குட்டி முதலாளித்துவ நப்பாசைகள் பற்றித் தொடர்ந்து அம்பலப்படுத்தி வந்தார்.வெஸ்டனின் புரூதன்வாத கருத்துப்பாடுகளுக்கு எதிரான தமது பதிலை வழங்கும் கட்டத்தில் மார்க்ஸ் தமது மிக முக்கிய கண்டுபிடிப்புக்களில் ஒன்றைக் கண்டுபிடித்தார். அதாவது : உபரிப் பெறுமானத்தின் தோற்றம். அது சந்தையின் தொழிற்பாட்டில் இருந்து தொழிலாளர் வர்க்கத்தினை சுரண்டுவது தவிர்க்கமுடியாத விதத்தில் தோன்றியது எப்படி என்பதை வெளிப்படுத்திய.து.

எந்த ஒரு பண்டத்தினது பெறுமதியும் அதனுள் அடங்கியுள்ள சமூகரீதியில் அவசியமான உழைப்பின் அளவினால் அதாவது . அந்தப் பண்டத்தை உற்பத்தி செய்ய எடுக்கும் காலத்தினால் நிர்ணயம் செய்யப்படுவதாக மார்க்ஸ் தெளிவுபடுத்தினார் உழைப்பின் பெறுமானம் எனப் பொதுவில் கொள்ளப்படுவது உண்மையில் உழைப்புச் சக்தியின் பெறுமானமாகும். அதாவது, தொழிலாளிக்கு வேலை செய்ய உள்ள இயலளபின் பெறுமதியாகும். ஏனைய பண்டங்களைப் போலவே உழைப்புச் சக்தியின்' பெறுமதியும் அதைச் சிருஷ்டிக்க அவசியமான உழைப்பின் அளவினால் நிர்ணயம் செய்யப்படுகின்றது. வேறு வார்த்தைகளில் சொன்னால் உழைப்புச் சக்தியின் பெறுமதியானது தொழிலாளியையும் அவனது குடும்பத்தையும் பராமரிக்க அவசியமான பண்டங்களின் பெறுமதியாகும்.

உபரி உழைப்பின் ஊற்றுவாய், உழைப்புச் சக்தியின் பெறுமானம் வேலைநாளினுள் தொழிலாளி சேர்த்த பெறுமதியைக் காட்டிலும் பெருமளவில் வேறுபட்டது என்பதுள் இருந்து கொண்டிருப்பதாக மார்க்ஸ் விளக்கினார். தொழிலாளியையும் அவனது குடும்பத்தையும் பராமரிக்கத் தேவையான அவசியங்களின் சராசரி அளவுகளை உற்பத்தி செய்ய 6 மணித்தியாலங்கள் வேண்டியிருக்கும்போது தொழிலாளி, முதலாளிக்கு 12 மணித்தியாலங்கள் வேலைசெய்கின்றான். இந்த வேறுபாடு ஒரு வேலைநாளின் போதுலாளியிடம் இருந்து பறிக்கப்பட்ட பணம் செலுத்தப்படாத உழைப்பின் அல்லது உபரிப் பெறுமானத்தின் அடிப்படையை உருவாக்கியது.

இந்த ஆய்வுகளின் அடிப்படையில் மார்க்ஸ் கூலியின் அதிகரிப்பு பண்டங்களின் விலைகளில் ஒரு பொது அதிகரிப்பை ஏற்படுத்திவிடாது என்பதை விளக்கினார். மாறாக இது இலாபத்துக்கும் கூலிக்கும் இடையேயான சமூக உற்பத்தியின் பங்கீட்டை மாற்றுகின்றது. ஆதலால் உயர்ந்த மட்ட இலாபத்துக்கும் (குறைந்தபட்ச கூலி மட்டத்தினால் நிர்ணயம் செய்யப்பட்டது) குறைந்தபட்ச இலாபத்துக்கும் இடையே ஒரு பிரமாண்டமான அளவிலான வேறுபாடுகள் சாத்தியமாக உள்ளது. காலத்தின் எந்த ஒரு கட்டத்திலும் நிலவும் நிஜ சம்பள மட்டம் மூலதனத்துக்கும் உழைப்புக்கும் இடையேயான தொடர்ச்சியான போராட்டத்தின் மூலம் நிர்ணயம் செய்யப்படுவதோடு இந்த விடயம் "போராடுபவர்களின் அவரவர் அதிகாரம் பற்றிய பிரச்சினையாக தீர்க்கப்படுகின்றது."

### மார்க்சின் நிலைப்பாட்டைப் பொய்மைப்படுத்துதல்

இந்தக் கட்டத்தில் ஸ்பார்ட்டசிஸ்டுகள் தமது பொய்களை திணிக்கும் பொருட்டு இந்த விடயத்தை முன்னெடுப்பதை விட்டுவிடுகின்றார்கள். கூலி பற்றிய இரும்பு விதி தொழிலாளர் வர்க்கம் பொருளாதார ரீதியிலோ அல்லது அரசியல் ரீதியிலோ என்னதான் நடவடிக்கை எடுத்தாலும் ஒரு நிலையான கட்டத்துக்கு மேலாக நிரந்தரமாக உயர்த்தப்பட முடியாது என்பதைச் சித்தாந்தமாக முன்வைக்கும் ஸ்பார்ட்டசிஸ்டுகள் மார்க்ஸ் எதிரான கருத்தை தெரிவித்ததாக அர்த்தப்படுத்தப் பார்க்கின்றார்கள்.

உண்மையில் மார்க்ஸ் ஆரம்பத்தில் தெளிவுபடுத்தும் விடயம் என்னவெனில் அவரின் (வெஸ்டனின்) ஆய்வுக் கட்டுரையின் அடிப்படையாக இருந்து கொண்டுள்ளது நியாயமான கருத்து என எனக்குத் தோன்றுவதுடன் நான் உடன்படுகின்றேன் என்பதை வெஸ்டன் காண்பார் என்பதாகும். இந்த நியாயமான கருத்தான நீண்டிருப்பினும் காலத்தில் புறநிலை பொருளாதார நிலைமைகள் என்னவாக இருப்பினும் தொழிலாளர் வர்க்கத்தின் பொருளாதார, அரசியல் நடவடிக்கைகள் கூலி மட்டத்தை நிலையாக உயர்த்த முடியாது என்பதாகும்.

கூலியின் பேரிலான போராட்டம் போரிடுபவர்களின்( ) பலம் பற்றிய ஒரு பிரச்சினையாகி உள்ளதைக் காட்டிய பின்பு மார்க்ஸ் அதன் விளைவுகளை நிர்ணயம் செய்யும் போக்கினைச் சுட்டிக்காட்டுகின்றார். அவர் வெஸ்டனுக்கு எதிரான முறையில் உதாரணமாக விவசாயத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்கு முகம் கொடுக்கும் விவசாயிகள் சோளத்தின் விலையை உயர்த்த முடியாமல் .அதை உண்மையில் குறைக்கத் தள்ளப்படும் விதத்தை சுட்டிக் காட்டுகின்றார்..அவர்கள் கூலி .அதிகரிப்பை விலைகளை அதிகரிப்பதன் மூலம் அன்றி இயந்திரங்களையும் மிகவும் விஞ்ஞான ரீதியான விதிமுறைகளை அறிமுகம் செய்வதன் மூலமும் எதிர்கொண்டனர். அவர்கள் அதன் மூலம் உழைப்பின் உற்பத்தி சக்தியை அதிகரிப்பதன் மூலம்

www.padippakam.com

www.padippakam.com



உழைப்புக்கான கேள்வியை குறைத்ததோடு விவசாய ஜனங்களை மீண்டும் "சார்பு ரீதியில் அனாவசியமானதாக்கினர்."பழைய நாடுகளினுள் சம்பள உயர்வுக்கு எதிராக மூலதனம் அல்லது மெதுவாக பிரதிபலிக்கும் பொதுமுறை இதுவேயாகும். இயந்திரங்கள் இடைவிடாது உழைப்புடன் போட்டியில் ஈடுபட்டு உள்ளது எனவும் இயந்திரத்தை பெருமளவுக்கு உழைப்பின் விலை ஓரளவுக்கு உயர்ந்த கட்டத்தை எட்டிவிட்ட நிலையில் மட்டுமே அறிமுகம் செய்யமுடியும் எனவும் ஆனால் இயந்திரங்களை அறிமுகம் செய்வது உழைப்பின் உற்பத்தி சக்தியை உயர்த்தும் பல விதிமுறைகளில் ஒன்று மட்டுமே எனவும் ரிக்கார்டோ நியாயமான முறையில் தெரிவித்துள்ளார். பொது உழைப்பை சார்பு ரீதியில் அனாவசியமானதாக்கும் இதே அபிவிருத்தியானது மறுபுறத்தில் பயிற்சிபெற்ற உழைப்பை இலகுவாக்கு அதன் பெறுமானத்தை தேய்ந்து போகச் செய்கின்றது."

(மார்க்ஸ், எங்கேல்ஸ், தேர்ந்தெடுத்த ஆக்கங்கள் தொகுதி 2)

கைத்தொழிலின் அபிவிருத்தியோடு மூலதனத்தின் வளர்ச்சி உழைப்புக்கான கேள்வியின் வளர்ச்சியைத் தாண்டி வேகமாக முன்நோக்கிச் சென்றதோடு உழைப்புகான கேள்வி, அதிகரிக்கையில் அது, மூலதனத்தின் அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் அதன் அதிகரிப்பு இடைவிடாது குறைந்து செல்லும் வீதாசாரத்திலேயே" இடம்பெறுகின்றது.

தொழிற்சங்க நடவடிக்கை மூலம் தொழிலாளர் வர்க்க சம்பளத்திலும் வாழ்க்கைத் தரத்திலும் நிலையான அதிகரிப்பை ஈட்டிக் கொள்ள முடியும் என்ற தமது சீர்திருத்தவாத ஆய்வுக் கட்டுரையின் மூலம் ஸ்பார்ட்டசிஸ்டுகள் மார்க்சை தமது சீர்திருத்தவாதக் கட்டுரையின் ஆதாளபாதாளமாகக் காட்ட முயற்சிக்கின்றார்கள். உண்மையில் மார்க்ஸ் இதற்கு எதிரான முடிவுகளைப் பெறுகின்றார். சம்பள அதிகரிப்புக்கு மூலதனத்தின் பிரதிபலிப்புக்களைக் காட்டும் விதத்தில் அவர் பின்வருமாறு எழுதுகின்றார்:

நவீன கைத்தொழிலின் அபிவிருத்தி உழைக்கும் மக்களுக்கு எதிராகவும் முதலாளி வர்க்கத்துக்கு சார்பாகவும் தொடர்ந்தும் அதிகரித்த விதத்திலும் துலாவை மாற்றும் விதத்தினையும். இதன் பெறுபேறாக முதலாளித்துவ உற்பத்தியின் பொதுப் போக்கு பொதுச் சம்பள மட்டத்தை உயர்த்துவது அன்றி சம்பளத்தின் பொதுமட்டத்தை குறைத்து உழைப்புச் சக்தியின் பெறுமதியை கூடவோ அல்லது குறையவோ குறைந்த மட்டத்துக்கு தள்ளும் முறையையும் காட்ட இந்தச் சில குறிப்புக்கள் போதுமானது."

(மார்க்ஸ், எங்கேல்ஸ்: தேர்ந்தெடுத்த ஆக்கங்கள் தொகுதி 2 பக்கம் 74 75)

அபிவிருத்தியின் பிரதான போக்கினைச் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து மார்க்ஸ் இது எந்த விதத்திலும் தொழிலாளர்கள் மூலதனத்தின் ஊடுருவலுக்கு எதிரான எதிர்ப்பைக் கைவிட வேண்டும் என்பதையோ அல்லது அவர்களின் தற்காலிக அபிவிருத்திகளுக்கு "இடைக்கிடையே கிடைக்கும் சந்தர்ப்பங்களில் இருந்து நல்ல பலன் பெற்றுக் கொள்ளும் முயற்சிகளைக் கைவிடவேண்டும்" என்பதையோ கருதவில்லை.

ஆனால் மார்க்ஸ் பின்வருமாறு வலியுறுத்தியுள்ளார்:இந்த அன்றன்றாடைய போராட்டங்களின் இறுதி பெறுபேறுகள் என்ன என்பதை தொழிலாளர் வர்க்கம் பெரிது படுத்திக் கொள்ள வேண்டியதில்லை. தாம் போராடுவது தாக்கங்களுக்கு எதிராகவே அலலாதுலது அந்தத் தாக்கங்களின் காரணிகளுக்கு எதிராக அல்ல என்பதை மறந்து போகக் கூடாது.தாம் செய்வது வீழ்ச்சி காண்பதை ஒத்திப்போடுவதேயல்லாமல் அதன் திசையை மாற்றுவது அல்ல. அவர்கள் செய்வது நோயைத் தீர்ப்பது அல்ல. அதைத் தணிக்கும் மருந்து தடவுவதேயாகும். மூலதனத்தின் தொடர்ச்சியான வீழ்ச்சியோ அல்லது சந்தைகளின் மாற்றத்தாலோ தோன்றும் இந்தத் தவிர்க்க முடியாத கெரில்லாப் போராட்டங்களில் தொழிலாளர்கள் முழுமையாக ஈர்க்கப்பட்டுவிட வேண்டியதில்லை. இன்றைய அமைப்பினால் தம்மீது சுமத்தப்படும் சகல துன்பங்களோடும் இந்த அமைப்பு சமூகத்தை பொருளாதார ரீதியில் மீளநிர்மாணிப்பதற்கு அவசியமான புறநிலைமைகளையும் சமூக வடிவங்களையும் கூடவே உருவாக்குகின்றது. "ஒரு நாள் நியாயமான வேலைக்கு ஒரு நாள் நியாயமான சம்பளம்" என்ற பழைமைபேணும் மனப்பான்மைக்கு பதிலாக தொழிலாளர்கள் தமது பதாகையில் கூலிமுறையை ஒழித்தல் என்ற சுலோகத்தை பொறித்துக் கொள்ள வேண்டும்."(அதே நூல் பக்கம் 75)

மார்க்ஸ் இந்த ஆய்வின் மூலம் பெற்றுக்கொண்ட ஒரு முடிவின் அடிப்படையில் அனைத்துலகக் குழுவுக்கு எதிரான தமது குற்றச்சாட்டை இருத்திக் கொள்ள ஸ்பார்ட்டசிஸ்டுகள் முயற்சிக்கின்றார்கள்.

"மூலதனத்தின் ஊடுருவல்களுக்கு எதிரான எதிர்ப்பின் மையங்களின் தொழிற்சங்கங்கள் நன்றாகத் தொழிற்படுகின்றன. இருந்துவரும் அமைப்பை மாற்றுவதற்கு பதிலாக தொழிலாளர் வர்க்கத்தை இறுதியாக விடுதலை செய்யும் நெம்புகோலை தமது அணிதிரண்ட சக்தியை பயன்படுத்துவதற்குப் பதிலாக அதாவது கூலிமுறையை இறுதியாக ஒழித்துக் கட்டுவதற்குப் பதிலாக இருந்துவரும் அமைப்பின் தாக்கங்களுக்கு எதிரான கெரில்லா போராட்டங்களுக்குள் கட்டுப்பட்டுவிடுவதினால் அவர்கள் பொதுவில் தோல்வி காண்கிறார்கள்."

ஸ்பார்ட்டசிஸ்டுகளின் படி "நோர்த்வாதிகள் இப்போது இந்த அடிப்படை மார்க்சிச நிலைப்பாட்டை நிராகரிக்கின்றார்கள். மூலதனத்தின் ஊடுருவல்களுக்கு எதிரான எதிர்ப்பின் மையங்களாகத் தொழிற்சங்கங்கள் மேலும் தொடர்ந்து தொழிற்பட முடியாது என அவர்கள் வாதிக்கின்றார்கள். அவர்கள் முதலாளித்துவ அமைப்பினுள் தொழிலாளர்களின் நலன்களை காப்பதற்கு எதிரான சோசலிச உருமாற்றத்தை நிறுத்துகின்றார்கள்."(வேர்க்கர்ஸ் வன்கார்ட்-ஜனவரி24, 1997)

"மூலதன ஊடுருவல்களுக்கு எதிரான எதிர்ப்பின் மையங்களாகத் தொழிற்சங்கங்கள் நன்றாகச் செயற்படுகின்றன" என்ற அந்த ஆய்வுக் கட்டுரை ஏதோ ஒரு வகையில் "அடிப்படை மார்க்சிச பிரேரணை" அல்ல.அது ஒரு திட்டவட்டமான காலப்பகுதியினுள் 1860பதுகளில் மார்க்சினால் செய்யப்பட்ட ஒரு நிபந்தனைக்குட்பட்ட ஆய்வாகும். அப்போதுதான் பலநாடுகளில் தொழிற்சங்கங்கள் தலையெடுத்து இருந்தன. அது ஒரு முற்றுமுழுதான மதிப்பீடாக அல்லாது முதலாளித்துவத்தின் அபிவிருத்தியின் ஒரு திட்டவட்டமான வரலாற்றுக் கட்டத்தில் செய்யப்பட்ட ஒரு மதிப்பீடாகும். மார்க்ஸ் தொழிற்சங்கங்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் அதே வேளையில் அவற்றின் இயற்கையான வரையறைகளையும் கூட வலியுறுத்தினார்.



பொஸ்னியாவினுள் அமெரிக்க இராணுவம்

ஏற்கனவே 19ம் நூற்றாண்டின் இறுதியில் அந்த வரையறைகள் முன்னணிக்கு வரத் தொடங்கி இருந்தன. அவை அன்றைய மிகப் பிரபல்யமான மார்க்சிஸ்டுகளால் ஆய்வு செய்யப்பட்டன. 1930பதுகளின் இறுதியில் ட்றொட்ஸ்கி தொழிற்சங்கங்கள் முதலாளித்துவ அரச இயந்திரத்துடன் இணைந்து கொள்ளும் போக்கு வளர்ச்சி காண்பதைச் சுட்டிக்காட்டியதோடு அந்தப் போக்குகள் இரண்டாம் உலக யுத்த காலத்திலும் யுத்தத்தின் பின்னைய செழிப்புக் காலத்திலும் பிரமாண்டமான முறையில் மேலும் தொடர்ந்து தொழிற்சங்கங்கள் சமூக நலன்புரி அரசின் இணைநிர்வாகிகளாகத் தொழிற்பட்டன.

எவ்வாறெனினும் 1970பதுகளின் நடுப்பகுதியில் யுத்தத்துக்கு பின்னைய செழிப்பு ஒரு முடிவுக்கு வந்ததும் மூலதனம் தொழிலாளர் வர்க்கத்துக்கு வரையறுக்கப்பட்ட நிவாரணங்களை வழங்கி வந்த திசையில் இருந்து மெய் கூலியையும் வேலை நிலைமைகளையும் தொடர்ந்து வெட்டித் தள்ளும் திசைக்கு திரும்பியது. "நன்றாகத் தொழிற்படுவதற்கு" பதிலாக தொழிற்சங்கங்கள் தாம் மூலதனத்தின் ஊடுருவலை தவிர்க்க அடியோடு தோல்விகண்டுவிட்டதை நிரூபித்தன. கடந்த இரண்டு தசாப்தங்களில் சகல பெரும் முதலாளித்துவ நாடுகளிலும் சாதனை ஒன்றாகவே உள்ளது: மெய்க் கூலி வீழ்ச்சி கண்டது. தொழிலாளர் வர்க்கம் ஒரு தொகைத் தோல்விகளுக்கு உள்ளானது. முன்னைய காலப்பகுதியில் வெற்றி கொண்ட நிலைமைகள் கடுமையாக வெட்டித் தள்ளப்பட்டன.

உற்பத்தியின் பூகோளமயமாக்கத்தின் ஒரு நேரடி விளைவாக சகல பெரும் முதலாளித்துவ நாடுகளிலும் மெய்க் கூலி வெட்டித்தள்ளப்பட்டதோடு மட்டுமன்றி சமூக நலன்புரி சேவைகளும் வெட்டப்பட்டன. இப்போது சம்பளத்தை குறைந்த பட்சமாக்குவதற்கு மட்டுமல்லாமல் வருமான வரி செலுத்துவதை குறைக்கும் பொருட்டும் முதலாளி வர்க்கம் உற்பத்தியின் வேறுபட்ட பகுதிகளையும் பல்வேறு பிராந்தியங்களுக்கு இடம்பெயர்த்துவதிலும் வெற்றி கண்டுள்ளது. இதனால் இன்று முதலாளித்துவ தேசிய அரசுகள் தமது எல்லைகளுக்குள் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களை ஈர்க்கும் பொருட்டு வருமானவரிகளையும் மற்றும் கொடுப்பனவுகளையும் வெட்டித்தள்ளி ஒன்றுடன் ஒன்று போட்டியில் இறங்கியுள்ளன..அதுமட்டுமன்றி நிதியின் பூகோளமயமாக்கத்தின் பெறுபேறாக ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் வருமானவரி செலுத்த வேண்டியுள்ள நாடுகளிலும் கூட அவற்றில் பெரும்பகுதியை செலுத்தாது விட்டுவைக்க வாய்ப்புக் கிடைத்துள்ளது.

உதாரணமாக அவுஸ்திரேலிய வருமானவரித் திணைக்களத்தின் சமீபத்திய அறிக்கை பன்னாட்டுக் கம்பனிகள் - உள்நாட்டு, வெளிநாட்டுக் கம்பனிகள் இரண்டும் கம்பனி வரியை அடியோடு செலுத்தவில்லை எனக் கூறியுள்ளது.

குறைந்த சம்பளத்துக்கான நெருக்குவாரம் வருவது பாரம்பரியமாக குறைந்த உற்பத்திச் செலவைக் கொண்ட பிராந்தியங்களில் இருந்து மட்டும் அல்ல. ஒரு சமீபத்திய ஆய்வு பின்வருமாறு நிறைவுபெறுகின்றது: நாடுகளுக்கு ஊடாக தொழிலாளர்களின் நிலைமைகள் சிருஷ்டிக்கப்படுவது குறைந்த சம்பள நாடுகளில் இருந்து எழும் போட்டியைப் போன்று அல்ல: ஐரோப்பா, ஜப்பான், அமெரிக்கா ஒன்றிணைவதைப் போன்றாகும். உழைப்புச் சந்தையின் மாபெரும் நெகிழ்ச்சித் தன்மையை நோக்கிய நெருக்குவாரமும் மேற்கு ஐரோப்பா நலன்புரி அரசில் இருந்து பின்வாங்குவதும் கிழக்கு ஆசியாவில் அல்லது ஜப்பானில் இருந்து நெருக்குவாரத்தைக் காட்டிலும் அமெரிக்காவில் இருந்துவரும் நெருக்குவாரத்தினாலேயே இடம்பெறுகின்றது. பெரிதும் நெகிழ்ந்து கொடுக்கக்கூடிய தொழில் வாய்ப்பு விதிமுறைகளின் அடிப்படையில் போட்டியிடும் அமெரிக்க போட்டியாளர்களோடு ஒரு திறந்த பொருளாதாரத்தில் போட்டியிடுவதற்கு இன்னமும் பூரண தொழில் வாய்ப்பு / வசதிவாய்ப்புக் கொண்ட 30வீதம் ஊழியப் படையைக் கொண்டுள்ள ஜப்பானியக் கம்பனிகளால் முடியாது இருக்கும்."

தொடரும்.

படிப்பகம்

படிப்பகம்

# பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கும் அமெரிக்க ஆட்சியாளர்களுக்கும் இடையே புதிய கூட்டு

அக்டோபர் 5ம் திகதி அமெரிக்காவில் இலங்கை தொடர்பான காங்கிரஸ் சபை மன்றம்" அமைக்கப்பட்டுள்ளது. இதன் ஆரம்பக் கூட்டத்தில் கலந்து கொண்ட இலங்கை வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்த மன்றத்தை "அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையேயான உறவுகளின் வரலாற்றில் ஒரு சிறப்பு அம்சம்" என துதி பாடினார்.

பிரால் பெபலோன் என்ற அமெரிக்க ஜனநாயகக் கட்சியின் காங்கிரஸ் சபை அங்கத்தவர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்த மன்றத்தில் குடியரசு, ஜனநாயகக் கட்சிகளின் 10 பேர் சேர்ந்து கொண்டுள்ளனர். இரு நாடுகளுக்கும் இடையேயான புரிந்துணர்வை வளர்ச்சி பெறச் செய்வதோடு அரசியல் அபிவிருத்திகளையும் வர்த்தகம், கலாச்சார உறவுகள் சம்பந்தமான அவசியங்களையும் இட்டு நிரப்ப இந்த மன்றம் செயல்படும் என அறிவிக்கப்பட்டது.

இலங்கை சம்பந்தமாக அமெரிக்க காங்கிரஸ் சபை மன்றம் அமைக்கப்பட்டிருப்பது பெரிதும் கடைகெட்ட முறையிலும் படுகேவலமான முறையிலும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுடன் இலங்கை முதலாளி வர்க்கமும் பொதுஜன முன்னணி அரசாங்கமும் இறுகப் பிணைக்கப்பட்டுள்ளது என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

வெளிநாட்டு அமைச்சர் கதிர்காமர் கடந்த குறுகிய காலத்தினுள் இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்கக் காங்கிரசினதும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினதும் பிரதிநிதிகளின் ஒரு பட்டியலைச் சமர்ப்பித்தார். இதையிட்டு அவர் பெருமகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டார். அமெரிக்காவிடம் இருந்து தமக்குக் கிடைத்த உதவிகள் பற்றிக் குறிப்பிட்ட வெளிநாட்டு அமைச்சர் மேலும் மேலும் உதவிகள் கிடைக்க புதிதாக அமைக்கப்பட்டுள்ள மன்றம் உதவும் என நம்பிக்கை தெரிவித்தார்.

தமக்கு அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளிடம் இருந்து கிடைக்கும் உதவிகளின் பேரில் இலங்கையில் இருந்து எதை எதை எல்லாம் கசக்கிப் பிழிந்து கொள்ளலாம் கறந்து கொள்ளலாம் என்பதைப் பற்றி அவர் காங்கிரஸ் அங்கத்தவர்களுக்கு சுட்டிக் காட்டினார். இதையிட்டு அமெரிக்கப் பெரும் ஏகபோகங்கள் மட்டுமன்றி சிறு வர்த்தகர்களும் கவனம் செலுத்த வேண்டும் என அமைச்சர் கேட்டுக் கொண்டார்.


கதிர்காமர் பின்வருமாறு கூறினார்:

எந்தவிதமான செலாவணிக் கட்டுப்பாடும் இல்லாமல் இலாபங்களை வெளிநாட்டுக்கு முழுமனே அனுப்பும் உரிமை உட்பட ஆசியாவின் சிறந்த நிலைமைகளில் ஒன்றான துரித ஊக்குவிப்பு பொதி(இலங்கையில்)உள்ளது. 10 தொடக்கம் 15 ஆண்டு வரையிலான நீண்ட வரிவிலக்கு உங்களுக்குக் கிடைக்கும். உங்களுக்கு விரும்பிய விதத்தில் செயற்படும் ஒரு சூழ்நிலை இலங்கையில் உள்ளது."

இலங்கை தென்ஆசிய ஒத்துழைப்பு அமைப்பின் தலைவராக இருப்பதால் சுரண்டலுக்கு நுழைந்து கொள்ளவும் அதன் மூலம் வாய்ப்பு உள்ளது என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

1950பதுகளில் இருந்து யூ.என்.பி.யினதும் இலங்கை முதலாளி வர்க்கத்தினதும் ஒரு முக்கிய பகுதியினரைப் பிரதிநிதித்துவம் செய்த ஜே.ஆர்.ஜயவர்தன அமெரிக்காவுக்கு சார்பான கொள்கையைக் கடைப்பிடித்ததன் காரணமாக அவர் யங்கி டிக்கி என அழைக்கப்பட்டார். சமசமாஜக் கட்சி, ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சி மட்டும் அல்ல முதலாளித்துவ சி.ல.சு.க.வும் கூட இந்த பட்டை நாமம் தீட்டுவதில் ஈடுபட்டு இருந்தன. இன்று இந்தச் சகல கட்சிகளையும் உள்ளடக்கிய பொதுஜன முன்னணி அரசாங்கம் ஜயவர்தனவையும் ஜயவர்தன அரசாங்கத்தையும் தாண்டிச் சென்றுள்ளது.

# பியகம சு.வ.வ
# பாதுகாப்பற்ற நிலையில் பெண் தொழிலாளி விபத்துக்குள்ளானார்



அதிவேக இயந்திரத்துக்குள் அகப்பட்டு காயமடைந்த தொழிலாளி பிரபா

பியகம சுதந்திர வர்த்தக வலயத்தில் உள்ள லங்கா வேர்ல்ட் பக்டரியில் செப்டம்பர் 11ம் திகதி இடம்பெற்ற ஒரு விபத்தில் ஒரு பெண் ஊழியரின் தலைமயிர் அதிவேக இயந்திரத்தினுள் அகப்பட்டு அவரின் காதில் ஒரு பகுதியுடன் துண்டாடப்பட்டுவிட்டது.

18வயதான பிரபா என்ற இந்தத் தொழிலாளி கொழும்பு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்ட போதிலும் அவரின் நிலைமை வழமைக்குத் திரும்பவில்லை. அவர் கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியின் நான்காம் வார்ட்டில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றார்.

பக்டரியில் விபத்து நடந்ததும் பக்டரி சொந்தக்காரர்கள் அதுபற்றி தொழில் திணைக்களத்துக்கு அறிவிக்க வேண்டும் என கைத்தொழில் சட்டத்தின் 61வது பிரிவு கூறுகின்றபோதிலும் முதலாளி அதற்கு இணங்க நடந்து கொள்ளவில்லை எனத் தொழிலாளர் பாதைக்கு தெரிய வந்துள்ளது. பியகம முதலீட்டுச் சபையிடம் இந்த விபத்து பற்றி தொழிலாளர் பாதை நடாத்திய விசாரணையில் தொழிற் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டபோதிலும் செப்டம்பர் 30ம் திகதி வரை இந்தத் தொழிலாளியை பார்வையிட எந்த ஒரு அதிகாரியும் ஆஸ்பத்திரி செல்லவில்லை.

பிரபா பக்டரியில் சேவையில் ஈடுபட்டிருந்த சமயம் நிலத்தில் வீழ்ந்த ஒரு பாக்கின் பகுதியை எடுக்கக் கீழே குனிந்துள்ளார். அப்போது அவரின் தலைமயிர் மறுபுறத்தில் இருந்த அதிவேக இயந்திரத்தினுள் சிக்குண்டு போயுள்ளது. இதனால் இவர் உட்கார்ந்திருந்த இரும்புக் கதிரையுடன் இயந்திரம் பக்கம் இழுபட்டுப் போனதாகவும் சம்பவத்தை நேரில் பார்த்த சக தொழிலாளி இனோகா தெரிவித்துள்ளார்.

இந்த விபத்து பிரபாவின் கவலையீனத்தால் ஏற்பட்டதாகக் காட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ள பக்டரி முதலாளிகள் அந்த வழியில் தொழிலாளர்களைத் தூண்டிவிடவும் முயற்சிப்பதாகத் தெரிகின்றது. விபத்துக்குள்ளான பிரபாவின் பெற்றோரின் பயணச் செலவுக்கும் மற்றும் அவசியங்களுக்கும் என பக்டரி நிர்வாகம் இடைக்கிடை வழங்கிய பணத்தின் பேரில் அவர்களிடம் இருந்து கையொப்பம் வாங்கிக் கொள்ள எடுத்த முயற்சியை பெற்றோர் நிராகரித்துள்ளனர்.

சோசலிச சமத்துவக் கட்சி அமைத்துள்ள சுயாதீன தொழிலாளர் விசாரணைக் கமிட்டி விடயங்களை ஆராய்ந்து வருவதாகப் பெற்றோர் பக்டரி நிர்வாகத்திடம் தெரிவித்துள்ளனர். அதற்கு அவர்கள் அதனுடன் தொடர்பு வைக்க வேண்டாம் எனக் கேட்டுக்கொண்டதோடு சகல பொறுப்புக்களையும் நிர்வாகம் ஏற்றுக்கொள்ளும் எனத் தெரிவித்துள்ளது.

பிரபா இந்தப் பக்டரியில் வேலை செய்யச் சென்ற 10 நாட்களின் பின்னர் இந்த விபத்து ஏற்பட்டதாகவும் பக்டரியினுள் பாதுகாப்பு உரிய முறையில் இருந்திருக்குமானால் தமது மகளுக்கு வாழ்க்கை பூராவும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள இத்தகைய ஒரு துர்அதிஸ்டமான விபத்து ஏற்பட்டிருக்கமாட்டாது எனவும் பெற்றோர் தெரிவித்தனர்.

# களனிப் பல்கலைக்கழகத்தில் ஜே.வீ.பி.-பொதுஜன முன்னணி குண்டர் மோதுதல்

புதிய கல்வியாண்டு ஆரம்பமாகி புதிய மாணவர்கள் பல்கலைக்கழகத்தினுள் பிரவேசித்ததுதான் தாமதம் களனி பல்கலைக்கழகத்தில் பிற்போக்கு மாணவர் கும்பல்களுக்கிடையே மோதுதல் உக்கிரம் கண்டுள்ளது. கடந்த சில தினங்களாக இந்தக் கும்பல்கள் பல்வேறு ஆத்திரமூட்டும் சம்பவங்களிலும் மோதுதல்களிலும் ஈடுபட்டுக் கொண்டுள்ளதைக் காண முடிந்தது.

செப்டம்பர் 14ம் திகதி புதிய மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்கு வருகை தந்ததும் பகிடிவதையை எதிர்ப்பதாகக் கூறிக் கொண்ட மாணவர் ஒத்துழைப்பு அமைப்பின் பொதுஜன முன்னணி யூ.என்.பி.ஆதரவாளர்கள் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்ற ஜே.வீ.பி.அமைப்புடன் மோதிக் கொண்டனர். இதைச் சாட்டாக வைத்து பல்கலைக்கழக நிர்வாகிகள் சிரேஷ்ட மாணவர்கள் பல்கலைக்கழகத்துள் நுழைவதைத் தடைசெய்தனர்.

இந்தக் கும்பல்களுக்கு இடையேயான கோஷ்டி மோதுதல் இன்று பல்கலைக் கழகத்தினுள்ளும் பல்கலைக்கழக வதிவிடங்களிலும் பல்கலைக்கழகத்துக்கு வெளியிலும் பரவியுள்ளது. இது மாணவர்கள் மீது தத்தமது அரசியல் மேலாதிக்கத்தைக் கொண்டிருக்கச் செய்யும் குண்டர் கோஷ்டிகளின் நலன்களின் பேரில் சிருஷ்டிக்கப்பட்ட மோதுதலாகும்.

புதிய கல்வியாண்டு ஆரம்பமாகியதுடன் இடம்பெறும் மாணவர் சங்கத் தேர்தல்களில் மாணவர்களின் வாக்குக்களைக் கறந்துகொள்ளும் ஒரு நடவடிக்கையாகவே இந்த நாய்ச் சண்டை ஆரம்பமாகியுள்ளது.

இவர்கள் தாம் பகிடிவதைக்கு எதிரானவர்கள் என்றும் இலவசக் கல்வியைக் காப்பவர்கள் என்றும் முகமூடி அணிந்து கொண்டுள்ளார்கள்.

இந்த ஜே.வீ.பி.பொதுஜன முன்னணி யூ.என்.பி.கையாட்களின் மோதுதல்கள் கடந்த காலம் பூராவும் கல்வித் துறையில் முதலாளித்துவத் தாக்குதல்களைத் திணிக்க அரசாங்கங்களுக்கும் பல்கலைக்கழக நிர்வாகிகளுக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. சமீபத்தில் கொழும்பு பல்கலைக்கழக கலைத்துறை மாணவர் சங்கத் தேர்தலில் இவர்களின் பொலிஸ் ஏஜன்டு பாத்திரம் அம்பலமாகியுள்ளது.

# அ.லி.சே.ச. கட்டிடத்துக்குள் பொலிசாரும் குண்டர்களும் பாய்ச்சல்

1998 செப்டம்பர் 23ம் திகதி மாலை 7 மணிக்கு கொழும்பு சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்தவில் உள்ள அரசாங்க லிகிதர் சேவைச் சங்க தலைமை அலுவலகத்தினுள் பாய்ந்த இரண்டு கொம்பனித்தெரு பொலிசாரும் குண்டர்களும் சங்க அலுவலர்களை பிரட்டியுள்ளனர். அத்தோடு கட்டிடத்தின் கீழ் மாடிக்கு இதனால் சேதம் ஏற்பட்டதோடு பொருட்கள் சிலவற்றையும் காவிச் சென்றுள்ளதாக அ.லி.சே.ச.விடுத்துள்ள பத்திரிகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பாய்ச்சலில் கொம்பனித் தெரு பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த 31474, ஆர்.10230 இலக்க பொலிசார் ஈடுபட்டனர். இதற்கு முன்னர் ஆகஸ்ட் 5ம் திகதி இப்பொலிஸ் நிலைய அதிபரான எஸ் ஜாகொட ஆராச்சி அ.லி.சே.ச.தலைவரான குணசேன மகாநாமவைப் பயமுறுத்தியதாகவும் அது சம்பந்தமாக செய்து கொண்ட முறைப்பாட்டை விசாரிப்பதைத் தவிர்த்து வந்ததாகவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அ.லி.சே.ச.க்கும் அதன் கட்டிடத்தை வாடகைக்கு எடுத்துள்ள வர்த்தகருக்கும் இடையே ஏற்பட்டுள்ள தகராறில் தலையிட்டுக் கொண்டே பொலிசார் இங்ஙனம் செயற்படுவதாக தெரிகின்றது. இந்தக் குண்டர் தாக்குதலினால் கட்டிடத்துக்கு இரண்டு இலட்சம் ரூபா சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

www.padippakam.com

www.padippakam.com

# திரைப்பட விமர்சனம்: 23வது டொரான்டோ சர்வதேச திரைப்பட விழா: பயங்கரவாதி

டேவிட் வோல்ஷ்

இந்தியாவில் இருந்துவந்த சந்தோஷ் சிவனின் நெறியாள்கையிலான பயங்கரவாதி என்ற தமிழ்ப்படம் ஒரு நேர்மையும் தெளிவான பார்வையும் கொண்ட ஒரு படமாகும். பெயர் குறிப்பிடப்படாத ஒரு தேசிய இயக்கத்துக்காக செயற்படும் ஒரு தற்கொலைக் குண்டுவீச்சாளரின் வாழ்க்கையை இப்படம் சித்தரிக்கின்றது. மல்லி என்ற இளம் பெண் ஒரு பயங்கரமான வாழ்க்கைப் பின்னணியைக் கொண்டவள். அவளின் சகோதரன் இராணுவ அடக்குமுறைகளால் கொலையுண்டு போகின்றான். மல்லிக்கென்று சொத்தோ கல்வியோ எதிர்காலமோ கிடையாது. தனது சகோதரன் அவனின் உயிரை எதற்காகத் தியாகம் செய்தானோ அதற்காகவே மல்லியும் தனது உயிரைத் தியாகம் செய்துவிட முயற்சிக்கின்றாள். இயக்கத் "தலைவன்" அவளின் சிக்கலான பாத்திரத்தை அவளுக்கு விளக்குகின்றான். ஒரு முக்கிய அரசியல் புள்ளியைக் கொலை செய்யும் பாத்திரம் அவளிடம் ஒப்படைக்கப்படுகின்றது. "அவன் எமது இயக்கத்துக்கு ஒரு பெரும் தடை" என வருணிக்கப்படுகின்றான். அவள் வெடிகுண்டுடனான பெல்டை இடுப்பில் கட்டிக் கொண்டு பிரமுகர் கலந்து கொள்ளும் பொது வைபவத்தில் அதை வெடிக்க வைக்க வேண்டும்.

மல்லி காட்டு முகாமில் இருந்து தற்கொலைக் குண்டு வெடிப்பு இடம்பெற வேண்டிய நகர மையத்துக்கு வருகின்றாள். அவள் தன்னை ஒரு விவசாயக் கல்வி மாணவியாகக் காட்டிக் கொண்டு ஒரு விவசாயியின் வீட்டில் இருப்பிடம் தேடிக் கொள்கின்றாள். விவசாயியின் மனைவியோ அவளது மகள் செத்ததில் இருந்து மயக்க நிலையில் இருக்கின்றாள். விவசாயியும் அவனது தொழிலாளர்களில் ஒருவனும் மல்லியுடன் மிகவும் இரக்கமாக நடந்து கொள்கின்றார்கள். அவர்கள் சற்று விசித்திரமானவர்கள்; பெரிதும் சுறுசுறுப்பானவர்கள். கொலைக்குத் திட்டமிட்ட நாளுக்கு இன்னமும் நான்கு நாட்கள் இருந்து கொண்டுள்ளது. அவள் தான் கர்ப்பிணி என்பதை அறிகின்றாள். அவள் சிந்திக்கத் தள்ளப்படுகின்றாள். அவளின் உயர் அதிகாரிகள் "உனது தியாகங்கள் எதிர்காலச் சந்ததியினரை ஊக்குவிக்கும்" என அவளுக்கு கூறுகின்றனர். ஆனால் அவளோ நான் "சரியானதைச் செய்கின்றேனா" என ஆச்சரியப்படுகின்றாள். இறுதியில் அவள் பொத்தானை அழுத்த இலாயக்கற்றவளாகிவிடுகின்றாள்.

மணிரத்தினத்தின் படங்களில் தொழிற்பட்டுள்ள பிரபல சினிமாப் படப்பிடிப்பாளரான சிவன் அதன் வரையறைகளுக்குள்ளும் படத்தை ஒரு யதார்த்தமாக்கியுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகள் வகையறாவிலான இயக்கங்களை இது செய்யும் விமர்சனம் ஏதோ ஒரு விதத்தில் தாராண்மை மனிதநேயவாதத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளதாக ஒருவர் கூறலாம். ஆனால் அது முக்கிய விடயத்தை கைநழுவ விட்டுவிட்டது போல் தெரிகின்றது.



படத்தில் மல்லி (ஆயிஷா டாக்கார் சிறப்பாக நடித்துள்ளார்) அரசியல், சமூக, புரிந்துணர்வே கிடையாத ஒரு இளம் பெண் "எனது தேசத்துக்காக" சிந்திக்காமல் இறக்க முன்வருவது அடிப்படையில் செல்லுபடியானது.

ரசிகர் எவரும் உயிர்த்தியாக நடவடிக்கை எதுவும் தவறான வழியிலானது அல்லது ஒருவர் சும்மா தமக்காகவே வாழவேண்டும் என்ற முடிவுக்கு வந்தால் அது வேறு விடயம். எவ்வாறெனினும் படத்தின் உந்துதல் அது அல்ல. சிவன் இராணுவத்தையோ அல்லது அதிகாரிகளையோ ஒரு சாதகமான வெளிச்சத்தில் காட்டுவதாக இல்லை. அவர் புறநிலை ரீதியில் சிந்தித்துச் செயற்பட்டுள்ளார்.

"பயங்கரவாதி" அத்தகைய இயக்கங்களின் காட்டுமிராண்டித்தனத்தையும் காடைத்தனங்களையும் எடுத்துக்காட்டுவதாயும் தாம் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக் கொள்ளும் மக்கட் பகுதியினருக்கு எந்தவிதமான முன்நோக்கை வழங்குவதாகவும் இல்லை என்பதை தெளிவுபடுத்தும் வரையில் அது ஒரு நிஜ பெறுமதி மிக்கதாகும்.

(23வது டொரான்டோ சர்வதேச திரைப்பட விழா பற்றிய முழு விமர்சனங்களை உலக சோசலிச வெப் நிலையத்தில் காணலாம்.(செப்டம்பர் 29, அக்டோபர் 02, அக்டோபர் 07, அக்டோபர் 09)

# சலன சித்திரம் நிறுவனம்




சலன சித்திரம் நிறுவனம் என்ற அமைப்பு திரைக்கல்வி, தரமான ரசனை, திரைக்கலைக்கு ஊக்கம், கலைஞர்களின் நலவுரிமை ஆகியவற்றைப் பேணுவதையும் வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

திரைக்கலை பற்றிய தகவல்களை வழங்கும் பொருட்டும் இந்த அமைப்பின் நடவடிக்கைகளை ரசிகர்களுக்கு அறிவிக்கும் பொருட்டும் சலன சித்திரம் நிறுவனம் வழிகாட்டி என்ற பெயரில் ஒரு செய்தி மடலையும் வெளியிட்டுள்ளது.

இந்த நிறுவனம் இலங்கையில் இனவாத யுத்தம் ஏற்படுத்தியுள்ள அழிவுகளை கருவாகக் கொண்டு ஒரு விவரணப் படத்தை( ) தயாரிக்கப் போவதாக அறிவித்துள்ளது. அதன் பேரில் இந்த யுத்தம் தொடர்பாகப் பல்வேறு தரப்பினரதும் அபிப்பராயங்களைத் திரட்டும் முயற்சியில் இவர்கள் ஏற்கனவே ஈடுபட்டுள்ளனர்.

சலன சித்திரம் நிறுவனத்தின் செப்டம்பர் செய்தி இதழ் "வழிகாட்டி" இந்திய பிரபல திரைப்பட இயக்குனர் சத்யஜித்ரேயை முன்பக்க அட்டையிலும் பாலு மகேந்திராவை பின்பக்க அட்டையிலும் தாங்கி வெளிவந்துள்ளது.

1998 பெப்பிரவரி, மார்ச் மாதங்களில் இவர்களின் இலவச மாதமடல் சுவை வெளிவந்துள்ளது. சுவையின் பெப்பிரவரி வெளியீடு, தமிழ்நாட்டு திரைக்கலைச் சங்கங்களின் மகாநாட்டில் வெளியிடப்பட்ட திரைப்படச் சங்கங்கள் ஏன்? எப்படி? என்ற நூலில் சென்னையைச் சேர்ந்த ஏ.வி.இராஜகோபால் எழுதிய கட்டுரையையும் மார்ச் இதழில் மேற்கு வங்காள முன்னணி சினிமாப்பட இயக்குனரான மிருணாள் சென் கல்கத்தாவின் திரைப்படத் தயாரிப்பாளர், குறைந்த செலவில் சினிமா, சிறந்த படம் என்றால் என்ன என்ற தலைப்புக்களில் எழுதிய கட்டுரைகளையும் தாங்கி வெளிவந்துள்ளன. இவை சினிமா ஒரு பார்வை என்ற நூலில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறந்த படம் என்றால் என்ன? என்ற கட்டுரையில் மிருணாள் சென் மிருகயா என்ற படத்துக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பற்றியும் அந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான தமது நிலைப்பாடு என்னவாக இருந்தது என்பது பற்றியும் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் திரைக்கு வந்த தமிழ்ப்படங்கள் என்ற தலைப்பில் 1962 1993 வரையிலான காலப்பகுதியில் 28 படங்களைப் பட்டியல் போட்டுக் காட்டியுள்ள வழிகாட்டி, 1982க்குப் பின்னர் ஷாமிலாவின் இதயராகம் என்ற படம் மட்டுமே திரைக்கு வந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது. இது இனவாத யுத்தம் தமிழ் சினிமாத் துறையில் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தைப் புரிய வைப்பதாக உள்ளது.

## பகிரங்கக் கூட்டம்

- தோட்டப்புற அரசியல் கைதிகளை விடுதலை செய்
- தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான ஒடுக்குமுறையை நிறுத்து
- சோசலிச வேலைத்திட்டத்துக்காக போராடு

**பொகவந்தலாவை நகர்**

**ஜனவரி 10 பி.ப.2 மணி**

**சோசலிச சமத்துவக் கட்சி**
**இளம் சோசலிஸ்டுகள்**

படிப்பகம்

# மார்க்சிச இலக்கியங்களை நீங்களும் வாசியுங்கள்!



## லியொன் ட்ரொட்ஸ்கியும் 20ம் நூற்றாண்டில் சோசலிசத்தின் தலைவிதியும்

டேவிட் நோர்த்



## சோசலிச சமத்துவக் கட்சியின் முன்நோக்கு

பொது மக்கள் முகம் கொடுக்கும் சகல பிரச்சினைகளும் அவர்கள் ஈடுபட்டுள்ள சகல போராட்டங்களும் முன்நோக்கு, தலைமை பற்றிய அரசியல் பிரச்சினையை உக்கிரமான முறையில் தோற்றுவிக்கின்றது. இந்தச் சவாலுக்கு முகம் கொடுக்க, அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலத்தினால் மட்டுமே முடியும். அனைத்துலகக் குழுவின் கிளைகளால் புதிய கட்சிகளை ஸ்தாபிதம் செய்வதானது, முதலாளித்துவ முறைக்கு எதிராக தவிர்க்க முடியாத விதத்தில் போராட்டத்துக்குக் கிளம்பும் மக்களுக்கு சமூக சமத்துவத்தையும் நீதியையும் ஜனநாயக சுதந்திரத்தினையும் கொண்ட மாற்று வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஆட்சி பற்றிய முன்நோக்கில் வழிகாட்டுவதற்கே.

விலை ரூபா 40.00



## முதலாளித்துவத்தின் மரண ஓலமும்

நான்காம் அகிலத்தின் பணிகளும்

இடைமருவு வேலைத்திட்டம்

நான்காம் அகிலத்தின் ஸ்தாபக மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

விலை ரூ. 15.00



இலங்கையில் ட்ரொட்ஸ்கிசமும் திரிபுவாதமும்

## சமசமாஜ வரலாற்று ஏட்டிலிருந்து

கீர்த்தி பாலசூரிய

விலை ரூ. 15.00



## அடிப்படைக் கொள்கைகளுக்கும், மூலோபாயத்துக்குமான 25 ஆண்டுக்கால உறுதியான போராட்டம்

விஜே டயஸ்

விலை ரூ. 10.00



## இலவசக் கல்வியை காப்பது எப்படி?

விஜே டயஸ்

விலை ரூ. 10.00



ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிரான போராட்டமும்

## பேர்ளின் உலக மகாநாட்டின் முன்நோக்கும்

விலை ரூ. 25.00



ஆகஸ்ட் சதியின் பின்னர்:

## சோவியத் யூனியன் எங்கே செல்கிறது?

விலை ரூ. 25.00



சோவியத் யூனியன் கலைக்கப்பட்டதன் பின்னர்

## மார்க்சிசத்துக்கான போராட்டமும் நான்காம் அகிலத்தின் பணிகளும்

டேவிட் நோர்த்

விலை ரூ. 5.00



## நிரந்தரப் புரட்சியும் சோசலிச அனைத்துலக வாதத்துக்கான போராட்டமும்

கீர்த்தி பாலசூரிய நினைவுப் பேருரை

டேவிட் நோர்த்

விலை ரூ. 8.00

தொழிலாளர் பாதை வெளியீடு, 90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கு, கொழும்பு 10. தொலைபேசி: 682220

www.padippakam.com



# பசறைத் தொழிலாளர்களுக்கு எதிரான அடக்குமுறை உக்கிரம்

4ம் பக்கத் தொடர்ச்சி



பொலிஸ் துப்பாக்கி சூட்டினால் இரண்டு கால்களிலும் படுகாயம் அடைந்த தோட்டத் தலைவர் சந்தனம் அந்தனிசுவாமி

இருப்பதாகத் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

அவரைப் பார்ப்பதற்கு ஒரு நாளைக்கு ஒருவருக்கு ஐந்து நிமிட காலம் மட்டுமே வழங்கப்படுகின்றது. இதற்கு முன்னர் இவர் பதுளை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்த சமயத்திலும் காயமடைந்த கால்களுக்கு விலங்கு போடப்பட்டு கட்டிலுடன் கட்டப்பட்டு இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அங்கு அவரின் உதவிக்கு அவரின் சகோதரர் தங்கி நிற்கவும் பொலிஸ் இடமளிக்கவில்லை. சிறைச்சாலையில் இன்று அந்தோனிசுவாமி தடுத்து வைக்கப்பட்டுள்ளது அதைவிடக் கேவலமான நிலைமையின் கீழாகும் எனச் சக தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

தோட்ட அதிகாரிகள் இந்தச் சம்பவத்துக்கு மத்தியில் தேயிலை பக்டரியைக் ஹேறாப்டனுக்கு கொண்டு சென்றுள்ளனர். தொழிலாளர்களின் பலத்த எதிாப்புக் காரணமாக இந்த தேயிலைப் பக்டரியை இடம் மாற்றும் நடவடிக்கையைத் தற்காலிகமாக நிறுத்திவைத்திருந்த நிர்வாகிகள் தோட்ட வேலை நிறுத்தத்தைக் காட்டிக்கொடுக்க தொழிற்சங்கத் தலைவர்கள் இழைத்த துரோகத்தைத் தொடர்ந்து உஜார் அடைந்துள்ளனர். இதற்கு அரச அடக்குமுறையும் துணைபோகின்றது.

தீவைப்பு சம்பவத்தைச் சாட்டாக வைத்து பதுளை அரசாங்க அதிபர் பசறைத் தோட்டத்தில் அங்கவீனராக உள்ள சின்னையா இராமநாதனுக்கு ஜனசவிய மூலம் கிடைத்துவந்த ரூபா.500 கொடுப்பனவை சுடச்சுட வெட்டியுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்த நிலைமையின் கீழ் இ.தொ.கா.கைது செய்யப்பட்டுள்ள தொழிலாளர்களின் சார்பில் சட்டத்தரணிகளை ஆஜர் செய்து தொழிலாளர்களை விடுதலை செய்யும் முயற்சியை ஒழுங்கு செய்வதில் இருந்து தலைதப்பிக் கொண்டுள்ளது. ஏனைய தொழிற்சங்கங்களின் நிலைமையும் இதுவே.

இதற்கிடையே நவசமசமாஜக் கட்சியும் அதனுடன் அணிதிரண்டு கொண்டுள்ள ஜே.வீ.பி.உட்பட்ட குழுக்களும் "தொழிலாளர்கள் முதலாளிகளுக்கு நல்ல பாடம் படிப்பித்துள்ளனர்" என்ற கதையைக் கட்டவிழ்த்துவிட்டு. தொழிலாளர்களுக்கு கயிறுவிடும் பிற்போக்கு பிரச்சாரத்திற்கு பசறை சம்பவத்தைப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர். தோட்ட முகாமையாளரின் வீட்டுக்கு தீயிட்டது தாமில்லை என்பதை தொழிலாளர்கள் திட்டவட்டமாகக் கூறிக் கொண்டுள்ள ஒரு நிலையிலும் நவசமசமாஜக் கட்சியும் ஜே.வீ.பி.யும் ஐக்கிய சோசலிசக் கட்சியும் தியச வட்டமும் இந்த ஆத்திரமூட்டும் குண்டர் நடவடிக்கைகளுடன் தொழிலாளர்களை கட்டிப்போடவும் அடக்குமுறைக்குள் தள்ளவும் தமக்கு அவசியம் இருந்து கொண்டுள்ளதைக் காட்டிக் கொண்டுள்ளனர்.

அரசினதும் குண்டர் தாக்குதல்களினதும் ஊடாக தொழிலாளர்களைக் கிலியடையச் செய்து நசுக்குவதும் அதன் மூலம் தோட்டக் கம்பனிகள் தமது காட்டுமிராண்டி சுரண்டலை நடாத்துவதும் இலக்காக இருந்து கொண்டுள்ளது.இது தோட்டங்களில் இந்நாட்களில் இடம்பெறும் தினசரிச் சம்பவங்கள் மூலம் ஊர்சிதமாகி வருகின்றது. ஹப்புகஸ்தன்ன தோட்டக் கம்பனிக்குச் சொந்தமான பசறைத் தோட்டத்தில் தொழிலாளர்களுக்கு எதிராக இடம்பெறும் அரச அடக்குமுறையும் அதே கம்பனிக்குச் சொந்தமான இரத்தினபுரி வேவல்வத்தைத் தொழிலாளர்களுக்கு எதிரான இனவாத தாக்குதல்களும் தற்செயலானவை அல்ல.

தடுத்து வைக்கப்பட்டுள்ள சகல தொழிலாளர்களையும் நிபந்தனையின்றி விடுதலை செய்யும்படி பிரச்சாரம் செய்யுமாறு சோசலிச சமத்துவக் கட்சி தொழிலாளர்கள் ஒடுக்கப்படும் மக்களிடம் வேண்டுகின்றது. சோ.ச.க.இந்த வேண்டுகோளை விடுப்பது தொழிலாளர்கள் இ.தொ.கா.வினாலும் மற்றும் தொழிற்சங்க அமைப்புக்களாலும் கைவிடப்பட்டுள்ள ஒரு நிலைமையிலுமாகும். தமது தொழிற்சங்க உயர் அதிகாரிகளைக் கைது செய்தால் பொது வேலைநிறுத்தத்தில் இறங்குவோம் என இ.தொ.கா.தலைமை முடிவு செய்துள்ளதாகக் கூறும் வதந்திகள் சில பத்திரிகைகள் மூலம் பரப்பப்பட்டு இருந்தன. தொழிலாளர் பாதை இ.தொ.கா. தலைமைப்பீடத்திடம் அதைப்பற்றி விசாரித்த போது அவர்கள் "அத்தகைய எந்த விதமான தீர்மானமும் இல்லை" எனத் தெரிவித்தனர். இந்த தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் தொழிலாளர்களை அரச ஒடுக்குமுறைக்கு பலியாக்கிவிட்டு அரசாங்கத்துடன் சுகபோகம் நடாத்துகின்றனர்.

# விடுதலைப் புலிகளின் தலைவர் சிறீலங்கா அரசாங்கத்துடன் புதிய பேச்சுவார்த்தைக்கு அழைப்பு

3ம் பக்கத் தொடர்ச்சி

தொடக்கம் பத்திரிகையாளர்கள் வரையும் சகலரும் யுத்தத்தை உக்கிரமாக்கும்படியே கோருகின்றனர்."

இது பொய்யாகும். இது பொய்யானது என்பதை பிரபாகரன் அறிவார். கடந்த கோடைக் காலத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பின் அதிகாரிகள் கடந்த ஜூலை ஆகஸ்டு மாதங்களில் விடுதலைப் புலிகளின் அதிகாரிகள் தமது ஆட்சிக்குட்பட்ட வன்னிப் பகுதியில் சோசலிச சமத்துவக் கட்சியை ஒடுக்கித் தள்ளி யுத்தத்தை எதர்த்தும் சிறீலங்கா ஈழம் சோசலிச குடியரசுக்காகவும் சிங்கள தமிழ் மக்களின் ஒன்றிணைந்த போராட்ட முன்னோக்கின் அடிப்படையில் போராடி வந்த சோ.ச.க.வின் நான்கு தமிழ் அங்கத்தவர்களை கைது செய்தது. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதியான சோசலிச சமத்துக் கட்சி கடந்த 15 வருடங்களாக இலங்கை அரசாங்கம் நடாத்திவரும் தமிழர் எதிர்ப்பு யுத்தத்துக்கு எதிராக சகல சிறீலங்கா பாதுகாப்பு படைகளையும் வடக்கு கிழக்கில் இருந்து உடனடியாக வாபஸ் பெறும்படி உறுதிமிக்க போராட்டத்தை நடாத்தி வந்துள்ளது.

இப்போது சோ.ச.க.போராட்டம் பொதுமக்கள் இயக்கத்துடன் இணைந்து கொள்வது ஆரம்பமாகியுள்ளது. தெற்கில் தொழிலாளர்கள் தமது அதிகாரத்துவ தலைவர்களுக்கு எதிராக அதிகரித்த விதத்தில் செயற்படுவதன் மூலம் அரசாங்கத்தின் யுத்த நடவடிக்கைகளுக்கு தடை இல்லாத விதத்தில் செயல்பட வேண்டும் என்ற கோரிக்கையை நிராகரித்து போராட்டத்தில் இறங்கி வருகின்றார்கள்.

கடந்த அக்டோபரில் சிங்களவர்களை நூற்றுக்கு 99.5 வீதமாகக் கொண்ட இடங்களில் 2000 சிங்களக் குடும்பத்தவரிடையே நடாத்தப்பட்ட கொழும்பு பல்கலைக்கழகத்தின் மானிடவியல், சமூகவியல் துறை கருத்துக்கணிப்பில் 77 வீதத்தினர் யுத்தத்தினை எதிர்த்துள்ளனர்.

எழுச்சிகண்டு வரும் யுத்த எதிர்ப்பை நூற்றுக்கு 10 வீதமான அரசாங்கப் படையாட்கள் இலங்கை இராணுவத்தில் இருந்து ஓட்டம் எடுத்துள்ளமை எடுத்துக் காட்டுகின்றது. கடந்த மூன்று வருடங்களுள் 15000 படையாட்கள் இராணுவத்தை விட்டு வெளியேறியுள்ளனர். யுத்தத்தை எதிர்த்து சிங்கள தமிழ் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் ஐக்கியப்படுத்தும் எந்த ஒரு போராட்டத்தையும் பிரபாகரனும் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமையும் எதிர்க்கின்றது.

சிங்கள மக்கள் தமிழ் மக்களை ஒடுக்குவதில் ஒன்றுபட்டு நிற்கின்றார்கள் என விடுதலைப் புலிகள் வலியுறுத்தக் காரணம் ஈழம் பிராந்தியத்தினுள் வர்க்கப் பிளவு முன்னணிக்கு வருவதைத் தடுக்கவும் சிங்கள தமிழ் தொழிலாளர்களும் விவசாயிகளும் தென்மாகாணங்களின் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுடன் சேர்ந்து தமது பொது வர்க்க அவசியங்களை தேடிக் கொள்வதைத் தவிர்க்கவுமேயாகும். இது வெறுமனே சிறிய முதலாளித்துவ அரசின் வரம்பினுள் தமக்கு சிறப்பு வசதிவாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள விடுதலைப் புலிகளைப் பயன்படுத்த எண்ணும் தமிழ் முதலாளி வர்க்கத்திற்கு மட்டுமன்றி சிங்கள முதலாளி வர்க்கத்துக்கும் வாய்ப்புக்களைக் கொண்டது.

சோசலிச சமத்துவக் கட்சியும் அதன் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் போராடி ஸ்தாபிதம் செய்த அரசியல் நிலைப்பாட்டின் பக்கம் தீவின் பொதுமக்களின் உணர்வுகள் மெதுவாக ஆனால் உறுதியாக நகர்ந்து கொண்டுள்ளது. தமிழ் தேசிய இனத்தின் தேசிய ஒடுக்குமுறையை அடியோடு கிள்ளி எறிவதும் தீவின் அனைத்து தேசிய, இனக்குழு, மதப் பிரிவினருக்கும் இடையே ஜனநாயகம் , சமத்துவத்தின் அடிப்படையில்சகவாழ்வுக்கான உறவுகளை ஸ்தாபதம் செய்வதும் சிங்கள தமிழ் முதலாளித்துவக் கட்சிகளிடையேயான பேரம் பேசல் மூலம் அல்ல; சிறீலங்கா ஈழம் ஐக்கிய சோசலிச குடியரசு ஒன்றியத்தை ஸ்தாபிதம் செய்ய நடாத்தும் போராட்டத்தின் மூலமேயாகும்.

# ஈராக்கின் மீது அமெரிக்க-பிரித்தானிய ஆக்கிரமிப்பு

1ம் பக்கத் தொடர்ச்சி

ஈராக்குக்கு எதிரான விமானத் தாக்குதல் ஆரம்பமானதோடு இந்த விவாதமும் வாக்கெடுப்பும் ஒத்திவைக்கப்படுவதாக காங்கிரஸ் சபை அறிவித்தது. அதற்குப் பதிலாக அமெரிக்க இராணுவ நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவிக்கும் பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள முடிவுசெய்ததாக காங்கிரஸ் அறிவித்தது.

1998 பெப்பிரவரியில் லெவின்ஸ்கி சம்பவம் தொடர்பாக கிளின்டனுக்கு எதிரான பாலுறவு குற்றச்சாட்டு எழுந்ததன் பின்னர் அவரை இராஜினாமாச் செய்யும்படி நெருக்குவதைத் தவிர்க்கும் நோக்குடன் கிளின்டன் இராணுவ நடவடிக்கையில் இறங்கினார்.ஆகஸ்டு மாதத்தில் கெனத் ஸ்டாரின் சுயாதீன சபையினால் கூட்டப்பட்ட கிராண்ட் ஜூரியின் முடிவு பிரசுரிக்கப்படுவதற்கு மூன்று தினங்களுக்கு முன்னர் கிளின்டன் சூடானுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் குரூஸ் ஏவுகணைத் தாக்குதல்களில் ஈடுபட்டார். இந்த ஆண்டு டிசம்பர் 16ம் திகதி வெள்ளை மாளிகையில் அரசியல் நெருக்கடி எல்லை தாண்டிச் சென்றிருந்தது.

இதற்கு முந்திய தடவை நவம்பர் 15ம் திகதி கிளின்டன் ஈராக்குக்கு எதிரான யுத்த தயாரிப்புக்கள் செய்யப்பட்டு பீ.52 குண்டுவீச்சு விமானங்கள் பாக்தாத் வானவெளியில் நுழைந்து ஈராக்குடன் மோதுதலில் ஈடுபட்டது காங்கிரஸ் சபையில் குடியரசுக் கட்சிக்காரார்கள் கிளின்டனுக்கு எதிரான பிரச்சாரத்தினை பரவலாக்கிய நிலையிலாகும்.

அத்தோடு குடியரசுக் கட்சி செனட்டர்கள் அமெரிக்க அரசாங்கத்துக்கு வெளிவெளியாக கூறியது என்னவெனில் ஈராக் ஜனாதிபதி சதாம் ஹூசேனைக் கொலைசெய்து, அவரின் ஆட்சியை தூக்கி வீசி, அமெரிக்க ஆளுமையை அங்கீகரிக்கும் ஒரு ஆட்சியாளரை அங்கு நிலைநிறுத்த வேண்டும் என்பதாகும். கிளின்டன் தான் முகம் கொடுத்துள்ள அரசியல் நெருக்கடியில் இருந்து மக்களின் கவனத்தை திசைதிருப்பும் பொருட்டே ஈராக்குக்கு எதிரான விமானத் தாக்குதலில் ஈடுபட்டான் என்பதில் சந்தேகம் இல்லை.

ஈராக்குக்கு எதிரான ஆக்கிரமிப்பின் பாதை கிளின்டனின் அரசியல் உபாயத்தின் வழி அல்ல. அது உலகச் சந்தையில் எண்ணெய் வளங்களை கூறுபோட்டுக் கொள்ளும் முயற்சியில் ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு இடையேயான ஒரு கசப்பான போராட்டமாகத் தலைநீட்டியுள்ளது. பீ.52 குண்டுவீச்சு விமானத் தாக்குதல்களும் குரூஸ் ஏவுகணை தாக்குதல்களும் உலகின் எந்த ஒரு பாகத்திற்கும் இடம்பெறக் கூடியது. இந்த அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வெறிபிடித்த நம்பிக்கை மீண்டும் ஒரு தடவை உலக சமாதானத்துக்கு ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது.

படிப்பகம்

## சிலாபம் நகர சபை தொழிலாளர் ஐவர் வேலைநீக்கம்

சிலாபம் நகரசபையின் ஐந்து நிரந்தரத் தொழிலாளர்களின் சேவை கடந்த ஜூலையில் இருந்து நகரசபை நிர்வாகத்தினால் நிறுத்தப்பட்டுள்ளது. போலிக் கல்வித் தராதரப் பத்திரங்களை சமர்ப்பித்தனர் என்ற குற்றச் சாட்டின் பேரில் டபிள்யூ.லலித் பெர்னாந்து, எஸ்.செல்லமுத்து, கே.கிருஷ்ணன், டக்ளஸ் பொன்சேகா, ஆர்.மாலனி கமல் ஆகியோர் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் 8 ஆண்டு தொடக்கம் 13 ஆண்டுகள் வரை இங்கு சேவை புரிந்துள்ளனர்.

தொழிலாளர்களின் கூற்றுப்படி இந்த நகரசபையில் சேவைக்கு ஆட்திரட்டியபோது கல்வித் தராதரம் கேட்கப்பட்டு இருக்கவில்லை. ஆனால் இப்போது இத்தனை ஆண்டுகள் சேவையின் பின்னர் கல்வித் தகுதியை சமர்ப்பிக்கும்படி கேட்டு கடிதம் அனுப்பப்பட்டது. அவற்றை சமர்ப்பித்ததைத் தொடர்ந்து அவை போலிக் கல்வித் தராதரப் பத்திரங்கள் எனக் குற்றம் சாட்டி தொழிலாளர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இந்தக் கல்வித் தராதரப் பத்திரங்களில் அவை வழங்கப்பட்ட திகதி குறிப்பிடப்படாததும் அம்பாறை பாடசாலையில் இருந்து 3 நாட்களுக்குள் துரித கதியில் அவை கிடைத்ததையிட்டும் சந்தேகம் காட்டி இந்த வேலைநீக்கம் இடம்பெற்றுள்ளது.

தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்யவும் அவர்களின் உரிமைகள் மீது தாக்குதல் நடாத்தவும் நிர்வாகத்தின் கையாளாக முன்னணியில் நிற்பவர் தலைமை லிகிதர் ஆர்.எம்.பெர்னாந்து எனத் தொழிலாளர்கள் குற்றம் சாட்டினர்.

தொழிலாளர்களை சேவையில் நிரந்தரமாக்குதல், சம்பளப் பாக்கிகளை வழங்குதல் போன்ற பிரச்சாரங்களில் முன்னணியில் நின்ற நடவடிக்கைக் குழுவின் தொழிலாளர்களே இந்த நிர்வாகத்தின் வேட்டைக்கு இலக்காகி உள்ளனர். சோசலிச சமத்துவக் கட்சியின் ஆதரவாளரான வேலாயுதன் தனது சம்பளப் பாக்கியை அறவிட நகரசபை அலுவலகத்திற்குச் சென்றபோது இந்த தலைமை லிகிதர் கல்வித் தகுதிப்பத்திரம் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இதனால் தாம் சேவையில் இருந்து நீக்கப்படும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக வேலாயுதன் தொழிலாளர் பாதையிடம் தெரிவித்தார்.

தலைமை லிகிதர் இந்த இலட்சணத்தில் நடைமுறைப்படுத்துவது நகரசபையின் திட்டத்தையேயாகும். தொழிலாளர்கள் கம்பனியிடம் ஒப்படைத்து பஞ்சிக் காட் முறையை அமுல் செய்யப் போவதாக சிலாபம் நகரசபைத் தலைவர் தெரிவித்துள்ளார். நகர சபைகளின் பல்வேறு துறைகளையும் தனியாருக்கு விற்றுத்தள்ளும் நடவடிக்கைகள் இந்நாட்டின் பல்வேறு இடங்களிலும் இடம்பெற்று வருகின்றன. இது அதற்கான ஒரு தயாரிப்பின் முதல் நடவடிக்கையாகும். இந்த ஒடுக்குமுறை நடவடிக்கைக்கு எதிராக தொழிலாளர்களிடையே தலைதூக்கக் கூடிய எதிர்ப்பை நசுக்கும் நடவடிக்கையில் ஆளும் வர்க்கம் ஈடுபட்டுள்ளது.

## தர்காடவுன் சின்வேர்ல்ட் பெண் தொழிலாளி மரணம்

அளுத்கமை தர்காடவுன் சின்வேர்ல்ட் லங்கா காமன்ட்ஸ் தொழிற்சாலையினுள் விஷம் உடலில் கலந்ததன் காரணமாக அஷினா ஷிரோஷி என்ற 21 வயது பெண் தொழிலாளி செப்டம்பர் 23ம் திகதி களுத்துறை ஆதார வைத்தியசாலையில் மரணமானார்.

கடந்த ஆகஸ்ட் 28ம் திகதி சின்வேர்ல்ட் லங்கா கம்பனியில் சேவை செய்த சுமார் 300 தொழிலாளர்கள் விஷம் உடலில் கலந்ததன் காரணமாக ஆபத்துக்குள்ளாகினர். இதில் இருந்து 2நாட்களின் பின்னர் மேலும் 66 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இறந்த தொழிலாளியின் சடலத்தில் ஒரு பகுதியை மரண விசாரணை அதிகாரி அரசாங்க ஆய்வாளருக்கு அனுப்பிவைக்க உத்தரவிட்டபோதிலும் அதன் முடிவுகள் இன்னமும் வெளியாகவில்லை.

அஷினா ஷிரோஷியின் பெற்றோர்களான கே.ஆரியவதி, ஏ.கே.ஜே.டொன்சாந்தவின் கூற்றின்படி அவர் சின்வேர்ல்ட் லங்கா கம்பனியில் முதன்முதலாக நோய்வாய்ப்பட்ட இருவர்களுள் ஒருவராவார்.



சோ.ச.க.வின் முன்னோடியான பு.க.க.வின் அங்கத்தவராக விளங்கிய ஆர்.ஏ.பிட்டவெல ஜே.வி.பி.பாசிஸ்டுகளால் படுகொலை செய்யப்பட்டதன் 10வது நினைவுதினக் கூட்டம் ஹங்குன்னாவையில் உள்ள தோழர் பிட்டவெலவின் நினைவுத் தூபிக்கு அருகில் இடம்பெற்றது. சோ.ச.க.அங்கத்தவர்கள் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தும் கூட்டம்.



சோ.ச.க.வின் ஜனநாயக உரிமைகள் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகுவதை எதிர்த்து சோ.ச.க.அனுராதபுரத்தில் நடாத்திய கூட்டம்

**சோசலிச சமத்துவக் கட்சி மாத இதழ்**




சந்தா (தபால் கட்டணம் உட்பட)

| | |
|---|---|
| இதழ் 3 | ரூ.27 |
| இதழ் 6 | ரூ.54 |
| இதழ் 12 | ரூ.108 |
| இதழ் 24 | ரூ.216 |

விபரங்களுக்கு:
தொழிலாளர் பாதை
முகாமையாளர்,
90, 1வது மாளிகாகந்த
ஒழுங்கை, மருதானை,
கொழும்பு 10
தொ.பே. 682220

**சந்தாதாரர் ஆகுங்கள்**

## சங்கானையில் இராணுவத் தேடுதல்

அக்டோபர் 3ம் திகதி சங்கானை பிரதேச செயலாளர் நிர்வாகத்துக்கு உட்பட்ட கிராமங்களை சுற்றிவளைத்த இராணுவத்தினர் 5000க்கும் அதிகமான மக்களைச் சோதனை செய்துள்ளனர். இந்தச் சுற்றிவளைப்புக்கு பனிப்புலம், பண்ணாகம், வடலியடைப்பு, சுழிபுரம், சித்தங்கேணி ஆகிய கிராமங்கள் உள்ளாகின. வீடுகள் சோதனையிடப்பட்ட பின்னர் 5000க்கும் அதிகமான மக்களை சாலையடி அமெரிக்கன் மிஷன் பாடசாலைக்கு வரும்படி இராணுவம் உத்தரவிட்டது. இந்த இராணுவத் தேடுதல் முற்றுப் பெறும்வரை இந்த முழுப் பிராந்தியத்திலும் வாழ்க்கை நடவடிக்கைகள் ஸ்தம்பித்துப் போயின. இராணுவத்தினர் வழங்கியுள்ள விசேட அடையாள அட்டை சகலர் வசமும் இருக்க வேண்டும். இது இல்லாது போனால் அது பெரும் குற்றமாகக் கொள்ளப்பட்டது. சோதனைகளின் பின்னர் நூற்றுக்கும் அதிகமானவர்கள் மேல் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டனர். இந்த தேடுதலுக்கு உள்ளான மக்கள் நிவிரச இராணுவ நடவடிக்கையின் போது யாழ்ப்பாணத்தில் இருந்து வன்னிக்கு இடம்பெயர்ந்து சென்று அங்கிருந்து மீண்டும் இங்கு திரும்பி வந்துள்ளவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## சோசலிச சமத்துவக் கட்சியில் சேருங்கள்

பெயர் . . . . . . . . . . . . . . . . . . . .

முகவரி . . . . . . . . . . . . . . . . . . . .

கையொப்பம் . . . . . . . . . . திகதி . . . . . . .

இக் கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி

பொதுச் செயலாளர்,
சோசலிச சமத்துவக் கட்சி
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
மருதானை, கொழும்பு 10
தொ.பே. 682220

90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கை, கொழும்பு-10ல் வசிக்கும் தீபால் ஜயசேகர ஆகிய என்னால் 749 அவிசாவளை வீதி வெல்லம்பிட்டியில் உள்ள லஸ்சன அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

www.padippakam.com